

கல்கி

KALKI 24-2-80 90 [illegible]

சிறு வயதில் உங்களுக்குப் பல்வலி வந்தபோது பாட்டி
கிராம்புத் தைலம் தடவிக் குணப்படுத்தினரோ நினைவிருக்கிறதா?
உங்கள் பல் டாக்டர் இன்று கூட அதை உபயோகிக்கிறார்!

இதோ
புதிய ப்ராமிஸ்

காலங்காலமாகப் பயன்பட்டுவரும்
கிராம்புத் தைலம் கொண்ட இணையற்ற டூத்பேஸ்ட்



பல்சாரா
நலமான வாழ்க்கைக்கு
நவீனமான வசதிகள்

கிராம்புத்தைலம் கொண்ட புதிய ப்ராமிஸ்
அளிக்கும் நன்மையைப் பாருங்கள்:

1. பற்சிதைவி லிருந்து பாதுகாக்கிறது.



2. வாய்க்குப் புத்துணர்ச்சி தருகிறது, துர்நாற்றத்தை அகற்றுகிறது



ஆரோக்கியமான பற்கள், ஈறுகள் மற்றும்
புத்துணர்ச்சிமிக்க மூச்சுக்கு ப்ராமிஸ்

Kalki Shopping Page


பார்த்தாஸ்
டெக்ஸ்டைல்ஸ்

உங்கள் ஜவுளி தேவைகளுக்கு
தென்னகத்தின் தலைசிறந்த
ஜவுளி ஸ்தாபனம்

பார்த்தாஸ்
நாகர்கோவில்

கோட்டையம், எர்ணாகுளம்,
சங்கனாச்சேரி, ஆற்றிங்கல்,
காயங்குளம் & K.L.R. பாம்பே

Mgd. by
M. Srinivasa Reddiar



2 பேண்டு
புல்லெட்
நெல்கோ
டாடா தயாரிப்பு

Available at :

ELITE RADIOS
17, Ranganathan Street,
T. Nagar, Madras-600 017
Ph: 445649

ARUNA & CO
340, T. H. Road,
Madras-600 021
Ph: 553644 – 552728

1, Narasingapuram Street,
Madras-600 002 Ph: 844251


SWITO SALES CORPORATION
357, Mint Street,
Madras-600 001 Ph: 38520

VAUHINI RADIO & ELECTRICALS
9, Woods Road,
(Near Odeon Theatre)
Madras-600 002 Ph: 88029

361, Mint Street,
(Near Sowcarpet Post Office)
Madras-600 001 Ph: 38785

RADIO & ALLIED ENGINEERING CO
85, Mount Road,
Madras-600 002, Ph: 810237

ஸீலிங் ஃபேன்களில்
சிறந்தது
நான்கு வித குளிர்ச்சி மிகு
வண்ணங்களில் கிடைக்கும்
ஒரே ஃபேன்



வெஸ்டெர்லி

அதிகபட்ச காற்றை அளிக்கவல்லது. தனித்தன்மை வாய்ந்த சோக ரெகுலேட்டர் 30% வரை மின்சாரச் செலவை மிச்சப்படுத்துகிறது. கவர்ச்சிமிகு வடிவமைப்புடன் நியாயமான விலையில் கிடைக்கிறது.

கவர்ச்சிக்கும் சிக்கனத்திற்கும்
வெஸ்டெர்லி

national 749

சினி ஸ்டில்லும் சிந்தனையும்





"தொட்டுப் பேசலாமா?"

சுதாகர்

நடிகர் சுதாகரிடம் ''பேஷக்'' என்ற ஹிந்திப் படத்தில் வரும் மிதுன் சக்ரவர்த்தி-யோகிதாபாலி ஸ்டில்லைக் காண்பித்த போது....

முதலில் எனக்குத் தெரிவது என் மூக்குத்தான். காரணம் அது கொஞ்சம் நீளம். முதல் நாள் படப்பிடிப்பு மட்டுமல்ல. இப்பொழுது கூட ரயில் ராதிகா மூக்கைப் பார்த்துக் கிண்டல் செய்வதுண்டு. ஒரு காட்சியில் நானும் ராதிகாவும் மிக நெருக்கமாக நடிக்க வேண்டும். உதட்டோடு உதடு வைப்பது போல். இக்காட்சியில் மூக்கு தான் முதலில் படுகிறது. இம்மாதிரி நெருக்கமான காட்சிகளில் நான் சமாளிக்கும் விதமே தனிதான். எப்படி என்கிறீர்களா? என் படங்களைப் பார்த்துத் தெரிந்துகொள்ளுங்கள்.

தோள் மேல் கையிருப்பதைப் பார்த்தவுடன் என் கல்லூரி நாட்கள் என் நினைவுக்கு வருகின்றன. நான் கல்லூரியிலேயே ஒரு பாப்புலர் பாய். ஒரு நாள் என் நண்பர்கள் எல்லோரும் சேர்ந்து எனக்கு எதற்குமே தைரியம் கிடையாது என்று கேலி செய்ய ஆரம்பித்தார்கள். எனக்குத் தைரியம் இருக்கிறது என்று நிரூபித்துக் காண்பிக்க விரும்பினேன். அதற்கு நான் தேர்ந்தெடுத்த வழி எங்கள் கல்லூரியில் உள்ள ஒரு பெண்ணைத் தொட்டுப் பேச வேண்டும் என்பதுதான். எந்தவிதப் பிரச்னைகளுக்குமே வராதவர் யுவாஞ்சலி என்ற பெண். நாள் நட்சத்திரம் எல்லாம் குறிக்கப்பட்டு விட்டன, பேசுவதற்கு (தொட்டுப் பேசுவதற்கு!)

குறிப்பிட்ட நாளன்று தமது தோழிகளுடன் பந்து விளையாடிக் கொண்டிருந்தார் யுவாஞ்சலி. உள்ளூற எனக்குப் பதைப்புத்தான். என்றாலும் சவாலில் தோற்க விரும்பவில்லை நான். அதனால் அந்தப் பெண்ணை நோக்கி நடக்க ஆரம்பித்தேன். நேராகச் சென்று முதலில் பேசலாமா அல்லது தொட்டு விடலாமா என்று ஒரு பிரச்னை. இல்லை முதலில் தொட்டுவிட்டுப் பிறகு பேசலாமா என்று ஒரு சிந்தனை. கால்கள் என்னவோ நடந்து கொண்டிருந்தன. படத்தில் உள்ளது போல் முதலில் தோள் மீது கை வைத்துப் பேச ஆரம்பித்தேன்.

''என்ன!'' என்று ஓர் அதட்டல் என் பின்னாலிருந்து கேட்டது. திரும்பிப் பார்த்தேன். பி.டி. மாஸ்டர் நின்று கொண்டிருந்தார்!

இதன் காரணமாகப் பத்து நாட்கள் சஸ்பெண்ட் செய்யப்பட்டேன். நான் வராத ஐந்து நாட்களில் நான் வருவேன் என்று எதிர்பார்த்து யுவாஞ்சலி கல்லூரிக்கு வந்தார் போலும். அடுத்த ஐந்து நாட்கள் வரவில்லை எனக்காக. பத்தாம் நாள் நான் வந்தவுடன் யுவாஞ்சலியே என்னை வந்து சந்தித்தார்.

''நீங்கள் என் தோள்மீது கை வைத்த போது நான் உண்மையிலேயே அதை விரும்பினேன். பி. டி. மாஸ்டர் இருந்ததால் ஒன்றும் சொல்ல முடியவில்லை. அதனால் தான் நிரந்தர மௌனம்'' என்றார். பெண்களின் மனம் எவ்வளவு ஆழமானது என்பதை இந்நிகழ்ச்சியின் மூலம் நான் தெரிந்து கொண்டேன்.

''சுவரில்லாத சித்திரங்கள்''. இப்படத்தில் எனக்கு நாயகி சுமதி. உயரம் நாலடி ஏதோ சில அங்குலங்கள் அதிகமே தவிர வேறில்லை. நாங்கள் இருவரும் நெருங்கி நடிக்க ஒரே இடத்தில் காமிராவை வைத்துக்கொண்டு எவ்வளவுதான் முயன்றாலும் சரியாக வரவில்லை. — ஒன்று நான் அதிக உயரமாக இருக்கிறேன், சுமதி குள்ளமாக இருக்கிறார். பல காட்சிகளில் நான் வளைந்து கொடுத்தோ இல்லை அவர் ஸ்டூலில் நின்றோ எடுத்தோம். இப்படி நான் நடிகைகளைப் பற்றிச் சொல்ல ஆரம்பித்தால் பிரச்னை வரும். மூச்....

ஆயிரம் துப்பாக்கி முனைகளைவிட பெண்ணின் நாக்குக்கு பலம் அதிகம்.

-நெப்போலியன்

லட்சுமி இனிமையான பெயர் மட்டுமல்ல, எனக்கு நினைவில் நிற்கும் பெயர். பத்தாம் வகுப்பில் என்னுடன் படித்தவர். எனக்கு அப்பொழுது மட்டுமல்ல எப்பொழுதுமே கணக்கு என்றால் அலர்ஜி. எல்லாப் பாடங்களிலும் நிறைய மார்க்குகள் வாங்குவேன். ஆனால் கணக்கிலோ பாஸ் மார்க்தான் வரும். கணக்குப் பரீட்சையன்று சீக்கிரமாகவே விடைகளை யெல்லாம் எழுதிக் கொடுத்து விட்டு வெளியே சென்றுவிட்டார் லட்சுமி. வாசலுக்குப் பக்கத்தில்தான் என் இருக்கை. ஒவ்வொரு விடையாக எனக்கு மட்டும் கேட்பது போல் அவர் மெல்லச் சொல்ல நான் எழுதிக் கொடுத்துவிட்டு வெளியேறினேன்.


லட்சுமியைத் தேடினேன். மறுநாள்தான் தென்பட்டார். நன்றிகூற, அதுவே தொடர் நட்பாக மாறியது. அப்பொழுதுதான் எனக்கு ஒன்று தெரிய வந்தது. ரொம்ப நாட்களாகவே எனது வீட்டாருக்கும் அவரது வீட்டாருக்கும் தகராறு.

ஒரு நாள் லட்சுமி என்னிடம் வந்தார். ''நீங்கள் வேறு ஊருக்கு மாற்றலாகிப் போகிறீர்களாமே?'' என்று கேட்டார். எங்கள் வீட்டில் உள்ளவர்கள் மட்டுமே அறிந்த இந்த ரகசியம் இவருக்கு எப்படித் தெரிந்தது என்று நான் அச்சப்பட்டேன். ''உங்கள் கையைக் காட்டுங்கள்'' என்றார். கையை நீட்டினேன். கறுப்புக் கயிறு ஒன்றை என் கையில் கட்டினார்.

கட்டிய கயிறு நான்காவது நாளே அறுந்து விட்டது. எனக்கு உண்மையிலேயே மனம் சரியில்லை. ஆனால் இன்றும் கூட ஒரு கறுப்புக் கயிறை நான் இதற்காகவே கையில் கட்டி வருகிறேன். இது பலருக்குத் தெரியாத உண்மை ரகசியம்.

அடுத்த இதழில் : **சுமித்ரா**


மௌனச் சிரிப்பு!





FOCUS

கருப்பையா



✖ கருப்பையா

1953-ல் ஓர் அரசியல் கொந்தளிப்பில் இளைஞர் காங்கிரஸைச் சேர்ந்த ஒரு வாலிபன் பட்டப்பகலில் படுகொலை செய்யப்பட்டான். பெயர் கருப்பையா பாரதி. ''கல்கி'' துணைத் தலையங்கம் எழுதினர், ''அமரன் கருப்பையா பாரதி நாமம் வாழ்க!'' என்று தலைப்பிட்டு. அந்தத் தலையங்கம் பலருக்கு மெய் சிலிர்ப்பை ஏற்படுத்தியது எனில், லக்ஷ்மி நாராயணன் என்ற ஒருவரைத் தம் பெயரையே கருப்பையா என்று மாற்றி வைத்துக் கொள்ளும் அளவுக்கு உணர்ச்சி வயப்படச் செய்தது!

தினமணியில் உதவி ஆசிரியராக உள்ள கருப்பையாவை ஒரு கட்சியுடன் முடிச்சுப் போடுவதை விட இன்றைய அரசியல் நோக்கில் ஒரு தேசியவாதி என்று வர்ணிப்பதே பொருந்தும். சிறந்த சமூகத் தொண்டர்; பொது நலப் பணிகள் பலவற்றை இழுத்துப் போட்டுக் கொண்டு செய்பவர்; நல்ல எழுத்தாளர்; காமராஜ்—பக்தவத்சலம்ஆகியோரை மதித்துப் போற்றுகிறவர். அண்மைக் காலமாக இவர் கவனம், புலால் மறுத்தல் —ஜீவ காருண்யப் பிரசாரங்களில் திரும்பியுள்ளது.

இளம் வயதிலேயே பல நாடகங்களை அரங்கேற்றியுள்ள இவருக்கு அண்மையில் கலைமாமணிப் பட்டம் கிடைத்தது.

க. சொக்கலிங்கம்

சென்னை லஸ் சர்ச் சாலையில், புதிதாக ஆரம்பமாகியுள்ளது தேவகி மருத்துவ மனை. இதன் நிர்வாக இயக்குனர் திரு க. சொக்கலிங்கம் லட்சிய நோக்கங்கள் உள்ள இளைஞர். இங்கு எல்லாவித மக்களுக்கும் அவர்கள் நிதி வசதிக்கு ஏற்றபடி அறைகள் உள்ளன; நாளைக்கு 15 ரூபாய் முதல் குளுகுளு வசதியோடு ரூ. 150- வரை அறைகள் உண்டு. வைத்தியத்துக்கு வருவோரில் பத்து சதவீதத்தினருக்கு ஏழைகளாயின் இலவசமாகவே மருத்துவ வசதி அளிக்கிறார்கள். இம் மருத்துவ மனையில் உள்ள வசதிகளைக் கேட்டால் பிரமிப்பாயிருக்கிறது.

விபத்தில் காயமடைந்தவர்களுக்காகவும் இதர அவசரத் தேவைகளுக்காகவும், மருத்துவ மனையின் ஒரு பகுதி இருபத்தி நாலு மணி நேரமும் திறந்து வைக்கப்பட்டிருக்கும். இத்துடன் எக்ஸ்ரே பிரிவும் சோதனைச் சாலையும் எப்போதும் இயங்கும்.

இந்த நிலையத்தில் மருத்துவ மாணவர்களுக்கும், மேல் படிப்பு படிக்கும் டாக்டர்களுக்கும் பெரிய மருத்துவ நிபுணர்கள் கொண்ட குழு பயிற்சி அளிக்கிறது. அவர்கள் உபயோகத்துக்கு ஒரு கருத்தரங்கு அறையும், நூலகமும் இங்கு இருக்கின்றன. குழந்தைகள் பிரிவு, எலும்பு மருத்துவப் பிரிவு, இருதயப் பிரிவு, பிளாஸ்டிக் சர்ஜரி பிரிவு முதலிய பல்வேறு பிரிவுகள் இயங்குகின்றன. நான்கு அறுவைச் சிகிச்சைக் கூடங்கள் உள்ளன.

ரொம்ப ஆபத்தான நிலையில் உள்ளோரை உன்னிப்பாகக் கவனிக்க Intensive Care Unit உள்ளது.

ஒவ்வொரு அறையிலும் 'இண்டர்காம்' வசதி உள்ளது. இதன் மூலம் நோயாளிகள் படுக்கையில் இருந்தவாறே மருத்துவர், மற்றும் தாதியருடன் பேசலாம். 'சானல்' இசைக்கும் ஏற்பாடு செய்துள்ளனர். சாந்தி தரும் சங்கீதம் ஒவ்வொரு அறையிலும் ஒலி பரப்பாகும். காலையில் சுப்ரபாதம், திருக்குறள், திருக்குரான், பைபிள் வாசகங்கள் ஒலிபரப்பப்படுகின்றன. அத்துடன் அன்றைய செய்திகளும் ஒலிபரப்பாகின்றன.

ஹைட்ரோ தெராபி எனப்படும் நீர் மருத்துவத்துக்காக ஒரு சின்ன நீச்சல் குளம் கூட இருக்கிறது. சென்னை வாசிகளுக்கு வரப்பிரசாதம், இங்கு இருபத்து நாலு மணி நேரமும் இயங்கும் மருந்துக் கடை.

ஆம்புலன்ஸ் ஒன்றும் விரைவில் வாங்க இருக்கின்றனர். நூலகம், கான்டீன் வசதி உண்டு. குழந்தைகள் பிரிவில், அவர்கள் படிப்புக்குப் பாதகம் ஏற்படாதவாறு, பள்ளிக்குப் போகாத நாட்களை ஈடுசெய்ய ஆசிரியர்கள் பாடம் சொல்லித் தருகிறார்கள்.

தகவல் தொகுப்பு: ''சிக்கி''

✖ க. சொக்கலிங்கம்





அவர்: ''பக்கத்துவீட்டுக்காரரும், எதிர் வீட்டுக்காரரும் சரியான கஞ்சப் பசங்க போலிருக்கு...''

இவர்: ''எதனாலே அப்படிச் சொல்றீங்க?''


''ஆணி அடிக்கச் சுத்தியல் கேட்டா வச்சுக்கிட்டே இல்லேன்னு சொல்றாங்க!''


இவர்: ''அப்புறம் என்ன செஞ்சீங்க?''


அவர்: ''எங்க வீட்டு சுத்தியலை யூஸ் பண்ணிக்கிட்டேன்.''

— பி. வேணுகோபால்




சூரிய கிரகணம்!
சமாதானம்
அமெரிக்கா
ரஷ்யா
தெற்கு-தென்கிழக்கு ஆசிய நாடுகள்


நமஸ்தே மாதாஜி!.. உ.பி.- பீகார் அரசுகள் எப்பொழுது கவிழும்னு சஞ்சய் சார் கிட்ட கேட்கப் போகிறோம்!
இந்திரா காந்தி
பிரதமர்
சஞ்சய் காந்தி எம்.பி
நிருபர்கள்


இ.காங்கிரஸ்-தி.மு.க.அணியினர் பேரணி நடத்தித் தம் வலிமையைக் காட்டுகிறார்கள்!
அ.இ.அ.தி.மு.க. அணியினர் பேரணி நடத்தித் தம் வலிமையைக் காட்டுகிறார்கள்!
நகரில் வழிப்பறி, கொள்ளை, கொலை நடத்தும் அணியினர் தம் வலிமையைக் காட்டி வருகிறார்கள்! எப்பொழுது பேரணி நடத்துவார்களோ?

1980 பிப்ரவரி 24
சித்தார்த்தி மாசி 12
மலர்: 38 இதழ்: 30

கல்கி

தமிழ்த்திரு நாடு தன்னைப் பெற்ற எங்கள் தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்

ஜியா

பாகிஸ்தானுக்கு அமெரிக்காவின் 400 மிலியன் டாலர் ராணுவ-பொருளாதார உதவியை 'வேர்க்கடலைக்குச் சமானம்' என்று அலட்சியப்படுத்தினார் ஜியா. இன்றைய அமெரிக்க ஜனாதிபதி, நேற்று வரை ஒரு வேர்க்கடலை விவசாயி என்பதால் இந்தக் கிண்டல்!

ருஷ்யாவின் ஆப்கன் படையெடுப்பை யொட்டி, 'காற்றுள்ள போதே தூற்றிக்கொள்' என்ற கதையாக அமெரிக்காவிடம் ஆட்டம் போடுகிறார் ஜியா. ஆசியாவில் ருஷ்யாவின் ஆக்கிரமிப்புப் போக்கைத் தடுத்து நிறுத்த அவரை விட்டால் வேறு ஆள் கிடையாது என்பது அவர் வாதம்.

அவரது இந்த ஆபத்தான வாதத்துக்கு அமெரிக்கா மசிந்து கொடுத்து விட்டால் அது இமாலயப் பகுதியிலேயே அமெரிக்கா செய்த இமாலயத் தவறாக முடியும். ஒரு ஆக்கிரமிப்புப் போக்கைத் தடுக்கப்போய் வேறு விதங்களில் ஆக்கிரமிப்பைத் தூண்டியதாகும்.

பாத்திரமறிந்து பிச்சை இடவேண்டும் என்பர். ஜியாவை நம்பமுடியாது. இதற்கு அவர் நடவடிக்கைகளே சான்று பகர்கின்றன. 'பாகிஸ்தானில் ராணுவ ஆட்சி நீடிக்காது; ஜனநாயகம் திரும்பும், தேர்தல் நடக்கும்' என்றார் ஜியா. பிறகு தேர்தலை ஒத்திப் போட்டார். மறுபடியும் 'தேர்தல் நடக்கும்' என்றார். மீண்டும் காலவரையறையின்றி ஒத்திப் போட்டிருக்கிறார்.

இன்று அமெரிக்காவிடம் 'போர்த்தளவாடங்களைத் தரப்போகிறீரா இல்லையா?' என்பது போல் தட்டிக்கேட்கும் ஜியா, சென்ற நவம்பரில் அமெரிக்கத் தூதரகம் இஸ்லாமாபாத்தில் ஆர்ப்பாட்டக் காரர்களால் கொளுத்தப் பட்ட போது நீரோ போல்தான் நிச்சலனமாய் இருந்தார்.

அணுகுண்டு பரிசோதனை நடத்தப் போவதாக பாகிஸ்தான் அறிவித்த பின்தான் அணு ஆயுதப் பரவலை விரும்பாத அமெரிக்கா, அந்நாட்டுக்கு யுத்த தளவாட உதவியை நிறுத்தியது. இப்போது ருஷ்யாவின் ஆப்கன் ஆக்கிரமிப்பை யொட்டி அமெரிக்கா தன் கொள்கையை மாற்றிக்கொள்ள முன்வர, ஜியாவும் தம் பங்குக்கு 'பாகிஸ்தான் அணு ஆயுத உற்பத்தியில் இறங்காது' என்கிறார். இதில் அமெரிக்க ஸெனடர்கள் பலருக்கே நம்பிக்கை விழவில்லை. அமெரிக்கா வழங்கும் ராணுவத் தளவாடங்கள் வடக்கே ருஷ்யாவின் ஆக்கிரமிப்பு எண்ணங்களுக்கு எதிராகத்தான் பயனாகும்; கிழக்கு முகமாகத் திரும்பாது என்பது என்ன நிச்சயம்? பாகிஸ்தானின் சரித்திரம் பேசுகிறது, 'இப்படியும் நடக்கலாம்' என்று.

நேற்று ஒன்று சொல்லி இன்று வேறு விதமாய் நடக்கும் ஜியாவை, அமெரிக்க ஸெனடர்கள், அதிகாரிகள் பலரே சந்தேகிக்கிற ஜியாவை, அமெரிக்க அரசு ஏன் நம்பவேண்டும்? நம்பி, அமெரிக்கா நேரடியாகத் தராத போர் விமானங்களை வேறு நேச நாடுகள் தரும் என்று கருதி, தன் செல்வாக்கையும் ஏன் பிரயோகிக்க வேண்டும்? இதை விட அபத்தம் வேறென்ன இருக்க முடியும்?

'ஜியாவுக்குப் போர்த்தள வாடங்களைக் கொடுத்து உதவவேண்டாம்' என்று அமெரிக்காவிடம் கூறும்போது நாம் பயத்தினால் சொல்லவில்லை. இஸ்ரேலுக்கு உதவியது போல் பிலியன் டாலர் கணக்கில் தனக்கு ராணுவத் தளவாட உதவியை அமெரிக்கா அளிக்கவேண்டும் என்று பாகிஸ்தான் ஆசைப்படலாம்; அமெரிக்காவும் ஒருவேளை தரலாம். ஆனால் அவற்றை நிர்வகிக்க இஸ்ரேலின் ஆற்றலுக்கு எங்கே போக? எனவே மனிதாபிமான நோக்கில் நாம் அமெரிக்காவுக்கு வேண்டுகோள் விடுக்கிறோமே யொழிய இங்கே யாரும் நடுங்கிச் சாகவில்லை.

ஜியாவின் ராணுவ ஆட்சியில் பாக் பொருளாதாரம் சிறிதும் முன்னேறவில்லை; லஞ்ச லாவண்யங்கள் தாம் பெருகியுள்ளன என்பதையும் அமெரிக்கா கவனிக்கவேண்டும். மக்களுக்கும் ஆட்சியிடம் அன்பு தட்டுக் கெட்டுப் போகவில்லை. வெறுப்பே வளர்ந்து வருகிறது.

பாகிஸ்தானிலேயே சர்வாதிகாரம் நிலவும் போது சுதந்திர ஆசியாவின் ரட்சகனாக அது தன்னைப் பறை சாற்றுவதை வேடிக்கை என ஒதுக்கலாம். ஆனால் அதை அமெரிக்கா நம்புமெனில் அது வேடிக்கையல்ல; விசனிக்கத் தக்க விஷயம்.



2

ஓயிவில்லில் ஊருக்கு ஒதுப்புறமாய் ஸைப்பர்ன் என்று அழைக்கப்படும் அந்த இடத்தில் உள்ள வீடுகள் எல்லாமே ரொம்ப அழகானவை. தனித்தனி வீடுகள். பஸ் போக்குவரத்து இல்லாத அமைதியான சாலைகள். இரண்டு பக்கமும் பச்சைப் புல்வெளிகள்.

ஒரு வீட்டுக்கும் இன்னொரு வீட்டுக்கும் நடுவில் வேலி, காம்பௌண்ட் என்று எதுவும் இடையாது. ஒரு வீட்டுப் புல்வெளியோடு அடுத்த வீட்டின் தோட்டம் சமர்த்தாய்ச் சினேகிதமாய் இருக்கும்.

ஒவ்வொரு வீட்டின் பின்னாலும் குழந்தைகள் விளையாட என ஊஞ்சல், சறுக்கு மரம், ஸீஸா இத்தியாதி.

சில வீடுகளில் சின்னச் சின்ன ஸ்விம்மிங் பூல்கள். வட்டமாய், கோழி முட்டை ரூபமாய், இலை மாதிரி விரிந்து கூம்பியதாய்... எம்எஸ். ப்ளூ தண்ணீர் — அதில் மிதக்கும் ராட்சஸ ரப்பர் வாத்துக்கள்,

ஹௌ ப்யூடிஃபுல்!

சனி ஞாயிறு ஆனால் ஆண்களும் பெண்களும் நீச்சல் உடைகளில் குழந்தைகளோடு தங்கள் இல்லத்து குட்டி நீச்சல் குளங்களில் நீந்திக் கும்மாளம் போடுவர். கலர் குட்டைகளில் ஈரம் சொட்டச் சொட்ட உட்கார்ந்து ஸன் பாத் எடுக்கிறேன் பேர்வழி என்று வெயிலில் காய்வர். அப்புறம் சாயங்காலம் 'பார்ப க்யூ' — கூத்து ஆரம்பிக்கும். அவரவர் வீட்டுக்குப் பின்னால் இருக்கும் காஸ் க்ரில் அடுப்பில் மாமிசத்தைச் சுட்டுப் புல்வெளியில் நிலவொளி மாதிரி விளக்கைப் போட்டுக் கொண்டு விடிய விடிய நண்பர்களோடு சாப்பிட்டுப் பேசி மகிழ்வர்.

வெளியே போகாத சில சனிக் கிழமைகளில் அக்கம் பக்கத்து வீடுகளின் கலகலப்பில் வித்யாவும் ராஜுவும் கலந்துகொள்வது உண்டுதான்.

ஸ்விம்மிங் ஸூட்டில் முதல் நாள் குளத்தில் இறங்குவதற்குள் வித்யா வெட்கப்பட்டுப் போனாள்.

''சே— அது எப்படி ராஜு? அத்தனை ஆண்கள் நடுவில் என்னாலே முடியாது; தோ....''

ராஜு சிரித்தான்.

''அந்த ஆண்களுக்கு உன்னைப் பார்க்கறது தவிர வேறே வேலையே இல்லேன்னு நினைச்சயா டார்லிங்?''

''எனக்கு வெட்கமா இருக்கு.''—

''கமான் வித்யா — எல்லாப் பெண்களும் ஸ்விம்ஸூட்லே சகஜமா இருக்கிற நாடு இது. இவாளுக்கு இன்ஹிபிஷன் கிடையாது. நீ நாணிக் கோணிக் கொண்டு ஓரமா நின்னாத்தான் உன்னைக் கவனிப்பா... பிகு பண்ணிக்காதேம்மா....''

அன்று குளத்தில் இறங்கின பிறகுதான் ராஜு சொன்னது எத்தனை நிஜம் என்று வித்யா புரிந்து கொண்டாள்.

ஒரு கண்ணாவது இவள் மேலேயோ அல்லது வேறு எந்தப் பெண்ணின் உடல் மீதோ அசிங்கமாய் மேயவே இல்லை.

ஜார்ஜெட் புடவை கட்டிக் கொண்டு, சென்னைத் தெருவில் இவள் நடந்தபோது மொய்த்த கண்களுடன் ஒப்பிட்டால் இங்கு ஒன்றுமே இல்லை.

வித்யா சுத்த சைவம்.

ராஜு அண்டை வீட்டுக்காரர்களுடன் சுட்ட மாமிசமும் இதர வகைகளும் சாப்பிட்டால் இவள் ஜூஸ் மட்டும் குடித்து விட்டு வந்து தயிர் சாதம் சாப்பிடுவாள்.

அந்தத் தெருவில் இருந்த எல்லாக் குடும்பங்களையும்விட அடுத்த வீட்டு மார்க், அவன் மனைவி டோரோத்தியிடம் வித்யாவுக்குப் பழக்கம் அதிகம்.

> பெண்ணுக்கு ஆணை விட புத்தி நான்கு மடங்கு. ஆசை எட்டு மடங்கு.
> —பர்மியப் பழமொழி

''நானெல்லாம் வயிறு முட்டச் சாப்பிடும் போது நீ மட்டும் கோலாவோ, ஜூஸோ குடிக்கிறயே, இது என்ன நியாயம்?'' என்று மார்க் சில சமயம் இவளிடம் சண்டை பிடிப்பதுண்டு.

''நான் இங்கே சாப்பிடா விட்டாலும் வீட்டுக்குப் போய்ச் சாப்பிடுகிறேனே!''

''ஓ.கே. ஸ்டேக் வேண்டாம், போர்க் வேண்டாம். வேறு ஏதாவது சாப்பிடேன்.''

வித்யா எதுவும் வேண்டாம் என்று தலை ஆட்டுவாள்; மாமிசம் சுட்ட உங்கள் அடுப்பில் ரொட்டி வாட்டிக் கொடுப்பது கூட எனக்கு வேண்டாம் என்று மனசுக்குள் நினைப்பதை வெளியில் சொல்லாமல் ''ஓ! மார்க்—எனக்குப் பசிக்கலை—விடேன் —ப்ளீஸ்' என்பாள்.

மார்க்குக்கு இன்றைக்கெல்லாம் வயசு முப்பத்தைந்து இருந்தால் அதிகம். டோரா அவனைவிட இரண்டு வயசு பெரியவள். கல்யாணம் நடந்து பன்னிரண்டு வருஷங்கள் ஆகின்றன. இரண்டு பிள்ளை. இரண்டு பெண்.

மூத்தவன் ஸ்டீவுக்குப் பதினொரு வயசு; அடுத்தவன் ராபின். ஒன்பது வயசு. ஜென்னிக்கு எட்டு, க்ளாராவுக்கு ஐந்து.

பொன்னிற முடியும், சின்னப் பையனின் சிரிப்பும், உயரமும், பருமனுமாய் மார்க்ஷோக்காய் இருப்பான்.

பிள்ளைகள் இரண்டும் அசல் அம்மாதான்.

கடைசிப் பெண் க்ளாரா அச்சு அப்பா. மூத்த மகள் ஜென்னி தலை





நாளிதழ்களை எப்படிப் படிக்க வேண்டும், செய்திகளை எவ்வாறு சிந்தித்துப் பயன் பெற வேண்டும்? என்பதைக் கூட வகுப்பில் ஒரு பாடமாக மேற்கு ஜெர்மானியப் பள்ளிகளில் கற்றுத் தருகிறார்கள்!

முடியில் மட்டும் மார்க்: அதே தகதகக்கும் தங்க முடி.

டோராவைப் பார்த்தாலே அவள் முகத்தில் 'நான் மார்க்கை விட வயசானவள்' என்று எழுதி ஒட்டிவிடுகிற மாதிரி வித்யாவுக்குத் தோன்றும்.

மெல்லிய உடம்பு, அமெரிக்கப் பெண்களிடம் சகஜமாய்க் காணப்படும் இறங்கின மார்பகங்கள். வெள்ளி நிற தலை முடி, நீலக் கண்கள், மூக்கிலும் கன்னங்களிலும் ப்ரவுன் புள்ளிகள்.

''மார்க் இவகிட்ட என்னத்தைப் பார்த்தானோ புரியலே ராஜு! அதுவும் இவ அவனைவிட இரண்டு வயசு பெரியவ வேறு! இவனுக்கு அக்கா மாதிரி இருக்கா இல்லே?''—

முதல் தடவை வித்யா இப்படி அதிசயித்துப் போனபோது, ''அவ குணம் அவனுக்குப் பிடிச்சிருக்கு. இரண்டு பேரும் எத்தனை சந்தோஷமாய்க் குடித்தனம் பண்றா பாரு. மனுஷன் நிம்மதியா இருக்கிறதுக்கு ஹாப்பி மாரிட் லைஃப் ரொம்ப முக்கியம் இல்லையா?'' என்று ராஜு பதில் சொன்னான்.

தோட்டத்துக்குத் தண்ணீர் விடுவதில் கடைக்குப் போவதில் என்று சில்லறைச் சில்லறையாய் அடுத்த வீட்டுக் குழந்தைகள் வித்யாவுக்கு உதவுவார்கள். ஒரு மணி நேர வேலைக்கு ஒரு டாலர் கூலி.

பணக்கார வீட்டுப் பிள்ளைகளைக் கூட ஒழிந்த நேரத்தில் இப்படிச் சம்பாதிக்கப் பெற்றவர்கள் தூண்டுவது ராஜுவுக்கு ரொம்பப் பிடித்த சமாசாரம்.

''லுக் அட் டோனி. டாக்டருக்குப் படிக்கிறான். அவன் அப்பா கம்பெனி ஒன்றில் டைரக்டர். இருந்தாலும், 'எனக்கு ஒழியலே டோனி — வர்ற ஞாயிறு வந்து புல் வெட்டிக் கொடுத்துட்டுப் போ'ன்னு சொன்னா வர்றான். ஒழுங்கா வேலையைப் பண்ணிட்டு அஞ்சு டாலரை வாங்கிண்டு போறான். இந்த ஊர்க் குழந்தைகளுக்குத் தன்னம்பிக்கையும், டிக்னிடி ஆஃப் லேபரும் சின்ன வயசிலேந்தே இருக்கிறதுக்கு இதெல்லாம்தான் காரணம். நம் ஊர்லே என்ன நடக்கும்? அடுத்தாத்துப் பெண்ணைக் கூப்பிட்டு, 'எங்காத்துக் குழந்தையைப் பார்த்துக்கறயா? அஞ்சு ரூபா தரேன்'னு சொன்னாப் பெத்தவ சண்டைக்கு வந்துடுவா. என் பெண் உனக்கு வேலைக்காரியா?'ம்பா. 'உன் அஞ்சு ரூபாய்க்கு நாங்க பறக்குறோமா?'ம்பா; 'குழந்தையை விட்டுட்டாவது உனக்கு என்ன சினிமா?'ம்பா... இல்லே? நம்ப அவுட் லுக் சில விஷயங்களில் மாறணும். நாடு முன்னேற இந்த உழைப்பு அவசியம்'' என்று நீளமாய் லெக்சர் அடிப்பான்.

வித்யாவின் ஃபில்டர் காப்பி, தோசை, காரம் இல்லாத தேங்காய் சட்னி; மைசூர் பாகு, மொறு மொறு ஓமப்பொடி என்றால் மார்க், அவன் குடும்பத்துக்கு ஒட்டு மொத்தமாய் ரொம்ப இஷ்டம்.

'டீ'க்கு அழைத்தால் வந்து ஒரு பிடி பிடிப்பார்கள்.

''ம் — திஸ் இஸ் லவ்லி'' என்பார்கள்.

''ஜஸ்ட் ஃபென்டாஸ்டிக்'' என்பார்கள்.

''டெலிஷியஸ்'' என்பார்கள்.

அதிலும் இந்த ஜென்னி இருக்கிறாளே, வித்யாவின் சாம்பார், வத்தக் குழம்பு, கட்டித் தயிர்கூடப் பிடிக்கும்.

தினம் இங்கே ஒரு தரம் எட்டிப் பார்த்து 'வாட்ஸ் ஸ்பெஷல் டுடே?' என்று கேட்டுச் சமையலை ருசி பார்க்காமல் போக மாட்டாள்.

அவள் பள்ளியில் ஃபேன்ஸி ட்ரெஸ் காம்படிஷன் நடந்தபோது வித்யா அவளுக்கு இந்திய மணப் பெண் வேஷம் போட்டுவிட்டாள். இரண்டாம் பரிசு ஜென்னிக்குத்தான்.

வித்யாவின் பட்டுப் புடவையும், நகையுமாய் ஜென்னி சிரித்த சிரிப்புக்கு முதல் பரிசே கிடைத்திருக்க வேண்டும். அத்தனை அழகு.

அந்த ஜென்னிக்கா விபத்து?

கடவுளே!

டோரா ஒரு நிமிஷம் அப்படியே நின்றாள். 'ஹா' என்று கத்தவில்லை. குதிக்கவில்லை. புல்வெளி வழியாக வீட்டைச் சுற்றிக்கொண்டு வாசலுக்கு ஓடினாள்.

வித்யாவும், ''ராபின்! நீ இங்கேயே இரு'' என்று சொல்லிவிட்டு டோராவைப் பின் தொடர்ந்தாள்.

நாலு வீடுகள் தள்ளித் தெரு வளைந்து திரும்பிய இடத்தில், அந்த வளைவில், புழு வாய்ச் சுருண்ட ஜென்னி.

ஓரமாய் ஒரு டொயோடோ வண்டி.

குழந்தையிடம் சலனம் எதுவும் இல்லை.

மண்டையின் அடியில் குளமாய்த் தரையில் சிவப்பு ரத்தம். வயிற்றுப் பக்கம் டயர் ஏறின தடம்.

ஜென்னிக்கு உயிர் இருக்கிறதா இல்லையா?

வித்யாவுக்குக் கண்களில் ஜலம் கட்டிக் கொண்டது. அந்த ரத்தமும், கருளனும் வயிற்றைச் சங்கடப்படுத்த டோராவைப் பார்த்தாள்.

கண்கள் ஜென்னியை வெறிக்க டோரா மரம்போல் நின்றிருந்தாள்.

பாய்ந்து குழந்தையைத் தூக்காமல் ஏன் இப்படி நிற்கிறாள்?

பிரமை பிடித்து விட்டதா?

வித்யா ஓரடி முன்னே வைத்தாள். 'ஜென்னி' என்று அழைத்த வண்ணம் கைகளை நீட்டிக் குழந்தையைப் புரட்டக் குனிந்தவள் 'நோ — டோண்ட்... அவளைத் தொடாதே... வேண்டாம்'' என்று டோரா கத்தித் தடுக்கவும் ஒன்றும் புரியாமல் விழித்தாள்.

அடிபட்டுக் கிடக்கும் குழந்தையைத் தொடக் கூடாதா? ஏன்?

அனாதை போல் அடிபட்டுக் கிடக்கும் பெண்ணை ஏன் தொடக் கூடாது என்கிறாள்?

திடும்மென்று வித்யாவுக்குத் தம்பி கணேஷ் காலை ஒடித்துக் கொண்ட சம்பவம் ஞாபகத்துக்கு வந்தது.

மாடிப் படியில் விழுந்த கணேஷின் கால் நிமிஷத்தில் புஸ்ஸென்று வீங்கிப் போனது.

வலி தாங்காமல் தவித்த பிள்ளையைத் தூக்கி வைத்துக் கொண்ட அம்மா அன்று தவித்த தவிப்பென்ன? உருகிய உருகல் என்ன?

அந்தத் தாயின் துடிப்பு ஏன் இவளிடம் இல்லை?

மனசுக்குள் வித்யா வியந்து நிற்கையிலேயே 'உய்யோ உய்யோ' என்று கத்திக் கொண்டு ஆம்புலன்ஸ் வந்து விட்டது.

இந்த அமெரிக்காவில் இதைப் பாராட்டத்தான் வேண்டும்.

விபத்து நடந்த நாலாம் நிமிஷம் ஆம்புலன்ஸும், போலீசும் ஓட்டமாய் ஓடி வந்து விடுகின்றன. என்னமோ விபத்து நடக்கப் போகிறது என்று ஜோஸியம் பார்த்துவிட்டு அடுத்த தெருவிலேயே காத்து நிற்கிற தினுசில்.

ஆம்புலன்ஸிலிருந்து வெள்ளை யூனிபார்ம் போட்ட இரண்டு ஆட்கள் இறங்கினார்கள். ஸ்ட்ரெச்சரில் ஜென்னியை அலாக்காய்த் தூக்கிப் படுக்க வைத்தார்கள். வேனுக்குள் கொண்டு வைத்த உடனேயே டாக்டர் ஒருவர் ஜென்னிக்கு ஆக்ஸிஜன் குழாயைப் பொருத்தினார். கதவுகள் மூடப்பட்டன.

யார் பெண் இவள்? தெரிந்தவர் யாராவது இங்கே இருக்கிறார்களா? விபத்து எப்படி உண்டானது? ஒரு கேள்வி? ஒரு வார்த்தை? ம்ஹூம், ஒன்றும் இல்லை. வந்த வேகத்தில் திரும்ப ஆம்புலன்ஸ் உய்யோ உய்யோ என்று கத்திக் கொண்டு புறப்பட்டதும் வித்யா தன்னை உலுக்கிக் கொண்டாள்.

என்ன இது?

இவர்கள் பாட்டுக்கு வந்தார்கள், போகிறார்கள்?


டோரா அவர்களோடு போகவேண்டாமா?

அவர்களும் ஏதும் கேட்கவில்லை, இவளும் ஒன்றும் சொல்லவில்லையே!

என்ன இதெல்லாம்!

ஒன்றும் புரியாமல் அவஸ்தைப்பட்டவள், கையை நீட்டி டோராவின் தோள்களைப் பற்றி 'டோரா' என்று அழைத்தாள்.

(தொடரும்)




ஒளியும் ஒலியும்

இரவில் சைக்கிளில் செல்பவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கும் சாதனம் ஒன்றை லீட்ஸைச் சேர்ந்த லியோனார்ட் பட்லர் தயாரித்துள்ளார். இதனால் பின்னால் வரும் கார் மற்றும் இதர வாகனத்தில் வருவோர்க்கு, சைக்கிள்காரர் திரும்பும் திசை தெளிவாகத் தெரியும்.

பாட்டரி, பல்ப், ஸ்விட்சுடன் கூடிய இந்தச் சாதனத்தில் மேற் பகுதியில் உள்ள ஒளி பாயக் கூடிய பிளாஸ்டிக் பட்டையில் அம்புக்குறி செதுக்கப்பட்டுள்ளது. இந்தச் சாதனம் பொருத்தப் பட்ட கையுறைகளை அணிந்து, வழக்கம்போல வலது அல்லது இடது பக்கம் திரும்பும்போது கையை நீட்டுவதுடன், கையுறையில் உள்ள பொத்தானை அழுக்கினால், ஒளி பாய்ந்து அம்புக் குறியைப் பிரகாசிக்கச் செய்கிறது.

— ஆதாரம்: ஹிந்து நாளேடு
— தகவல்: நா. பட்டாபிராமன்



இது AND என்பதைக் குறிக்கும் அடையாளம் என்பது எல்லோருக்கும் தெரியும். இந்த அடையாளத்திற்குத் தனியாக ஒரு பெயருண்டு. அது என்ன தெரியுமா?

AMBERSAND.

—எம். சிவசுப்ரமணியன்

சர்வதேசக் குழந்தைகள் ஆண்டையொட்டி
விசேஷ வெளியீடு

'துறைவன்' திரு. ச. கந்தஸ்வாமி
எழுதிய

"திருக்குறள் - ஓர் அறிமுகம்"

விலை ரூ. 10-00

எளிய நடையில் குழந்தைகளுக்காக எழுதப்பட்ட இந்த புத்தகம் ஒரு அரிய கருவூலமாகும். வாங்கத் தவறாதீர்கள். பிரதிகளை கீழ்க்கண்ட விலாசத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

வெளியிடுவோர்: டைரக்டர், பப்ளிகேஷன்ஸ் டிவிஷன், மத்திய தகவல் ஒலி பரப்பு அமைச்சகம், இந்திய சர்க்கார், பாட்டியாலா ஹௌஸ், புது தில்லி - 110001.

விற்பனை நிலையங்கள்: பப்ளிகேஷன்ஸ் டிவிஷன் கிளைகள்

* சாஸ்திரி பவன்,
35, ஹாடோஸ் ரோட்,
நுங்கம்பாக்கம்,
சென்னை-600 006.

* அரசு அச்சக அருகில்,
பிரஸ் ரோட்,
திருவனந்தபுரம் – 695001.

டி.ஏ.வி.பி 79/452



இதயத்தில் ஓர் இடம்

ஒரு பெரிய பணக்காரரின் ஏகபுத்திரி, (சுமித்ரா) படித்தவள், அழகானவள், நாகரிகம் மிகுந்தவள், போயும் போயும் ஓர் ஓடக்காரனை (ஜெய்கணேஷ்) காதலிப்பாளா? ஓடக்காரனுக்கு ஒரு பெரிய சீமாட்டியின் கண்ணின் வலைவீச்சுக் கிட்டுகிறது. இந்தச் சம்பவம் கதைக்குள் கதையாக வருகிறது. இதே மாதிரி சுமித்ராவுக்கும் சந்தர்ப்ப வசத்தால் காதலனைக் கைவிட்டு ஒரு பணக்கார இதய நோய்க்காரனின் கரம் பற்ற நேர்ந்து ஒரு குழந்தைக்குத் தாயானதும் அவனை இழக்கவும் நேரிடுகிறது. கதை எப்படியெல்லாமோ போய், இருவரின் தற்கொலையோடு முடிகிறது. அதோடு விட்டதா?

மேலும் ஒரு கதையும் இக்கதையோடு இணைந்து தோன்றுகிறது! மனம் விட்டுப் பழகிய ஓர் இளம் பெண், இளைஞனின் திருமணம் தாலி கட்டும் சமயத்தில் நிறுத்தப்பட்டு விடுகிறது — அவர்கள் இருவரும் ஒரு தாய் மக்களான உடன் பிறப்புக்களாம்! அது கடைசியில் தெரிய வருகிறதாம். நல்ல வேளை! எல்லாம் நடந்து முடிந்த பின்பு தெரியாமல் போயிற்றே! கதையில் 'சஸ்பென்ஸ்' வேண்டும் என்பதற்காக என்னத்தை யெல்லாமோ சேர்த்துவிடுவதா?

இது வண்ணப் படம். ஆற்றங் கரையும், வெண் மணற்பரப்பும், நீர் நிலையும் பார்க்கப் பரவசமூட்டுவனவாயிருந்தும், நடிகர்கள் உயிரைக் கொடுத்து நடித்திருந்தும், இப்படம் மனத்தில் ஒரு பாதிப்பை ஏற்படுத்தாததற்குக் காரணம் திரைக் கதை சந்து பொந்துகளில் நுழைந்து திரும்புவதுதான்.

புது முகங்கள் அசோக்குமார், ரம்யா இருவருக்கும் நல்ல வருங்காலம் காத்திருக்கிறது.

டம்ளருக்குள் டம்ளராகப் போட்டுக் கதையைக் குழப்பாமல் இருந்திருந்தால், 'ஒரே முத்தம்' படம் பார்ப்பவர்கள் மனத்தில் நன்கு பதிந்திருக்கும். இப்போதோ ஒரே பித்தம்தான் தலைக் கேறும் போல் தோன்றுகிறது.

பிரபு குடிகாரன்தான்; பெண் மோகம் பிடித்தலைபவன்தான்; தெய்வ சாட்சியாகத் தாலி கட்டிய மனைவியைக் கைவிட்டவன் தான். ஆனால், அவன் கடைசியில் தன் தந்தையின் மானத்தைக் காப்பாற்றத் தூக்கு மேடை ஏறுகிறான். மனைவியையும் ஏற்றுத் தந்தையிடம் ஒப்படைக்கிறான்.

இந்தப் பாத்திரத்தில் ஸ்ரீகாந்த் அற்புதமாக நடித்திருக்கிறார். கறுப்பு-வெள்ளைப் படத்தில் ஒரு காவியத்தையே படைக்க முயன்றிருக்கிறார்கள்.

ஓய்வு பெற்ற நீதிபதியாக வரும் மேஜர் சுந்தரராஜன் கம்பீரமாகவும், சோகமாகவும் நடித்துப் படத்தின் மதிப்பை உயர்த்தியிருக்கிறார். நீதிபதியின் மனைவி ஐயங்கார் மாமியாக வரும் சுகுமாரி மிக மிக இயற்கையாக நடித்திருக்கிறார். கோர்ட்டு ஸீன்களை நீட்டாமல் கச்சிதமாகச் செய்திருக்கிறார்கள்.

கதை, வசனம் பி. சண்முகம், நன்றாகவே செய்திருக்கிறார். டைரக்ஷன் பிரசாத். பாராட்டலாம்.

ராதிகாவுக்கு அடக்கமான பெண் பாத்திரம். அதைச் சிறப்பாகச் செய்திருக்கிறார்.

டைப்பிஸ்ட் கோபு, கருணிராஜன், ஏ. கருணாநிதி, மனோரமா, ஆகியவர்கள் நகைச்சுவைப் பகுதிக்குத் துணை நிற்கின்றனர்.

இப்படம் ரசிகர்களின் இதயத்தில் ஓர் இடம் பிடித்துக் கொண்டால் ஆச்சரியமில்லை.


—காந்தன்



ஒரே முத்தம்

கடலுக்குள் ஜூலி

புஷ்பா தங்கதுரை



சிறு வாயன் அடிப்படுவதைப் பொருட்படுத்தாமல் புயல் வந்து கொண்டிருந்தது.

முதலில் கப்பலின் உச்சிப் பாயான ராயலைப் பிடுங்கிக் கொண்டுபோய், வெகு தூரம் தள்ளிக் கடலில் போட்டது.

லோயர் காலண்ட் பாயைத் திருகி, மிஸ்ஸன் கம்பத்தின் விட்டத்தை உடைத்தது.

மேழ ஸ்டே பாய்கள் அறுந்து போய், பயங்கரமாக உதறிக் கொண்டிருந்தன.

-சீக்கிரம், என்றார் காப்டன் எல்லாப் பாய்களையும் மடக்குங்கள்.

நின்றிருந்த பலர் பிரதானப் பாய்களின் கயிறுகளை அவிழ்க்க ஓடினார்கள்.

கப்பல் நிலையில்லாமல் ஆட, அலைகள் அடிக்கடி உள்ளே வீசி அடித்தன.

பகல் மறைந்து எங்கும் அந்தகாரம் சூழ்ந்து கொண்டிருந்தது.

பால்மர்ஸன் விக்கித்து நின்றார். திரிகோணமலைக்குப் போகாதது தப்பு என்று நினைத்தார். இலங்கையைத் தாண்டி விட்டோமா தெரியவில்லை. க்ரோனோமீட்டர் உடைந்து விட்டது. காம்பஸில் ஜிம்பால் உடைந்து, கண்ணாடியும் உடைந்து, முள் திருகிவிட்டது எங்கு இருக்கிறோம்! எங்கே போகிறோம்! தெரியவில்லை.

கப்பலின் தலைப்பில் உள்ள லாண்டர்னைக் கொளுத்தப் போய்த் தோல்வி அடைந்தான் ஒரு மாலுமி,

காப்டன் உடனே அவனை நோக்கி, யாரங்கே? எச்சரிக்கைக் கொடு, என்று கத்தினார்.

அவனும் இருட்டை நோக்கி, -அஹோய்! அஹோய்! ஒரு கப்பல் வருது! அஹோய்; அஹோய்; ஒரு கப்பல் வருது என்று அடிக்கொரு தரம் கத்தினான். கத்திக் கொண்டே இருந்தான். அவன் புத்தி பேதலித்து விட்டது. பாதி ராத்திரி ஆகியும் நிறுத்தவில்லை.

8

ஒரு கப்பல் பழசானாலும் அதில் துருவும், தண்ணீர், எண்ணெய் ஒழுகல்களும், பிராணவாயுக் கரைசலும் பெரும் நாசத்தை உண்டு பண்ணுகின்றன.

—'லைன்'ரில் ஜேம்ஸ் பார்லோ

"ஏன் மிஸ்டர்? ஊருக்குள்ள வரக்கூடாதின்னு ஏதாவது சட்டம் இருக்கா? உங்க பாதுகாக்கப்பட்ட இடத்துக்கு வந்தால் சொல்லுங்க! மற்ற இடத்திலே கண்டிக்கறதுக்கு உங்களுக்கு உரிமை கிடையாது, என்று படபடப்புடன் பேசி, 'ஹேய்' என்று ஒரு பார்வையை அந்தச் சந்தவக் கிறு சரபேந்திரன் மீது போட்டுவிட்டு குஷாலாகக் கம்பியை நீட்டினான் மல்லிக்.

—பத்தியா, பொண்ணு! பத்தியா, பத்தியா? என்று சரபேந்திரர் அந்தப் பெண்ணிடம் நியாயம் பேசிக் கொண்டிருக்கும் சத்தம் சிறிது தூரம் அவனுடன் ஓடிவந்தது.

மல்லிக் மேற்கே போய், ஒரு முடுக்கைத் தாண்டி, விரைவில் மறைந்து, மதகுக்கரையை அடைய, —எங்கேடா போனே? என்று ஒரு குமிழ் நெல்லிக்காயைக் கொடுக்கென்று கடித்துக் கொண்டு கேட்டான்கோபி.

—நான் சொன்னேன்'லே? என்று ஆரம்பித்து அந்த ஊரில் அதிகாரி காட்டும் கெடுபிடியைச் சொல்லி, பிறகு பாட்டைப் பார்த்த செய்தியைப் பரபரப்புடன் சொன்னான் மல்லிக்.

கோபியின் முப்பத்திரண்டும் வெளியே தெரிந்தன. —கை கொடுடா!

அவனுக்குத் திடீரென்று மார்க்கோபோலோ, கொலம்பஸ், ட்ரேக் போல உலகப் புகழ் பெறப் போகிறோம் என்று தோன்றியது. —இனிமே என்ன செய்யப் போறோம்டா மல்லிக் யோசித்துக் கொண்டிருந்தான்.

—இனிமேதாண்டா கவலை! என்றான்.

—என்ன கவலை?

—ஜூலி எங்கே மூழ்கியிருக்கான்னு கண்டு பிடிக்கணும்.

—அதான் தெரிஞ்சு போச்சே, இங்கே தான் கடல்லே...

சிரித்தான் மல்லிக்.

—கடல்லே கப்பலைத் தேடறது வைக்கப் போரிலே ஊசியைத் தேடற மாதிரி. அதை அப்புறம் கவனிப்போம். இப்போ எனக்கு இன்னொரு விஷயம் தெரியணும்.

—என்னது?

—அந்தக் காப்டன் கரைக்கு வந்தான்னு ருசு கிடைச்சுப் போச்சு. கப்பல் இந்தப் பக்கம் மூழ்கியிருக்கான்னு ருசு வேணுமே!

—காப்டனே கிடைச்சுட்டாரே!

—காப்டன் படகிலே வந்திருப்பாரு வேறே ருசுவும் வேணும். என் சுபாவம் உனக்குத் தெரியுமே கோபி. இன்னொரு ருசு நிச்சயம் வேணும்.

—கிடைக்குமா?

—கிடைக்கணும்.

கனிநாகலாபுரத்தை மையமாக வைத்துப் பத்து மைல் தூரம் கடற் கரையைத் துழாவ நினைத்தார்கள்.

இருவரும் மறு நாள் காலை புறப்பட்டார்கள்.

தெற்கே ஐந்து மைல் தொலைவு போய்த் திரும்பி வந்தார்கள்.

கடற் கரை அருகில் புன்னி இட்டிருக்கும் குடிசைகளையும், ஜலங்களையும் ஆராய்ந்தார்கள். மணற் பகுதிகளைத் தீவிரமாகக் கோதினார்கள். கட்டையோ, உலோகமோ எது கிடைத்தாலும் கையில் எடுத்துச் சோதித்தார்கள்.

மறுநாள் வடக்குப் பக்கம் போக முடிவு.

அந்த உப்பங்கழி அவர்களைத் தடுத்ததால் செம்படவப் படகில் ஒரு ரூபாய் கொடுத்து அக்கரை அடைந்தார்கள்.

இப்போது எதிர்க் கரையில் தெரிந்த நாகலாபுரீஸ்வரர் கோயிலைப் பார்த்தபோது அது மூச்சு நிறுத்தும் காட்சியாக இருந்தது. மேலே அந்த ஆலமரம் எவ்வளவு சின்னதாக இருந்தது!

மல்லிக் யோசித்தான். இந்தக் கனிநாகலாபுரம் பகுதி மட்டும் எப்படி இவ்வளவு உயரமாக இருந்து விட்டது? இயற்கையின் விசித்திரங்களில் ஒன்றாக இருக்குமோ? இந்த இடத்தில் மேடிட்ட பூமி, பிறகு இரண்டு திசைகளிலும் வழிந்து ஓடி, கிட்டத்தட்ட ஒரு மைல் தூரத்தில் கடல் மட்டத்துக்குச் சமமாக வந்துவிடுகிறது.

இருவரும் மேடு ஏறி, மறு பக்கம் பூமியுடன் இறங்கினார்கள்.

மல்லிக்கின் கண்களில் அந்த வெறி புகுந்திருந்தது. வேட்டை வெறி. இங்கே எங்கேயாவது நிச்சயம் ஏதாவது கிடைக்கும்.

அரை மைல் தூரம் இறங்கிய பிறகு, கடல் அவர்களை மீண்டும் வந்து சந்தித்தது.

வெள்ளை மணல் ஏக்கர் கணக்கில் பரவி, பளீர் என்று கண்களைப் பிடுங்கின.

இருவரும் பங்கு போட்டுக் கொண்டு, கோபி, கரை ஏறி குடியிருப்புக்களைத் தேடிப் போக,

மல்லிக் அந்த மணல் வெளியில் தீவிரமாக நடக்கத் தொடங்கினான்.

காலடியில் மணல் நுட்பங்களில் கோடி சூரியர்கள் பளிச்சிட,

எண்ணமும் ஏக்கமுமாக அவன் நடந்து போனான்.

இதென்ன?

மணல் மேட்டில் ஏறி இறங்கும்போது, திடீரென்று காட்சியில் 70 எம்எம் விரிந்தது.

மஞ்சட் பழுப்பில் உடம்புடன் பலபேர் அந்தக் கடல் வீதியில் உலாவினார்கள்.


ஆண்களும் பெண்களும் நிரவலாக இருந்தார்கள்.

அந்த இடத்தில் கடல் வளைகுடாவாக மாறி, அலைகளை மெள்ளக் கரை ஓரம்வரை இழுத்து வந்தது.

ஒகோ, இது ஒரு உல்லாசக் குளிப்பிடமோ?

அருகில் வரும்போது குளிப்பவர்கள் வெளி நாட்டவர்கள் என்று தெரிந்தது.

பத்து ஜோடிகள் இருப்பார்கள்.





''ஒரு டாக்டர் அறியாமையால் தன் ''நர்ஸிங் ஹோம்'' வாசலில் ''மீண்டும் வருக'' என்று எழுதி வைத்தார். அவரிடம் வைத்தியம் செய்து கொண்ட நோயாளி கோபமுற்று ''மீண்டு வருக'' என்று அதைத் திருத்தினார்.''

-ஆடலரசன் நாயகி

♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦

பாதிப்பேர் குளித்துக் கரை சேர்ந்திருக்க' பாதி தண்ணீரில் துளைந்து கொண்டிருந் தார்கள்.

ஒரு கண்ணாடிப் பச்சைக் கடல் சோம்ப லாகச் சோ பாடியது.

ஹிப்பிகளோ?

அவர்களைத் தாண்டி அப்பால் செல்ல அங்கே திடீரென்று குறுக்கிட்ட அந்தத் தோற்றம் அவனைக் குலுக்கியது.

அந்தக் கறுப்பு அழகி குளிச்சல் துணியில் வந்து கொண்டிருந்தாள்.

இரண்டு துண்டு பிகினி சிக்கனத் துடன் அவள் புள்ளிகளை மூடியிருந்தன.

ஈர முத்துக்கள்.

வயிற்றின் இலைப் பரப்பில் உரோமங்கள் பின்னிக் கொண்டிருந்தன.

விழிகள் துறுதுறுவென்று துழவ, அவனைப் பார்த்ததும் துழவலை நிறுத்தி, ஒரு பரிச் சயத்தைக் காண்பித்துவிட்டு ஓடின.

வேகமாகக் கரை சென்று வஸ்திரத்தைக் கொத்தாக எடுத்து மார்பில் புதைத்து, ஒரு தென்னம்பிள்ளைக்குப் பின்னால் மறைந் தாள் அவள்.

அவனுக்கு எந்த விதமான உல்லாச எண்ணங்களும் வரவில்லை.

அவனுக்கு ஒரே குறி! ஜூலியின் பிசிறுகள் எங்கேயாவது ஒட்டிக் கிடக்குமா?

நினைவில் தன்னை இழந்து, கெட்டுப் போன ஊசியை மணலில் தேடுபவன் போல் போனான்.

அந்தப் பெண் மெல்லிய ஸாரித் துணி யில் தனது தண்டு போன்ற ஈர உடலை மெள்ளச் சுற்ற ஆரம்பித்தாள்.

மல்லிக் அப்பால் போய் யோசித்தான். இந்த மணலில் ஏதாவது அகப்படுமா? 140 வருடங்கள் ஆகிவிட்டன. எவ்வளவோ மண் வந்து சேர்ந்திருக்கும். ரசவாதங்களைச் செய்திருக்கும். அப்படிப்பட்ட இடத்தில் ஜூலியின் மரத் துண்டோ, வேறு ஞாபகச் சின்னமோ ஒளிந்து கொண்டிருந்தால், இதற் குள் உருமாறி, வேறு ஏதோ பொருளாக மாறியிருக்கும்.....

ஜூலி, நீ எங்கிருக்கிறாய்?

கடலைப் பார்த்தான்.

மல்லிக் உள் சக்திகளை நம்புகிறவன். மனோ பலத்தில் விசுவாசமுடையவன். அழைத் தால் வரும், விழைந்தால் கிட்டும், தேடினால் கூடும் என்று சித்தாந்தம் கொண்டிருப்பவன். நமது அழைப்பு, விழைவு, தேடல் மூன்றின் அழுத்தத்தைப் பொறுத்துப் பலன்கள் சித் திக்கும் என்று நினைப்பவன்.

கடலை நோக்கி உள் மனத்தால் கூவினான்.

ஜூலி, நீ எங்கிருக்கிறாய்?

கண்களை மூடினான்.

ஒரு பெரிய பறவை இறக்கைகளுடன், கடலில் குந்தி தாலாடுவதுபோல் ஜூலி அவ னுக்குத் தோன்றினாள்.

சித்திர வேலைப்பாடுகளுடனும், ஒரு பறவை முகத்துடனும், ஜூலியின் முகப்பு அவன் கண்ணில் விழுவதாகப் பிரமை. ஜோ ஜோ ஜோ.... ஜூலி நீ ஜோ ஜோ!

—மிஸ்டர், என்ற குரல் கேட்டதும் கண் ணைத் திறந்தான். அருகில் ஆச்சரியக் கண் ணுடன் ஆர்க்கியலாஜிகல் கிருஷ்ணன். தலையெல்லாம் பரந்து, அதிக நரை தெரிய, மீசையில் புன்னகை காட்டி நின்றார். —எது வுட்லை ரொம்பத் தேடறாப்பலே இருக்கு!

மல்லிக் தத்தளித்து, சுயத்திற்கு வந்தான்.

—ஆம்மாங்க, ஆமாம்...

மல்லிக்கின் கண்ணும், உடம்பும், தலைக் கலைசலும் அவனைப் பெரிய லட்சியவாதி யாகக் காட்டின.

—அன்னிக்கு உங்களைக்கவனிச்சுக்கிட்டேன்; என் சக ஆபீசருங்க உங்களை நம்பலே! உங் களை விரட்டினதுக்காக வருத்தப்படறேன். அப்புறம் என்னென்ன கண்டு பிடிச்சீங்க! என்னென்ன தெரிஞ்சுது?

—எதுவும் தெரியலே, ஸார்! உங்களுக்குத் தெரிஞ்சாச் சொல்லுங்க! உதவியா இருக்கும்.

—நாங்க பல இடங்களிலே தோண்டிட் டோம். ஆர்கியாலஜிகல் இண்ட்ரஸ்ட்! எதுவும் கிடைக்கலே! அன்னிக்குக் கிடைச் சதுதான் கிடைச்சது! உங்களுக்கு என்ன விஷயம் வேணும்?

—எனக்கு என்ன வேணும்? பால்மர்ஸன் பத்தி..... அவர் கப்பலைப் பத்தி....

—நீங்க ரங்கூன் பங்களாவிலே கேட்டீங் களா?

—ரங்கூன் பங்களாவா?

—தெரியாதா? அதோ பாருங்க!

♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦

''டில்லியில் ஏகப்பட்ட குளிர். காலையில் பேஸ்டைப் பிரஷ்ஷில் வைத்து வாயில் வெறு மனே வைத்துக் கொண்டால் போதும். மீதி வேலையைப் பல்லே பார்த்துக் கொள்ளும்.''

— ராமு



பார்த்தான்.

புல் தரிசைகள் தாண்டி, வயல் பகமை களைத் தாண்டி, ஒரு மரக் கூட்டத்தின் நடுவில் ஒரு வெள்ளைக் கட்டிடம் சிமிட் டிக்கொண்டு இருந்தது.

—சம்பந்தசாமின்னு ஒருத்தர் அங்கிருக் காரு! மகா ரசிகர்! நிறைய விஷயங்கள் சேக ரம் பண்ணி வச்சிருக்காரு! கடல் சமா சாரமே ஒரு வண்டி இருக்கு......அங்கே போனா....

அவர் முடிக்கவில்லை. —ஸார், ஸார், ஸார், என்று மல்லிக் துள்ளிக் குதித்தான். —இந்த ஒரு சமாசாரம் போதும் ஸார். ஆயுசுக்கும் மறக்க மாட்டேன், இதோ போயிடறேன் ஸார்,—

என்று கிடுகிடுவென்று தாவி நடக்கப்போக

—அடேடே இருங்க, நானும் வர்றேன்; என்றார் கிருஷ்ணன்.

—நீங்களா? என்றான் மல்லிக்.

—ஆம்மா! அங்கே ரசிக்கும்படி நிறைய விஷயம் இருக்கு... ஆள் மகா ரசிகர்னு சொன்னேனில்லே! அந்த ஆடு இல்லாட்டி இந்தக் கிராமத்திலே நான் ஒரேயடியா டேராப் போடுவேன்னு நினைக்கிறீங்களா? என்றார் கிருஷ்ணன்.

இருவரும் வயற்காட்டு வரப்பில் இறங் கினார்கள்.

—எனக்கு இரண்டு ஆசை, மிஸ்டர் மல்லிக்!

—சொல்லுங்க!

—இங்கே ஹிப்பிங்க வந்துட்டாங்க! கோவா மாதிரி தங்க ஆரம்பிச்சுட்டாங்க. ஒரு ஹிப்பிப் பொண்ணோட ஒரு ராவுலே சந் தோஷமா இருந்துடணும்...

மல்லிக் திரும்பிப் பார்த்தான்.

....இரண்டாவது, அந்தச் சம்பகாவை எப்படியும் அனுபவிச்சுடணும். கோவில் பூசாரி பொண்ணு....

கிருஷ்ணன் பச்சையாகக் கூறியது உயிர்க் குறுத்தில் குத்துவது போல இருக்க,

தணுக்கென்று ஒரு பொட்டு நீர் அவன் கண்ணில் குதித்தது.

இந்த ஆளை விட்டுவிட்டுப் போய் விடு வோமா?

(தொடரும்)

ஓசியில் பார்க்கும் 'சர்க்கஸ்'!



ஆகா! ரொம்பப் பிரமாதம்!
அற்புத மான வாக்குவாதம்!
ஓகோ! எனவே வெளிநடப்பு!
ஒருவருக் கொருவர் கைகலப்பு!

பேடா! வாடா! எனக்கூச்சல்!
புஜத்தைக் காட்டி வாய்ஜாலம்!
ஏடா கூடமாய்த் தினம்இண்டல்
எத்தனை? கண்கொள் ளாக்காட்சி!

உச்ச ஸ்தாயியில் ஓரேசப்தம்!
ஜெய்!ஜெய்! எனவே விசில்சத்தம்!
பச்சை கொச்சை யாய்ப்பேச்சு!
பார்க்க அசிங்க மாய்ஆச்சு!

நேற்று வரையில் ஒருகட்சி!
நினைத்தால் உடனே மறுகட்சி!

சீற்றம் மிகுந்தால் ராஜினாமா!
சில்லறை சேர்க்கக் கூசினோமா?

எல்லாம் எங்கே? நமக்காக
எம்.எல். ஏக்கள் ஆனவர்கள்
உள்ள சட்ட சபையில்தான்
ஒவ்வொரு நாளும் இதேகாட்சி!

ஓட்டுப் போட்ட பொதுமக்கள்
ஓசியில் உங்கள் புதுசர்க்கஸ்!
கேட்டும் பார்த்தும் ரசிக்கின்றார்!
கிடைத்ததை எண்ணி வியக்கின்றார்!

நடக்கட் டும்!திரு விளையாடல்!
ரசிக்கட் டும்!தினம் பொதுமக்கள்!
கிடக்கட் டும்!பல பிரச்னைகள்!
கிளம்பட் டும்!புது உற்சாகம்!



● பால் உணர்ச்சி ஒன்றே கதைக் கரு'' வாக விளங்குகிற இன்றைய சூழலில், கனன்று எரியும் ''பூக்குழி''யின் மீது ஆசிரியர் லக்ஷ்மி ''பண்பாடு'' எனும் பால்குடம் ஏந்தி ''பக்தி உணர்வு'' , ''குடும்பப் பாங்கு'' எனும் வேப்பிலைக் கொத்துகளைக் கைகளில் பிடித்து வெற்றி உலா வந்திருக்கிறார்.

கோவை வி. புவனுஜெகன்

● மருமகள், மாமியார் பாசப் பிணைப்பும் கடவுள் மேல் நம்பிக்கை வைத்தவர் கைவிடப் படார் என்ற தத்துவமும் மிக சிறப்பாக அமைந்திருந்தது. அகல்யா பாத்திரப் படைப்பு மிக அற்புதம்.

சென்னை-33 டி. வெங்கடாசலம்

● பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறையே மலரும் குறிஞ்சி மலரைப்போலவும், ரோஜாப் பூப்போலவும், வாசனைக்கு முதலிடம்பெறும் மல்லிகைப்பூப் போலவும், அமைந்திருந்தது லக்ஷ்மியின் பூக்குழி.

கும்பகோணம் பிரசன்னு ராஜன்

● சாதாரண கதைதான் என்றாலும் அதனை அசாதாரணமான முறையில் கொண்டு சென்ற பாங்கு பாராட்டுக்குரியது.

பூவிருந்தவல்லி பூவை விமலன்

● மிகவும் இயற்கையாகவும் எளிமையான நடையிலும், அதே சமயத்தில் விறுவிறுப் பாகவும், ஆபாசத்துக்கு சற்றும் இடம் கொடுக்காமலும் எழுதிய லக்ஷ்மி அவர்களுக்கு எனது மனமார்ந்த பாராட்டுக்கள்.

சென்னை-33 ஆர். முரளிகுமார்

● அகல்யாவின் கற்புக்கு காமேஷின் போக்கினால் ஏதாவது பங்கம் ஏற்படுத்தி கதையை முடித்து விடுவார் என்று பயந்து ஐந்து வாரங்களாகத்தொடர் கதையைப்படிப்பதே இல்லை.

சீதா பிராட்டியை ஸ்ரீராமன் அக்கினிப் பிரவேசம் செல்ல வைத்த மாதிரி அகல்யாவையும் தீயிலிட்ட செம்பொன்னைப் போல் காட்டி ராஜ்குமார் ஏற்றுக் கொண்டதாய்க் கதையை முடித்ததற்கு ஆசிரியருக்கு நன்றி. விட்டுப் போன ஐந்து வார இதழ்களையும் நேற்று இரவே படித்து முடித்தேன்!

வேளியநல்லூர் எம். இ. சுந்தராச்சாரியார்

● பொள்ளாச்சி வள்ளலின் நிறுவனத்தார் தந்திடும் விளம்பரங்களில் எல்லாம் திருவருட் பிரகாச வள்ளலாரின் திரு அருட்பா பாடலை இணைத்து இருப்பதிலிருந்து வள்ளல் அவர்களின் உள்ளக்கிடக்கை தெள்ளெனப் புலனாகிறது.

சென்னை வே. கி. சுப்பிரமணியம்

● 'அதிக சப்தம் ஆரோக்கியத்தைக் கெடுக்கும்' என்ற உண்மை இன்று எல்லோராலும் உணரப்பட்டு, உலகெங்கும் ஓசையைக் குறைப்பதற்கான நடவடிக்கைகள் தீவிரமாக எடுக்கப்பட்டு வருகின்றன. ஆனால் தமிழ் நாட்டின் நிலை நேர்மாறாக உள்ளது.

விழாக்கள், திருமண நிகழ்ச்சிகள் போன்றவைகளில் தாங்க முடியாத சப்தத்துடன் ஒலிபெருக்கிகள் வைக்கப்படுவதோடு தினந்தோறும் தேநீர், பலகாரக் கடைகள், ஒலிபெருக்கிகள் வாடகைக்கு விடப்படும் நிலையங்கள், ரேடியோ ரிப்பேர் கடைகள் இவற்றிலும் இரவு பகல் என்ற வித்தியாசமின்றி எந்நேரமும் ஒலிபெருக்கிகள் வைக்கப்படுகின்றன. கோவில்கள், மசூதிகள், இவைகளும் கூட இக்கைங்கரியத்தில் ஈடுபடுகின்றன.

இதனால் பொதுமக்கள், அலுவலர், மாணவர்களுக்கு ஏற்படும் இடைஞ்சல் சொல்லில் முடியாது. குறிப்பாகத் தேர்வு நேரங்களில் மாணவர் படும் அவதி பரிதாபத்துக்குரியது.

ராமேசுவரம் கோடூர்.


ராஜகோபால சாஸ்திரி.

● பாரிமுனை சுரங்கப் பாதையில் குழாய்களிலிருந்து தண்ணீர் வழிந்து எப்போதும் தேங்கி நிற்கிறது. வருடத்துக்கு ஆறு மாதம் பல்லவன் பேருந்து சுரங்கப் பாதையில் விர்ரென்று செல்லும்போது தேங்கி நிற்கும் சுரங்கத்து அசுத்த நீர் பக்கத்துச் சுவரில் அடிப்பதுடன் பஸ்ஸின் இடதுபுறம் அமர்ந்திருக்கும் பெண்கள் மீது தெறிக்கிறது. பெண்கள் எவ்வளவுதான் முயன்றாலும் சகதி நீர் தன் முத்திரையைப் பதிக்காமல் விடுவதில்லை. சில ஆண்டுகளாகத் தொடர்ந்து வரும் இக்காட்சிக்கு என்றுதான் முடிவோ?

சென்னை—20 உஷாகிருஷ்ணன்

வட்டமேஜை







கல்கி - சாரதா'ஸ்

பட்டுப்புடவைகள் பரிசுத்திட்டம்



கல்கி வாசகப் பெண்மணிகள் மட்டுமே கலந்துகொள்ள ஓர் எளிய இனிய பரிசுத் திட்டம் இது.

சென்ற வாரம் தொடங்கி வரிசையாக எட்டு வாரங்களில்-எட்டு கல்கி இதழ்களில்-எட்டு கேள்விகள் இடம்பெறும். கூடவே ஒவ்வொரு கேள்விக்கும் மூன்று விடைகள் தரப்படும். எந்த விடை மிகவும் பொருத்தமானது என்று நீங்கள் கருதுகிறீர்களோ, அந்த விடையைக் குறித்து வைத்துக் கொள்ளவும். ஒன்பதாவது வாரம் அதாவது ஏப்ரல் 13ந் தேதி கல்கி சித்திரைச் சிறப்பிதழில் இடம்பெறும் கூப்பனில் நீங்கள் தேர்ந்தெடுத்த விடைகளை அந்தந்தக் கேள்விக்கு நேரே எழுதவும். தனித் தாளில் எழுதி அனுப்பினால் நிராகரிக்கப்படும்.

அத்துடன் கல்கி, சாரதா'ஸ் இரண்டும் பற்றி இரண்டு விளம்பர வாசகங்களை நீங்கள் கூப்பனிலேயே தெளிவாக அதற்குரிய இடத்தில் எழுதவேண்டும். விளம்பர வாசகங்களை நீங்கள் இப்போது முதலே யோசித்து வைக்கலாம். ஓர் உதாரணம்:

கல்கி — **கையிலிருந்தால் பெருமை; படித்துப் பார்த்தால் அருமை!**

குமாரி ஜெயலலிதா எட்டு கேள்விகளையும் பதில்களையும் பரிசீலித்து விடைகள் தேர்ந்தெடுத்துத் தந்துள்ளார். அவருடைய விடைகளுடன் ஒத்துப்போகிற மாதிரி எட்டுக் கேள்விகளுக்கும் சரியான விடைகளை அளித்த பெண்மணிக்கு முதல் பரிசு ரூ. 750 பெறுமானமுள்ள சாரதா'ஸ் பட்டுப் புடவை வழங்கப்படும். ஒரு தவறு அல்லது இரு தவறுகளுடன் எழுதிய பெண்மணிகளுக்கு முறையே இரண்டாவது, மூன்றாவது பட்டுப் புடவை பரிசுகளும் உண்டு. முதல், இரண்டாவது, மூன்றாவது பரிசு பெறும் தகுதியுடன் ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் சரியானபடி விடைகள் எழுதியிருந்தால் பரிசுக்குரியவர் விளம்பர வாசகத்தின் சிறப்பை வைத்துத் தேர்ந்தெடுக்கப்படுவர்.

விளம்பர வாசகங்களைப் பயன்படுத்திக்கொள்ளும் முழு உரிமையும் கல்கி - சாரதா'ஸ் நிறுவனங்களையே சேரும். இதற்குத் தனியே சன்மானம் கிடையாது.

ஆறுதல் பரிசுகளாக இருநூறு பேருக்கு ஜூலை மாதம் முடிய மூன்று மாதங்களுக்கு கல்கி பிரதிகள் இலவசமாக அனுப்பப்படும். ஏற்கனவே கல்கிக்கு நேரடி சந்தாதாரராக இருப்பவருக்கு அவருடைய சந்தா காலம் மேலும் மூன்று மாதங்களுக்கு நீடிக்கப்படும். இந்த ஆறுதல் பரிசுக்குரியவர்கள் குலுக்கல் முறையில் முதலிலேயே தேர்ந்தெடுக்கப்பட்டு விடுவார்கள். அதன் பின்னரே விடைகள் பரிசீலனை தொடங்கும். ஒருவேளை ஆறுதல் பரிசு பெற்றவரே முதல் அல்லது இரண்டாவது மூன்றாவது பரிசைப் பெற நேர்ந்தால் அவருக்குப் பதில் ஆறுதல் பரிசுக்கு வேறு ஒருவர் அதிர்ஷ்டக் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்படுவார்.

இந்நடவடிக்கைகள் அனைத்தையும் குமாரி ஜெயலலிதா மேற்பார்வையிட்டு ஆறுதல் பரிசுக்குரியவர்களையும் தேர்ந்தெடுப்பார்.

முடிவு தேதி ஏப்ரல் 22

உறையின் மேல் ''கல்கி-சாரதா'ஸ் பட்டுப் புடவைப் பரிசுத்திட்டம்'' என்று குறிப்பிட்டு, ''ஆசிரியர் கல்கி, சென்னை-32'' என்ற விலாசத்துக்கு அனுப்பவும்.


வேறு கடிதப் போக்குவரத்துக் கிடையாது.

சந்தேகம் எழும் விஷயங்களில் கல்கி ஆசிரியர் தீர்ப்பே முடிவானது.

இந்த வாரத்திய கேள்வியும் விடைகளும்:

கேள்வி : **சமையலறைக்கு மிகவும் முக்கியமானது எது?**

விடைகள் : **அடுப்பு - தீப்பெட்டி - பாத்திரம்.**



பாட்டெழுதும் போதினிலே..!

தமிழ்பித்தன்

திரையுலகத்தில் பாடல் ஆசிரியர்கள் பலர் தோன்றியிருக்கிறார்கள். தோன்றி வருகிறார்கள். என்றாலும் அவர்களிடையே கவிஞர் கண்ணதாசன் குறிப்பிடத் தக்க இடத்தைப் பெறுகிறார். ஏறக்குறைய நாலாயிரம் பாடல்களை எழுதியுள்ள கவிஞர் அசாத்தியமான திறமையுடன் விளங்குகிறார். பாடல்களை அனாயாச மாக எழுதி வருகிறார். தோல்வியுறப் போகும் படங்களைக் கூட வெற்றிப் படங்களாக மாற்றிடும் பெருமை அவரது பாடலுக்கு உண்டு!

பாட்டு எழுதுவதில் இரு வகை உண்டு. பாடல் ஆசிரியர் தமது விருப்பப்படி பாடல் வரிகளைக் கொடுக்க, இசை அமைப்பாளர் அதற்கு மெட்டமைப்பது ஒரு வகை; இசை அமைப்பாளர் தயாரித்து வைத்திருக்கும் மெட்டுக்குப் பாடலாசிரியர் பாட்டு எழுதுவது மற்றொரு வகை. முதலாவது வகை எளியது; இரண்டாவது வகை சிரமமானது. பாடலாசிரியர் தமக்குத் தெரிந்த தமிழ் வார்த்தைகளை யெல்லாம் திறம்படத் தொகுத்து எழுதினாலும் இசை அமைப்பாளர்களின் மொழியில் சொன்னால், 'சில இடங்களில் வார்த்தைகள் இடிக்கும்'! அந்த வார்த்தைகளை மாற்றித் தகுந்த வார்த்தைகளைத் தருவதற்குள் போதும் போதும் என்றாகிவிடும் பாடலாசிரியருக்கு!

கவிஞர் கண்ணதாசனைப் பொறுத்த அளவில் இந்த இரு வகைப் பணியும் பாணியும் சுலபமானது; சுவையானது.

விச்சு அடைந்த வியப்பு

1957ம் ஆண்டு செப்டம்பர் மாதம். 'கண்ணதாசன் பிலிம்ஸ்' என்ற பெயரில் திரைப்பட நிறுவனம் ஒன்றைத் துவக்கி, 'ஊமையன் கோட்டை' என்ற திரை ஓவியத்தைத் தயாரித்து வந்தார் கவிஞர். படத்துக்கு இசை அமைக்கும் பொறுப்பை மெல்லிசை மன்னர்களான விசுவநாதன்–ராமமூர்த்தி இருவரும் ஏற்றிருந்தார்கள். (பல இடையூறு காரணமாக இப்படம் வெளிவரவில்லை).

அந்தப் படத்தில் பகைவர்களை எதிர்ப்பதற்கு வீரர்களைத் திரட்டும் பணியில் ஈடுபட்ட ஒரு பெண்மணி வீரமும் வேகமும் கொண்டு பாடுவதாக ஒரு கட்டம். அதற்குப் பாடல் எழுதத் தொடங்கினார் கவிஞர்.

பல்லவியை அமைத்த கவிஞர், அனுபல்லவியையும் முடித்துச் சரணத்தைத் தொடர்ந்தார்.

முடியுடை மன்னவர்
  போற்றி வணங்கிய
தென்னகம் என்னகம்
  வாழ்கவே!


என்று சரணத்தைத் தொடர்ந்த கவிஞர், அடுத்து எழுதுவதற்கு 'தத்தகாரம்' கேட்டார் விச்சுவிடம்.

'தந்த தனதான தந்த தனதான' என்ற தத்தகாரத்தைக் கொடுத்த விச்சு, அடுத்த வரிக்குத் தத்தகாரம் கொடுப்பதற்குள்

முந்தி எமைத்தேடி
  வந்த பகைவோரைக்
கொன்று தலைவேறு காணவே
இன்று படையோடு போரிலே
சென்று மகிழ்வோடு மோதவே
ஒன்று படுவீர்எம் தோழரே!

என்ற வார்த்தைகளை வெகு வேகமாக வழங்கிப் பாடலை முடித்தார் கவிஞர்.

அதைக் கண்ட விச்சு வியப்பில் ஆழ்ந்து, 'அண்ணேன், நான் தத்தகாரத்தைக் கொடுத்துவிட்டு ஆர்மோனியத்தின் ரீட்டை விட்டுக் கையை எடுக்கவே இல்லை! அதற்குள்ளே வார்த்தைகளைக் கொடுத்து விட்டீர்களே! நீங்கள் சாதாரணக் கவி இல்லே!



மகா கவி!'' என்று மனப் பூர்வமாகக்கூறினார்.

'அத்தான்' பெற்ற அவமதிப்பும் பெருமதிப்பும்

கவிஞரின் சொந்தப் படமான 'மாலையிட்ட மங்கை'யில் இரண்டாம் நிலைக் கதாநாயகி, தன் அத்தை மகன் வெளி நாட்டிலிருந்து தாயகம் திரும்பி வரப் போகிறார் என்பதை அறிந்து, மகிழ்ச்சி அடைந்து, தோழிகளுடன் ஆடிப் பாடும் கட்டம். அதற்குப் பாடல் எழுதும் பணியில் ஈடுபட்டார் கவிஞர்.

அத்தான்! என் அத்தான்!
அன்புடன் வருவார் மகிழ்வேன் நான்
ஆசையுடன் நேசங்கொண்டு
வருவார் என் அத்தான்

என்று பல்லவியைக் கொடுத்தார்.

உடனே இசையமைப்பாளர் விசுவநாதன், ''அண்ணேன், அண்ணேன்! என்னண்ணேன் இது! அத்தான், பொத்தான்னு எழுதிக்கிட்டு! வேறே நல்ல பல்லவியாக் கொடுங் கண்ணேன்!'' என்றார்.

விச்சுவின் மறுப்புக்குப் பின்னர், கவிஞர் வேறொரு பல்லவியைக் கொடுத்து முழுப் பாடலையும் எழுதினார்.

இதிலே குறிப்பிடத்தக்க செய்தி உண்டு. 'அத்தான் பல்லவி நன்றாக இல்லை என்று விச்சு தெரிவித்து நான்கு அல்லது ஐந்து ஆண்டுகள் கழித்து அதே 'அத்தானை'ப் பல்லவியாக வைத்து, 'பாவ மன்னிப்பு' என்ற படத்துக்குக் கவிஞர் எழுதிய பாடலை 'ஆஹா ஹா' என்று வரவேற்று இசை அமைத்தார் விச்சு.

அத்தான்....என் அத்தான்...
அவர் என்னைத்தான்!
எப்படிச் சொல்வேனடி?

என்பதுதான் அந்தப் பாடல்:

இந்தப் பாட்டைப் பாடாத வாய் இந்தத் தமிழ் நாட்டில் உண்டா? இத்தனை ஆண்டுகள் கழிந்தும்கூட இப்பாடல் பலரின் நாவில் இன்றும் ஒலிப்பதைக் கேட்க முடிகிறது.

செந்தமிழ்த் தேன்மொழியாள்!

'மாலையிட்ட மங்கை'யில் கதாநாயகனாக நடித்த பழம்பெரும் நடிகர் டி. ஆர். மகாலிங்கம் — திறமை மிக்க பாடகராக விளங்கியதால் அவருக்காக எழுதும் பாடல்களைக் கவிஞர் ரசித்து ரசித்து எழுதினார்.

கதாநாயகன் பாடுவதாக ஒரு பாடல். 'சில்லென்று பூத்த' என்று தொகையருவில் தொடங்கி 'செந்தமிழ்த் தேன்மொழியாள்' என்ற பல்லவியை அமைத்துப் பாடல் எழுதினார்.

பல வருடங்களுக்கு முன்னர் வெளிவந்த 'ஆன்' என்னும் டப்பிங் படத்தில் 'ஓஹோ முத்தம் தரும் மாந்தளிர்க் கொடியாள்— துரைமகள்தானே!'' எனத் தொடங்கும் பாடல் துரித நடையில் அமைந்திருந்ததும் அந்தப் பாடலைக் கேட்டுத் —திரையரங்கில் குழுமியிருந்த (இசை ஞானம் உள்ள—இல்லாத) ரசிகர்கள் அனைவரின் கரங்களும் ஓங்கி ஓங்கித் தாளம் எழுப்பிய காட்சியும் கவிஞருக்கு நினைவில் இருந்ததனால், 'செந்தமிழ்த் தேன்மொழியாளை' அதே மெட்டில் இசைக்கும்படி சொன்னார்.

மெல்லிசை மன்னர்களில் ஒருவரான விச்சு, ''வேண்டாம் அண்ணேன்! வேறே டியூன்ல போடுவோம்! இது பாபுலர் ஆகாது!'' என்றார்.

''இந்த டியூனை நீ போடு! கொட்டகையே தாளம் போடுதா இல்லியா பாரு! ரசிகர்கள் இந்தப் பாட்டைக் கேட்டுத் தாளம் போடலேன்னா, நான் பாட்டு எழுதறதையே விட்டுடுறேன்!'' என்று முனைப்பாகச் சொன்னார் கவிஞர்.

அவரது விருப்பப்படியே விச்சு மெட்டமைத்தார். 'மாலையிட்ட மங்கை' திரையிடப்பட்டது.





✖ கட்டுரையாசிரியரும் கவியரசும்

செந்தமிழ்த் தேன்மொழியாள்—நிலாவெனச்
சிரிக்கும் 'மலர்க் கொடியாள்
பைங்கனி இதழில் பழரசம் தருவாள்
பருகிடத் தலைகுனிவாள்.

என்னும் பாடல் திரையில் ஒலிக்கத் தொடங்கியதும் அரங்கில் இருந்த அத்தனை ரசிகர்களும் கைதட்டித் தாளம் போட்டதுடன், தலையையும் வேகவேகமாக ஆட்டி ரசிக்கத் தொடங்கினர்கள். கவிஞரின் கணக்கீடு சரியாக இருந்தது.

லேனு சூட்டிய மாலை


லேனு என்று அன்புடன் அழைக்கப்பட்டு வந்த லெக்ஷ்மணன் செட்டியார் தமது கிருஷ்ணு பிக்சர்ஸ் நிறுவனத்தின் மூலமாக 'மதுரை வீரன்' என்னும் திரைப் படத்தைத் தயாரித்து வந்தார். அந்தப் படத்துக்குக் கவிஞர் வசனம் எழுதி வந்ததுடன், சில பாடல்களையும் எழுதினர்.

கவிஞரிடம் இன்னும் ஒரு குணம் இருந்து வருகிறது. அதாவது பாடல் எழுதுவாரே தவிர, அது எப்படி ரிகார்டிங் ஆகிறது—எப்படி அமைகிறது — பாடகர்கள் சரியாகப் பாடுகிறார்களா என்றெல்லாம் தெரிந்து கொள்ள ரிகார்டிங் தியேட்டருக்குச் செல்லும் வழக்கம் கிடையாது. அதனுல் இப் படத்துக்கு 'நாடகம் எல்லாம் கண்டேன்' பாடல் பதிவாகியபோது அவர் ஸ்டுடியோவுக்குச் செல்லவில்லை.

தமிழ்நாட்டுச் சிறைச்சாலை இலாகாவின் வரலாற்றிலேயே முதல் தடவையாக ஆயுள் கைதி மருத்துவக் கல்லூரியில் சேர அனுமதிக்கப்படுகிறார். 25 வயதான சி. என். சுந்தரம் தஞ்சை மாவட்டம் ஒரத்த நாட்டைச் சேர்ந்தவர். தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரியில் 1974-ம் வருடம் எம். பி., பி. எஸ்., இறுதியாண்டிற்கு முந்திய வகுப்பில் படித்துக்கொண்டிருந்தார். அப்போது ஒரு கொலை வழக்கில் அவருக்குத் தஞ்சை செஷன்ஸ் நீதிமன்றம் ஆயுள் தண்டனை அளித்தது. திருச்சி மத்திய சிறையில் அவர் அடைக்கப்பட்டார்.

மருத்துவக் கல்லூரி படிப்பைத் தொடரத் தமக்கு அனுமதி வேண்டும் என்று தமிழ்நாடு அரசிற்கு அவர் கோரிக்கை விடுத்தார். அவரது முறையீட்டைத் தமிழக அரசு தற்போது ஏற்றுக் கொண்டு உள்ளது. சென்னை மருத்துவக் கல்லூரியில் அவரது படிப்பைத் தொடர ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. இனிமேல் சென்னை மத்திய சிறையிலிருந்து போலீசார் அவரை மருத்துவக் கல்லூரிக்கு அழைத்துச் செல்வர்.

ஆதாரம் : ''தினமணி''
'—தகவல் : எஸ். சையது முகமது



ஒரு வாரம் கழித்து கவிஞர் கிருஷ்ணு பிக்சர்ஸ் அலுவலகத்துக்குச் சென்றார். கவிஞரைப் பார்த்ததும், லேனு, ''வாங்க கவிஞரே, வாங்க!'' என்று மகிழ்ச்சியுடன் வரவேற்றார். தம் ஊழியர் ஒருவரை அழைத்து ''கொண்டுவாடா அதை!'' என்றார். மறு விநாடி அந்த ஊழியர் பெரிய ரோஜா மலர் மாலையைத் தூக்க முடியாமல் தூக்கி வந்தார். அந்த மாலையை அவரிடமிருந்து வாங்கிக் கவிஞரின் கழுத்திலே அணிவித்து, ''ரொம்ப அருமையாப் பாட்டு எழுதியிருக்கீங்க கவிஞரே!'' என்று அகமகிழ்ந்து பாராட்டினர் லேனு. பாடல், அதனைப் புனைபவனுக்குப் பணம் பெற்றுத் தருவது பெரிய விஷயமில்லை; இவ்விதம் உற்சாகமான பாராட்டைப் பெறுவது அல்லவா அதன் தனிச் சிறப்பு!

போனிலே சொல்லிய பாட்டு

கவிஞர் 'கறுப்புப் பணம்' என்றொரு படத்தைச் சொந்தமாகத் தயாரித்து வந்தார். படத்துக்கு வசனம், பாடல்கள் எழுதியதுடன் அந்தப் படத்தில் அவர் முக்கிய பாத்திரத்தில் நடித்தும் வந்தார்.

அந்தப் படத்தில் ஒரு சினிமா நட்சத்திரம் நாட்டியம் ஆடும் கட்டம். அதற்குரிய பாடலைக் கவிஞர் எழுத முனைந்தார்.

கையிலே பணமிருந்தால்
கழுதைகூட அரசனடி
கைதட்ட ஆளிருந்தால்
காக்கைகூட நடிகனடி

என்று பல்லவியை எழுதினர்: பாடலை முடிக்கவில்லை. வேறு அவசர வேலை குறுக்கிட்டு விட்டது.

ஆனால் படத்தின் தயாரிப்பு நிர்வாகி, பாடல் எழுதி முடிக்கப்பட்டு விட்டதாக எண்ணிக் கொண்டு ரிகார்டிங் கால்ஷீட் போட்டுவிட்டார். இசைக் குழுவினர் அனைவரும் ஒவ்வொருவராக வந்து விட்டனர். இறுதியாக இசை அமைப்பாளர் விசுவநாதன் வந்தார். வந்தவுடன் வழக்கம் போல் 'சாகித்யம் எங்கே?' என்று கேட்டார். அப்போதுதான் பாட்டுப் பிரதி இல்லை என்பது அனைவருக்கும் புரிந்தது. உடனே பதறியபடி தயாரிப்பு நிர்வாகி கவிஞருடன் போனில் தொடர்பு கொண்டு பேசினர்.

''ஆமாமா! நினைவு வருது! பல்லவி மட்டும்தானே எழுதினேன்!'' என்று கவிஞர் சொல்லியவாறு பல்லவியை ஒரு முறை படிக்கச் சொன்னர். மறுவிநாடி,

பொய்யிலே நீந்திவந்தால்
புலுகனெல்லாம் தலைவனடி
பூசாரி வேலை செய்யும்
ஆசாமி சூரனடி

என்று தொடங்கி 16 வரிகள் கொண்ட முழுப் பாடலையும் போனிலேயே சொல்லி முடித்தார். சில மணி நேரத்தில் பாடல் கடகடப் பதிவாகியது. தமிழ்த் திரைப் பட வரலாற்றிலேயே போனிலேயே பாடல் சொல்லப்பட்டு, பதிவு செய்யப்பட்ட அதிசய நிகழ்ச்சி இதற்கு முன்னும் நடந்ததில்லை — பின்னும் நிகழ்ந்ததில்லை!

காந்த சக்தி வைத்தியம்!

ஜனார்த்தனன்



⌘ காந்த நீர் தயாராகிறது.



⌘ நோயாளியுடன் டாக்டர் பன்சல்

ஓர் இளைஞன் தன் கைவிரல்களில் தாங்கியுள்ள கருங்கல் போன்ற ஒரு பொருளால் மூக்கைப் பிடித்துக் கொண்டிருக்கிறார். மற்றொரு புறம் வயதான ஒரு மாது, முதுகு சாய்மானத்திலும் இரு கைகளிலும் வட்ட வடிவமான எவர்சில்வர் தகடு பதித்துள்ள நாற்காலியில் அமர்ந்திருக்கிறார். அவரது வலது கால் பாதத்தின் கீழ் வட்ட வடிவ எவர் சில்வர் தகடு பதித்த மரப் பலகை உள்ளது. அவரையடுத்து நடுத்தர வயதுள்ள ஒருவரது தோள்பட்டையின் மீது டாக்டர் பன்சல் வட்ட வடிவ எவர்சில்வர் பளு ஒன்றை வைத்துப் பிடித்துக் கொண்டிருக்கிறார். இவர்கள் அனைவரும் நோயாளிகள். அவர்களுக்கு சிகிச்சை செய்யும் டாக்டர் பன்சல் உபயோகிப்பது சாதாரண காந்த சக்தி. மருந்தென்பது பெயரளவுக்குக் கூடக் கிடையாது. புதுதில்லி சப்தர்ஜங் பகுதியில் உள்ளது இந்த மருத்துவ மனை.

காந்தத்துக்கு இரும்பை ஈர்க்கும் சக்தி உண்டு என்பது யாவரும் அறிந்த உண்மை. காந்த மண்டலத்தில் நீரை வைக்கும்போது நீர் அயனிகளாகி (Ionized) அதன் தன்மை சற்று மாறுபடுகிறது. உடலின் மீது காந்தத்தை வைக்கும்போது, அப்பகுதியிலுள்ள ரத்தம், (அதில் இரும்புச் சத்து இருப்பதால் காந்த சக்தியால் ஈர்க்கப்பட்டு அயனியாகிறது. இதன் காரணமாக ரத்தம் மென்மையடைந்து விரைவாக ஓடுகிறது. தவிர ரத்தத்தில் உள்ள கால்ஷியத்தையும் கோலெஸ்ட்ரோல் (Cholestrol) என்ற கொழுப்புப் பொருளையும் காந்த சக்தி நீக்க உதவுகிறது. தவிர காந்த சக்தியால் ஏற்படும் வெப்பம் உடலின் பல பாகங்களை அமைக்கும் பொருளான (Tissue) வுடன் கலந்து அதன் உயிரணிகளை (Cells) வளரச் செய்கிறது. இதன் காரணமாகப் பலவித நோய்கள் குணமடையக் காந்த சக்தி உதவுகிறது என்று டாக்டர் பன்சல் கூறுகிறார்.

காந்தங்களை அதனதன் ஈர்க்கும் சக்திக்கேற்ப (Gauss) என்ற குறி எண்ணால் அளவிடுவர்.

டாக்டர் பன்சல் பலவித நோய்களைக் கண்டறிந்து அவற்றுக்கேற்பச் சக்தியில் வேறுபடும் பலரக காந்தங்களை உடலின் பல பாகங்களில் வைத்துச் சிகிச்சை செய்கிறார்.


தவிர காந்த சக்தியால் அயனிகளாக்கப்பட்ட நீரை நோயாளிகளுக்குக் கொடுத்து, சிறுநீர்ப் பைகளில் தோன்றும் கற்களையும், சில வயிற்றுக் கோளாறுகளையும் நீக்க முடிகிறது.

இவ்வாறு பலவித நோய்களை அவற்றின் வீரியத்துக்கேற்றபடி நாளொன்றுக்கு ஐந்து

முதல் 15 நிமிடம் வரை காந்த சக்தியைச் செலுத்தி, சிகிச்சை செய்வதற்கு டாக்டர் பன்ஸல் தம் நோயாளிகளிடமிருந்து பணம் வாங்குவதில்லை. அவர்கள் தாமாகவே கொடுக்கும் அன்பளிப்பை முகம் சுளிக்காமல் ஏற்றுக் கொள்கிறார். அன்றாடம் மருத்துவ மனைக்கு வர இயலாத நோயாளிகள் காந்தங்களை டாக்டர் பன்ஸலிடமிருந்து விலைக்கு வாங்கி அவற்றை உபயோகிக்கும் முறையைக் கேட்டுச் செல்கின்றனர். இக்காந்தங்கள் சக்திக்கேற்றபடி முப்பது ரூபாய் முதல் இருநூற்றைம்பது ரூபாய் வரை விலை பெறுகின்றன.

நாளொன்றுக்கு ஐம்பதுக்கு மேற்பட்ட நோயாளிகளுக்கு இலவச சிகிச்சை செய்யும் டாக்டர் பன்ஸல் நூற்றுக்கு மேற்பட்ட நபர்களுக்கு இக்காந்த வைத்திய முறையைக் கற்றுத் தருகிறார். அவர் எழுதியுள்ள Magneto therapy என்ற புத்தகத்தை

✖ காந்தம் பதித்த நாற்காலி



வாங்கிப் படித்து அதன் மூலம் காந்த சிகிச்சை முறையைக் கற்றுப் பலர், தமிழகம் உள்பட பாரதத்தின் பல மாநிலங்களில் நோயாளிகளுக்குச் சிகிச்சை செய்து வருகின்றனர்.

காந்த வைத்தியத்தினால் வேறு கோளாறுகள் எதுவும் ஏற்படுவதில்லை. காந்த வைத்தியத்துடன் மற்ற முறை மருந்துகளையும் சாப்பிடலாம். தமது சிகிச்சை முறையில் காந்தங்களைக் கர்ப்பிணிகளின் அடிவயிற்றிலும், இதயத்தின் அருகிலும் தலையிலும் டாக்டர் உபயோகிப்பதில்லை. காரணம்,



✖ கடும் ஜலதோஷம் நீக்க காந்த சக்தி

மென்மையான மூளையும் உயிர்நாடியான இருதயமும், கர்ப்பப் பையிலுள்ள வளர்ச்சியடைந்துவரும்சிசுவும் காந்தசக்தியால் பாதிக்கப்படக் கூடும் என்பதுதான்.


காந்தத்தின் வைத்திய சக்தியைப் பற்றி அதர்வண வேதத்தின் முதல் காண்டத்தின் பதினேழாவது சுக்தத்தில் வரும் மந்திரங்கள் விவரிக்கின்றன.

மாஜி பிரதமர் திரு மொரார்ஜி தேசாயைப் பல ஆண்டுகளாகப் பாதித்து வந்த அவரது காலிலிருந்த கனத்தை நீக்க டாக்டர் பன்ஸல் காந்த சிகிச்சை அளித்தாராம்.

காந்த வைத்தியம், Arthritis ஆஸ்துமா, சிரங்குகள், பல்வலி, தூக்கமின்மை, சுளுக்கு, இரத்த அழுத்தம் முதலிய பலவித நோய்கள் குணமடைய வகை செய்கிறது என்று டாக்டர் பன்ஸல் கூறுகிறார்..

காந்த வைத்தியத்தில் சில கட்டுப்பாடுகளும் உள்ளன. காந்த சிகிச்சை பெற்று ஒரு மணி நேரம் வரை குளிர்ந்த பதார்த்தங்களைச் சாப்பிட டாக்டர் பன்ஸல் தமது நோயாளிகளை அனுமதிப்பதில்லை. தவிர இரண்டு மணி நேரம் வரை அவர்களைக் குளிக்கவும் அனுமதிப்பதில்லை. உணவருந்திய பிறகு இரண்டு மணி நேரம் வரை அவர்களுக்குக் காந்த வைத்தியம் அளிப்பதுமில்லை.

காந்த வைத்தியத்துக்கு வைத்தியக் கலை கவுன்சில் அண்மையில் அங்கீகாரம் அளித்திருக்கிறது.



அத்தியாயம் 30

இரவில் சில நிகழ்ச்சிகள்

இந்திரஜித் அனந்த் போட்ட புதிர்களுக்கெல்லாம் விடை காண முடியா விட்டாலும் அவற்றைப் பற்றித் திரும்பத் திரும்பக் கேள்விகளை எழுப்பிக் கொள்வதை மட்டும் கடல் ராணி விடவில்லை. ''சிவாஜி மகாராஜாவின் அறையில் இவரும் நானும் எதற்காகத் தனியாகத் தங்க வேண்டும்? தங்கிய பின் இவர் மட்டும் ஏன் மறைய வேண்டும்? இவர் மறைவதற்கு எனது தந்தை ஏன் அறைக் கதவைப் பூட்ட வேண்டும்?'' என்றெல்லாம் தன்னைக் கேட்டுக் கொண்டாள் ராணி. அதுவும் தனது பெண்ணையும் அந்நிய புருஷனையும் தனியாக அறைக்குள் அனுப்பி வெளியே பூட்ட எந்தத் தந்தையாவது இசைவானு என்றும் வினவிக் கொண்ட ராணி, அன்றிரவு ஏதோ அனர்த்தம் விளையப் போகிறது என்று மட்டும் தீர்மானித்துக் கொண்டாள். அதைப் பற்றி அனந்தைக் கேட்பதால் பயனில்லை என்பதும் புரிந்திருந்ததால் தனது ஆடையை நன்றாகச் சுற்றிக் கட்டிக் கொண்டதும் ''வாருங்கள் போவோம்'' என்று கூறிவிட்டு முந்திரி மரத்திலிருந்து கீழிறங்கித் தென்னஞ் சோலை மணலில் நடக்கத் தொடங்கினாள். அனந்தும் அதற்கு மேல் ஏதும் பேசாமலும் தீவிர சிந்தனையில் ஆழ்ந்தும் அவளைப் பின் பற்றிச் சென்றான். போகும் வழியில் தான் உலர்த்தியிருந்த தனது சட்டையையும் முந்திரி மரத்திலிருந்து எடுத்துக் கொண்டு ராணியைத் தொடர்ந்தான்.

ராணி அங்கிருந்து நேராகத் தன் மாளிகையை நோக்கிச் செல்லவே, ''ராணி! மாலுமிகள் இல்லத்தில் எனது மற்ற ஆடைகளை வைத்திருக்கிறேன். நான் அங்கு சென்று வருகிறேன்'' என்று கூறிவிட்டு அவள் பதிலுக்குக் காத்திராமல், சரேலென்று நேர் எதிர் திசையில் திரும்பிச் சென்றான் அனந்த். அவன் சென்றதைத் தலையைத் திருப்பி ஒரே ஒரு முறை பார்த்த ராணியும் தலையை அசைத்துவிட்டு மாளிகைப் பாதையில் நடந்து விட்டாள்.

அனந்தும், ராணியும் தென்னஞ் சோலைக்குள் நுழைந்ததையும், நீண்ட நேரத்துக்குப் பிறகு வெளியே வந்து வெவ்வேறு பாதைகளில் சென்றதையும் சிந்து துர்க்கத்திலிருந்து தூரதிருஷ்டிக் கண்ணாடி மூலம் பார்த்துக் கொண்டிருந்த இங்க்லண்ட் கண்ணாடியைப் பக்கத்திலிருந்த டெய்லரிடம் கொடுத்தான். அதை வாங்கி பாண்டவ கட்டை நோக்கிய டெய்லர் பெரிதாக நகைத்தான். ''தே ஹாவ் நோ ப்ளேஸ் ஹியர் (இங்கு அவர்களுக்கு இடமில்லை)'' என்று கூறவும் செய்தான் நகைப்பினூடே.

''ஃபார் வாட் (எதற்கு?)'' என்று கேட்டான் இங்க்லண்ட்.

''ஃபார் லவ் (காதலுக்கு)'' என்று டெய்லர் மீண்டும் நகைத்தான்.

இங்க்லண்ட் நகைக்கவில்லை. தீவிர சிந்தனையில் இறங்கினான். அந்த இருவரும் தூரதிருஷ்டிக் கண்ணாடி மூலம் பார்த்ததையும், டெய்லர் சிரித்ததையும் தூரத்திலிருந்து கவனித்துக் கொண்டிருந்த வில்வரும் அவர்கள் அருகில் நொண்டிக் கொண்டு வந்து ''என்ன பார்க்கிறீர்கள்?'' என்று வினவினான்.

''டூ லவ் பேர்ட்ஸ் (இரண்டு காதற் பறவைகள்)'' என்றான் டெய்லர்.

''யூ மீன் அனந்த் அண்ட் ராணி? (அனந்தையும் ராணியையும் சொல்கிறீர்களா?)'' என்று வினவினான் வில்வர்.

''வேறு யாரைச் சொல்லுவேன்?'' என்ற டெய்லர் அந்த இடத்தை விட்டு அகன்றான்.

விஷயத்தை இங்க்லண்டிடமிருந்து அறிந்த வில்வர் ''ஐ திங் இட் ஈஸ் நாட் ஆஸ் ஸிம்பிள் ஆஸ் தட் (அது அத்தனை சுலப

ஆபீசர் (சேவகரிடம்): ''கூப்பிடையா அந்த டைப்பிஸ்டு பெண்ணை!''

''டைப்பிஸ்டைக் காணோமுங்க''

''சரி, டெஸ்பாச்சரைக் கூப்பிடு''

''அவரையும் காணோமுங்க''

''அப்போ 2 பேரையும் காணோமின்னு போலீசிலே ரிப்போர்ட் கொடு.''

— பரம்பை நா. ஆறுமுகம்



மாகத் தள்ளிவிடக் கூடிய விஷயமல்ல)'' என்று தனது கருத்தைச் சொன்னான்.

''இல்லை'' என்று இங்க்லண்டும் ஒப்புக் கொண்டான்.

''அந்த இருவரையும் நாம் எச்சரிக்கையுடன் கண்காணிக்க வேண்டும்'' என்றான் வில்வர்.

''கண்காணிப்பது அத்தனை சுலபமல்ல. நாம் சிந்து துர்க்கத்தை விட்டுச் சென்றால் காஸண்ட்ராவுக்கு ஆபத்து. ஆகவே, அவர்கள் இங்கு வந்த பின்புதான் கவனிக்க வேண்டும். அவசியமானால் இன்னொரு முறை சிந்து துர்க்கத்தை விட்டு அவர்கள் அசையாமல் செய்ய வேண்டும்'' என்று இங்க்லண்ட் கூறினான்.

இங்க்லண்டின் கணக்கு முற்றிலும் சரி என்று பட்டதால் வில்வரும் அதை ஆமோதித்தான். இருப்பினும் தங்கள் மாலுமிகளை எச்சரிக்கை செய்யும் அவசியத்தையும் எடுத்துச் சொன்னான் இங்க்லண்டுக்கு. இங்க்லண்டுக்கும் அந்த அபிப்ராயம் இருந்ததால் முக்கியமான சில மாலுமிகளை அழைத்து அனந்தையும் ராணியையும் தீவிரமாகக் கண்காணிக்குமாறு ரகசிய உத்தரவுகளைப் பிறப்பித்தான். ஆனால் இங்க்லண்டோ வில்வரோ எதிர்பார்த்தபடி எதுவும் நடக்கவில்லை. பிற்பகல் திரும்பி வந்த ராணி அனந்த் இருவர் நடத்தையிலும் பார்வையிலும் காதல் அளித்த வேதனையும் விஷமமும் தென்பட்டதே யொழிய புதிதாக எதுவும் தென்படாததால் தன் சந்தேகம் வீணானதாக இருக்குமோ என்று இங்க்லண்ட் கூட எண்ணினான்.

ஆங்கிலக் கணக்குப்படி சுமார் பிற்பகல் ஐந்து மணிக்கு முதலில் ஒரு படகில் அனந்த் வந்து சேர்ந்தான் நாலைந்து பணி மக்களுடன். பணி மக்கள் பால் நிறைந்த இரண்டு குடங்களையும், அபிஷேக சாமக் கிரியைகளையும் கொண்டு வந்திருந்தார்கள். படகிலிருந்து முதலில் குதித்துத் தானே படகை இறங்கு துறையில் பிணைத்த அனந்த் ''பால் குடங்கள் ஜாக்கிரதை. சாமக் கிரியைகளையும் எச்சரிக்கையுடன் எடுத்துச் செல்லுங்கள்'' என்று பணி மக்களுக்கு உத்தரவிட்டான். அந்தச் சமயத்தில் பல கேள்விக் குறிகளை முகத்தில் எழுப்பிக்கொண்டும் சினத்தின் சாயையுடனும் வந்த மால்வான் தளபதி சங்கர்பந்திடமும் சொன்னான், ''ராணி அடுத்த படகில் வந்து விடுவாள்'' என்று.



சங்கர் பந்தின் உள்ளம் எரிமலையாக இருந்தாலும், அவர் அதை அதிகமாக முகத்தில் காட்டா விட்டாலும், முகம் இருந்த நிலை அவர் உள்ளத்தை ஓரளவு எடுத்துக் காட்டவே செய்ததால் ''சிந்து தூர்க்கத்தில் அபிஷேக வசதிகள் இல்லாததால் பாண்டவ கட்டுக்குப் போக வேண்டியிருந்தது'' என்று சமாதானம் சொன்னான் அனந்த்.

''அதற்கு நீ போவானேன்?'' என்று வினவினார் பந்த்.

''எனக்கும் அங்கு சிறிது வேலை இருந்தது'' என்று துவங்கிய அனந்தை எரிக்கும் விழிகளுடன் சங்கர் பந்த் பார்த்த சமயத்தில் ஸில்வரும் அங்கு வரவே ''ஸில்வர்! மாளுமி விடுதியில் நமது அறையில் நான் வைத்த மூட்டையைக் காணோம். ஆகவே வேறு புது உடை வாங்கி அணிந்து வந்தேன்'' என்று அவனிடம் தனது வேலையைக் கூறினான்.

ஸில்வர் புன்முறுவல் கொண்டான்.

''ஓகோ! அதற்குத்தான் போனாயா?'' என்று வினவினான்.

''முக்கியமாக அதற்குத்தான்'' என்று இழுத்தான் அனந்த்.

''வேறு அலுவலும் இருந்ததோ?'' என்று இடைமறித்துக் கேட்டான் ஸில்வர்.

''இருந்தது. இந்தப் பால் குடங்கள், சாமக்கிரியைகள் இவற்றைக் கொண்டுவரும் பணி. இதற்காக ராணி வரச் சொன்னாள்.''

''அதற்கு நீங்கள் இருவரும் படகில் போயிருக்கலாமே?'' என்று கேட்டான் ஸில்வர்.

''போயிருக்கலாம். ஆனால் ராணி தான் நீச்சலில் புலி என்று நினைத்துக் கொண்டு திடீரெனக் கடலில் பாய்ந்தாள். ஒரு பெண்ணுக்கு அத்தனை திமிர் இருக்கும்போது நான் எப்படிப் பின்வாங்க முடியும்? ஆகை





யால் நானும் நீந்தினேன். குறுக்கே அந்த இரண்டு சனியன்கள் ஸ்டாண்டனும் ஸ்மித்தும் வராதிருந்தால் அவளைக் கண்டிப்பாய் வெற்றிகொண்டிருப்பேன். எனக்கும் ராணிக்கும் இடையில் எப்பொழுதும் யாராவது வெள்ளைக்காரர் வந்து காரியத்தைக் கெடுக்கிறார்கள்'' என்று அலுத்துப் பேசிய அனந்த் ''தளபதி! தாங்கள் அபிஷேகத்தைக் கவனியுங்கள். நான் வில்வருடன் சென்று வருகிறேன்'' என்று கூறிவிட்டுச் சென்றான் வில்வர் பின்தொடர.

சங்கர்பந்த் தீவிர சிந்தனையுடன் வில்வரையும் அனந்தையும் நோக்கினார் சில விநாடிகள். பிறகு அபிஷேக சாமான்களையும் குடங்களையும் தாங்கிய பணிமக்களுடன் சென்றார் கோட்டைக்குள். நேராக சிவாஜியின் சிலை இருந்த இடத்துக்கருகிலுள்ள ஒரு சிறு அறையில் பாற் குடங்களை வைத்து மற்ற அபிஷேக ஏற்பாடுகளையும் செய்யலானார். அவற்றை முடித்ததும் ராணியும் ஒரு படகில் வந்து சேரவே, அவளுடன் தான் தங்கியிருந்த சிந்து துர்க்கத்தின் தளபதி விடுதிக்குச் சென்றார். அங்கு சென்றதும், ராணியை ஏதும் கேட்கஇயலாததால், ஏதேதோ சிந்தனையில் ஆழ்ந்துவிட்டதால், அபிஷேக காரியங்களை ராணியே கவனிக்கலானாள். இரண்டு மாலுமிகளை விட்டு அபிஷேகம் இரவு எட்டு மணிக்குத் துவங்குமென்றும் தவறாமல் வருமாறும் இங்கிலண்டுக்கும் டெய்லருக்கும் அழைப்பு அனுப்பினாள். பிறகு தளபதி விடுதியிலிருந்து வெளியே சென்று கோட்டைப் பாதுகாப்பு இடங்களைப் பார்வையிட்டாள்.

சுமார் கதிரவன் மலைவாசலில் விழுந்து விளக்குகள் ஏற்றப்பட்ட சமயத்தில் மீண்டும் தளபதி விடுதிக்கு வந்த ராணி தளபதியின் அந்தரங்க அறை சாத்தப்பட்டிருப்பதையும் வெளியே ஒரு காவலன் வாளேந்திக் காவல் புரிவதையும் கண்டு வியந்து, ''யார் உள்ளே இருக்கிறார்கள்?'' என்று விசாரித்தாள்.

''தளபதியாரும் நம் ஐயாவும்தான் இருக்கிறார்கள்'' என்றான் காவலன் பணிவுடன்.

''யார் நம் ஐயா?'' என்று வினவினாள் ராணி.

காவலன் விழித்தான் திருதிருவென்று. ''அவர்தான் தங்களுடன் நீந்தித் தோற்றுப் போனாரே'' என்று விளக்கினான் காவலன்.

''ஓ! அவரா!'' என்று வெளியில் அலட்சியத்தைக் காட்டினாள் ராணி.

''ஆம்'' என்று காவலன் புன்சிரிப்புக் கொண்டான்.

அவன் புன்சிரிப்பைக் கண்டு வெகுண்டு ஏதோ சொல்லப் போன சமயத்தில் சங்கர்பந்தும் அனந்தும் மிகுந்த மகிழ்ச்சியுடன் வெளி வந்ததைக் கண்ட ராணியின் இதயத்தில் எழுந்த கோபம் வியப்பாக மாறவே ''இத்தனை நேரம் என்ன பேசிக் கொண்டிருந்தீர்கள்?'' என்று வினவினாள் ராணி.

சங்கர்பந்த் அவளை நோக்கியபோது புன்னகை அவர் முகம் பூராவையும் ஆட்கொண்டது. ''அனந்தைக் கேட்டே தெரிந்து கொள்'' என்று கூறிவிட்டு வெளியே சென்றார். அவர் சென்றதும் ஒரே பார்வையில் காவலனை விரட்டிவிட்ட இந்திரஜித் ''ராணி! தந்தை சம்மதித்து விட்டார்'' என்று கூறினான்.

''எதற்கு?'' ராணி சீற்றத்துடன் கேட்டாள்.

''நீயும் நானும் சிவாஜீ மகாராஜாவின் அறையில் தங்க'' என்றான் அனந்த்.

''விளையாடுகிறீர்களா?'' என்றாள் ராணி மிதமிஞ்சிய கோபத்துடன்.

அனந்த் சிந்தனை வசப்பட்டான். ''விளையாடும் விஷயம் அல்ல இது'' என்றும் கூறினான்.

''இல்லை'' என்றாள் ராணி.

''இது ஒரு சந்தர்ப்பம் உனக்கு'' என்றான் அனந்த்.

''எனக்கா உங்களுக்கா?''

''முக்கியமாக உனக்கு.''

''என்ன சந்தர்ப்பம்?''

''புரிந்து கொள்வாய் இன்றிரவு. மீதியைத் தந்தையைக் கேட்டுத் தெரிந்துகொள். அவர் சொற்படி நட.'' இதைச் சொன்ன அனந்தும் வெளியேறினான் அந்த இடத்தை விட்டு.

மிகக் கூரிய அறிவுள்ள ராணிக்குத் தந்தையின் நடவடிக்கையிலும் அனந்தின் நடவடிக்கையிலும் ஏதோ பெரிய மர்மம் இருப்பது



✖ நேந்திரங்காய் தோலைப் பொடி பொடியாக நறுக்கி, தேங்காய் எண்ணெயில், கடுகு, உளுத்தம் பருப்பு, பெருங்காயம், மிளகாய் தாளித்து அதைப்போட்டு வதக்கி உப்பு போடவும், இறக்கி, தேங்காய்த் துருவல் சேர்த்தால், நேந்திரங்காய் தோல் கறி ரெடி.

✖ வெண்டைக்காய் காம்புகளை வெய்யிலில் உலர்த்தி வற்றல் செய்து எடுத்து எண்ணெயில் பொரித்து, உப்பு, மிளகாய்த்தூள் சேர்க்கவும்.

✖ எலுமிச்சம் பழத் தோலைத் தூக்கி எறியாமல் உலர்த்தி சீயக்காயுடன் சேர்த்து அரைத்து வைத்துக் கொண்டால் தலையில் தேய்த்துக் குளிக்க உதவும். குளிர்ச்சியாக இருக்கும்.


✖ கல்யாண பூசணி(பெரும் பூசணி)யின் உள்ளே இருக்கும் கதுப்புகளைத் தோசைக்கு அரைக்கும் பொழுது சேர்த்து அரைத்தால் உளுத்தம் பருப்பு அதிகம் சேர்க்க வேண்டாம். தோசையும் மெத்தென்றிருக்கும்.

✖ வாழைப் பழத் தோலைத் தீப் புண்ணுக்கு வைத்துக் கட்டினால் கொப்புளம் இளம்பாமல் இருக்கும்.

✖ பரங்கிக்காயின் விதைகளை உலர்த்தி, உரித்து, பருப்பை அரைத்துப் பாயஸம் செய்தால் நன்றாக இருக்கும்.

—சியாமளா ராகவன்

கல்கி மார்ச் 16ல்



நகைச்சுவை சிறப்பிதழ்

உமாபதி தயாரிக்கிறார்

வாசகர் பங்கு: 'இடுக்கண் வருங்கால் நகுக' என்பர். உங்களுக்குத்துன்பம் ஏதேனும் நேர்ந்தபோதே சிரிக்கும் படியான சம்பவமும் உடன் நடந்திருக்கிறதா? அழுது கொண்டே சிரித்தீர்களா? ரத்தினச் சுருக்கமாகத் துன்பத்தில் இன்பம் கண்ட அந்தச் சம்பவம் பற்றி எழுதி அனுப்புங்கள்.

முடிவு தேதி மார்ச் 1உ

பிரசுரத்துக்கு ஏற்காதவற்றைத் திருப்பி அனுப்ப இயலாது. கடிதப்போக்குவரத்து கிடையாது. உறையின் மேல் 'துன்பத்தில் இன்பம்' என்று குறிப்பிட வேண்டும்.

மட்டும் தெரிந்தது. அதைப் பற்றிய சிந்தனையிலேயே காலம் கழித்த அவன் அபிஷேக நேரத்தில் இளம்பிறையன் தளபதி விடுதியை விட்டு. அவன் வாயிலில் வந்ததும் அவனுடன் சேர்ந்துகொண்ட சங்கர்பந்த் அவனுடன் ஏதோ மெள்ளப் பேசிய வண்ணம்சென்ருர். அதே சமயத்தில் மற்ெருரு திசையிலிருந்து அனந்தும் துலாஜி ஆங்கரேயும் பேசிக் கொண்டே அபிஷேக ஸ்தலத்துக்கு வந்தார்கள்.

அந்த இரண்டு ஜோடிகள் போவதைத் தூரத்திலிருந்து கவனித்த டெய்லரும் இங்க்லண்டும் மற்ெருரு திசையிலிருந்து சிவாஜி சிலையருகில் வந்தார்கள். அந்த மூன்று ஜோடிகளும் வந்ததும் பூஜை செய்பவர் அபிஷேகத்தைத் தொடங்கினர். இரண்டு பாற்குடங்களிலிருந்த பாலை ஒரு பெரும் பாத்திரத்தில் கொட்டி, சிறு குவளையால் மொண்டு மொண்டு அபிஷேகம் செய்தார் சக்கரவர்த்தியின் சிலைக்கு. பிறகு நன்னீரால் நீராட்டி நல்ல பட்டுத் துணியால் துடைத்தார். பிறகு புஷ்பாலங்காரம் நடந்தது. சந்தனம் மூன்று கீற்றுகளாகத் தீட்டப்பட்டது சிவாஜியின் முகத்தில். அபிஷேகம் ஆரம்பிக்கப்பட்டது. முதல் வேதங்களை இரு மகாராஷ்டிரர்கள் ஓதிக் கொண்டிருந்தார்கள். அபிஷேகம் முடிந்ததும் பழம் முதலிய பிரசாதங்கள் எல்லோருக்கும் அளிக்கப்பட்டதும் அர்ச்சகர் சொன்னர்: ''இன்று மகாராஜாவின் பிறந்த நாள். இன்றைய அபிஷேகம் முடிந்ததும் யாராவது ஒரு வீரன் அவரது வாளை அணிந்து முன்பெல்லாம் அவர் தங்கும் பக்கத்துச் சிறு அறையில் படுக்க வேண்டும். இது சம்பிரதாயம்'' என்று அறிவித்தார். ''யார் படுக்கப் போகிருர்கள்?'' என்றும் வினவினர்.

இதற்கு சங்கர்பந்த் பதிலளித்தார். ''இந்திரஜித் அனந்த் அந்த மரியாதையைப் பெறுவார். என் மகளை முதல் நாள் இங்கு காப்பாற்றியது அவர்தான்''என்ருர் தளபதி.

இதை எல்லோரும் கைதட்டி ஆரவாரித்து ஒப்புக்கொள்ளவே, அதுவரை சிவாஜியின் சிலையின் இடையில் கட்டப்பட்டிருந்த வளைந்த வாள் அனந்தின் இடுப்பில் கட்டப்பட்டது அர்ச்சகரால். அவன் தலையில் புஷ்பங்களையும் போட்டார் அர்ச்சகர்.

அனந்த் தலைவணங்கி அந்த மரியாதையை ஏற்றுக் கொண்டான். அபிஷேகம் முடியவே நீண்ட நேரம் ஆகிவிட்டதால் சீக்கிரம் உணவருந்தி மகாராஜாவின் அறைக்குள் சென்று கதவைச் சாத்திக் கொண்டு படுத்தான் இந்திரஜித். அவன் படுத்த இரண்டு நாழிகை கழித்து ராணி தளபதியின் மாளிகையிலிருந்து வெளியே வந்து ஆகாயத்திலிருந்த நட்சத்திரங்களைப் பார்த்தாள். ''நள்ளிரவு தாண்டி விட்டது.'' என்று கூறிவிட்டு, மெள்ள நடந்து அனந்த் படுத்திருந்த அறைக்கு வந்து கதவை மெள்ளத் திறந்தாள். உள்ளே சென்று கதவை மூடியும் கொண்டாள்.

சிந்து துர்க்கம் நன்ருக உறங்கிக் கொண்டிருந்தது. காவல் புரிந்த மாலுமிகளைத் தவிர மற்றவர் உறங்கிக் கொண்டிருந்



எது அதிகம்?

எது அதிகப் பசுமை?
உள்ளத்தின் உவகையான நினைவுகளா?
உடையின் எடுப்பான நிறங்களா?
எது அதிக வெண்மை?
வஞ்சியின் கழுத்தில் முத்துச்சரமா?
வதனத்தில் விகசிக்கும் புன்னகையா?
எது அதிக இனிமை?
கண்களில் நிலவும் அன்பொளியா?
காண்பவர் உள்ளத்தின் எதிரொலியா?
மேலட்டையில் காட்சி தருபவர்: **பிரீதா.**
வண்ணப்படம் எடுத்தவர்: **என். பிரபாகர்.**

தார்கள். அபிஷேகத்தை முன்னிட்டுக் கொளுத்தப்பட்ட பெரும் பந்தங்களும், விளக்குகளும் அணைக்கப்பட்டு விடவே சின்னஞ் சிறு விளக்குகள் ஏதோ நாலைந்து இடங்களில் எரிந்து கொண்டிருந்தன. அந்தச் சமயத்தில் தளபதி சங்கர்பந்த் தமது மாளிகையிலிருந்து வெளி வந்தார். அக்கம் பக்கம் பார்த்துக் கொண்டு அனந்தும் ராணியும் இருந்த அறைக்குச் சென்று அதன் கதவை இழுத்து வெளியே பூட்டினார்.

பிறகு அங்கிருந்து வேகமாக நடந்து வில்வர் இருந்த இடத்தை அடைந்து உறங்கிக் கொண்டிருந்த வில்வரை எழுப்பி "வில்வர்! இந்தச் சாவியை வைத்துக் கொள். யாரிடமும் கொடுக்காதே" என்றார்.

"என்ன சாவி இது?" என்று விவரம் புரியாததால் விசாரித்தான் வில்வர்.

"என் மகளும் அனந்தும் படுத்திருக்கும் அறையின் சாவி" என்றார் பந்த் கொந்தளித்த உணர்ச்சிகளால் சொற்களில் நெருப்புக் கக்க.

"அப்படியா?" என்றான் வில்வர்.

"ஆம். சிவாஜி சிலையை அடுத்த அறையில் படுத்திருக்கிறார்கள். நாளைக் காலையில் ஒன்று அந்த அயோக்கியன் என் மகளை மணக்க வேண்டும், அல்லது தூக்கில் ஆடவேண்டும்" என்று சாவியை வில்வரிடம் திணித்துவிட்டு வேகமாக நடந்தார் தளபதி தமது விடுதியை நோக்கி.

கையில் சாவியுடன் தரையில் உட்கார்ந்திருந்த வில்வர் தீர்க்க சிந்தனையில் இறங்கினான். பிறகு தனக்குள் சிரித்துக்கொண்டான். இரண்டு நாழிகைகள் தாமதித்தான். அடுத்துத் தனது ஊன்றுகோலை எடுத்துக் கொண்டு சிந்து துர்க்கத்தின் நடுவே நடந்து சென்றான் அதன் பிரதான வாசலை நோக்கி. சிந்து துர்க்கத்தின் நிசப்தத்தில் வில்வரின் ஊன்றுகோல் மெல்ல ஆனால் பயங்கரமாகச் சப்தித்தது. வில்வர் சற்று நின்றான் ஓரிடத்தில். பிறகு தனது ஊன்றுகோலை இரு முறை தட்டினான். அங்கிருந்த கோட்டைப் பாறைகளின் ஏதோ ஒரு மறைவிலிருந்து அவன் அசுரக் கிளி பறந்து வந்து அவன் தோளில் உட்கார்ந்து கொண்டது. அத்துடன் சிந்து துர்க்கத்தின் வாயிலுக்கு வந்த வில்வர் அதை மேலே எடுத்துப் பறக்க விட்டான். அந்த அசுரக் கிளி வேகமாகப் பறந்தது காஸண்ட்ராவை நோக்கி. திருப்தியடைந்த முகத்துடன் வில்வர் சிந்து துர்க்கத்தின் பிரதான வாயிலில் உட்கார்ந்து கொண்டான். மிகக் கூரிய அவன் மூளை வெகு வேகமாக வேலை செய்து கொண்டிருந்தது. "ஐ நோ த கேம். மை ப்ரண்ட் கான் பூல் அதர்ஸ், நாட் மி (நண்பனே! உன் விஷயம் எனக்குத் தெரியும். மற்றவர்களை ஏமாற்றலாம், என்னை ஏமாற்ற முடியாது)" என்று தனக்குத் தானே சொல்லிக் கொண்டான். அடுத்த ஒரு நாழிகை சென்றது. காஸண்ட்ராவிலிருந்து ஒரு படகு இறக்கப்பட்டது. அது விரைந்து வந்தது சிந்து துர்க்கத்தின் பிரதான வாயிலை நோக்கி.

(தொடரும்)



என் தோழி ஒருத்திக்கு மற்றொரு தோழியிடமிருந்து கிடைத்த, புத்தாண்டு வாழ்த்தில் இருந்த வரிகள்—

இந்த ஓராண்டு முழுவதும் 'மகிழ்ச்சி பொங்கட்டும்' பன்னிரண்டு மாதங்களும் 'வேடிக்கையாக நகரட்டும்' ஐம்பத்திரண்டு வாரங்களும் 'அன்பாக மலரட்டும்' முந்நூற்று அறுபத்தைந்து நாட்களிலும் 'வெற்றி அலங்கரிக்கட்டும்' 8,760 மணி நேரங்களிலும் 'உன் உடல் நலமாக இருக்கட்டும்' 5,25,600 நிமிடங்களிலும் 'அதிர்ஷ்டம் உன் மடியில் விளையாடட்டும்' '...ஓ... ஒவ்வொரு 'நொடியும்' நீ மகிழ்வாயாக. —எழுதியவர்: 'அம்மு'

மகாமகத்துக்கு மாருதி விஜயம்!



ஸ்ரீ ஜயஹனுமான் வண்ணப் படம்

Copy right regd: A. 20286/78

ஜகத்குரு ஸ்ரீ காஞ்சிப் பெரியவர்களால் அருளாசிகள் வழங்கப் பெற்ற சர்வகார்ய சித்தி அளிக்கும் பூஜைக்குரிய படம்

கல்கி ஓவியர் வினு வரைந்தது

கீழ்க்கண்ட முகவரிகளில் கிடைக்கும்:

இன்றே வாங்குங்கள்

R. S. ராமனாதன், ஏஜெண்ட் கல்கி, ஹிந்து 199, காந்தி அடிகள் சாலை, கும்பகோணம். காமாட்சி ஸ்டோர்ஸ், மாமாங்ககுளம் வடகரை, (மணிக்கூண்டு சமீபம்) கும்பகோணம், C. S. தீட்சிதர், 18, பிள்ளையார் கோயில் தெரு, கும்பகோணம்

அளவு, விலை: 13½ × 20" ரூ. 5-00, 9½ × 15" ரூ. 3-00

பூஜைப் புத்தகத்துடன்

தபாலில் பெற விரும்புகிறவர்கள் மட்டும் கீழ்க்கண்ட முகவரிக்குப் படத்தின் கிரயத்துடன் பதிவுத் தபால் செலவு ரூ. 4-00 சேர்த்து முன்னதாக மணியார்டர் செய்யவும்

உரிமையாளர்: **ஸ்ரீமதி சரஸ்வதி வெங்கட்ராமன் w/o வினு (கல்கி) 16, வேலாயுத முதலித் தெரு, நுங்கம்பாக்கம், சென்னை-600 034**

போன்: 89191 (வள்ளுவர் கோட்டம் பஸ் ஸ்டாப் அருகில்)

ஸ்ரீ காஞ்சிப் பெரியவர்கள் வண்ணப் படமும் கிடைக்கும்



மகாமகம் நாள்:
மார்ச் 1, 1980

இம்முறை உங்கள் கும்பகோணம் விஜயம் நெடுநாள் நினைவிலிருக்கட்டும்

பல கோவில்களில் சேவித்து, புண்ணிய நீராடிய மனநிறைவுடன் வீடுதிரும்புமுன்பு, நினைவாக

காளி பிராண்ட்

எவர்சில்வர்/
செம்பு-அடிப்பாகமுடைய
எவர்சில்வர் பாத்திரங்களை
வாங்கிச் செல்லுங்கள்.



கிடைக்குமிடம்:

ஸ்ரீ எம்.வி.எம். ஸ்டோர்ஸ்

("காளி பிராண்டு" துணை நிறுவனம்)

கும்பேசுவரர் சன்னதி,
கும்பகோணம்-1

Grant. KB.7 Tam

உறுத்தல்

விமலா ரமணி

இவன் இறந்துபோய் விட்டால் எனக்கு நிம்மதி! எப்போது சாவான்? எனக்கு எரிச்சல் வருகிறது. பக்கத்துப் படுக்கையைப் பார்க்கிறேன். இரவு விளக்கின் மங்கிய ஒளியில் அவன் கொட்டக்கொட்ட விழித்தபடி படுத்திருப்பது தெரிகிறது. 'சனியன்... இன்னும் தூங்காம விழித்துக் கொண்டிருக்கிறான்!'

அவன் மெல்லத் திரும்பி என்னைப் பார்க்கிறான். ''இன்னும் நீங்க தூங்கவில்லே? எனக்குத்தான் இந்தப் பாழாய்ப்போன வியாதி. தூங்க விடாம இம்சை பண்றது? நீங்க தூங்கக் கூடாதா?''

—அவன் இருமியபடி மெல்ல என்னிடம் கேட்கிறான்.

எனக்கு 'ஷாக்' அடிக்கிறது.

''சீ....சீ... என்ன வக இப்படிச் சொல்லிட்டே... பன்னிரண்டு மணிக்கு உனக்கு 'ஆண்டிபயாடிக்' தரணும். அப்புறம்...''

''ஆமாம்... அப்புறம் ரெண்டு மணிக்கு ஹார்லிக்ஸ் தரணும். மறுபடியும் நாலு மணிக்கு மருந்து.... இப்படியே மணிக் கணக்கா 'நர்ஸ்' மாதிரி மருந்தும் ஹார்லிக்ஸும் தந்துண்டு இருக்கேளே...எப்போ விஷம் தரப்போறேள்?''

அவன் அழுகிறான். எனக்குப் பாவமாக இருக்கிறது. அவன் தலையை மெல்ல வருடுகிறேன். மயிரெல்லாம் கொட்டித் தலையெல்லாம் சொட்டை சொட்டையாக... உடம்பைத் தொடுகிறேன்... சதையெல்லாம் வற்றி எலும்பு எலும்பாக.... அந்த உள்ளம்?... அதைத்தான் நான் ரொம்ப வருஷங்களுக்கு முன் தொட்டு விட்டேன்!

அருவருப்பை என் மனத்துள் அழித்துக் கொண்டு அவனைப் பார்க்கிறேன்.



வசுமதி என்கிற வசு அழகாக, இளமையுடன், சதைப் பிடிப்புடன் 'கல்கல்' என்ற சதங்கை ஒலியுடன் நடனமாடிக் கொண்டிருக்கிறாள்!

நீள நீளமான விரல்கள். அதில் பூசப்பட்ட 'ஆல்டா'வில் விரல்கள் இன்னும் அழகாக இருக்கின்றன. அவள் சிரிக்கும்போது 'லிப்ஸ்டிக்' சிவப்புக்கு இடையே பற்கள் பளீரென்று மின்னுகின்றன. அவள் பரத நாட்டிய உடைகளுக்கு நடுவே சின்ன இடை வெண்மையாகச் சிரிக்கிறது. கால்களைத் தூக்கி அவள் ஆடும்போது பஞ்சுப் பாதங்கள் கொஞ்சும் சலங்கையுடன் 'தாம் தித்தாம்' போடுகின்றன. ''தெருவில் வாரானோ?''— என்று அவள் மேடையில் தேடினால், என்னைத் தான் தேடுவதாக நினைத்துக்கொள்வேன்.

''பாலும் கசந்ததடி, படுக்கை நொந்ததடி'' — என்று அவள் முகத்தை பாவத்துடன் சுழிக்கும்போது—''நான் வரட்டுமா?'' என்று எனக்குள் கேட்டுக் கொள்வேன்.

''நீல மயிலே.:: கோல மயிலே'' என்று அவள் மயிலைத் தூது விடும்போது அவளைச் சிவகாமியாகவும், என்னை மாமல்லனாகவும் கற்பனை செய்து கொண்டு மகிழ்வேன்.

நான் ஒரு சபாவின் செக்ரட்டரி. எங்கள் சபாவில் குமாரி வசுமதியின் நடனங்கள் அடிக்கடி நடந்து கொண்டே இருக்கும். நானும் அவள் வீட்டுக்கு அடிக்கடி நடப்பேன். நான் அழகாக இருப்பேன்... வெப்பாக.:: ராஜபார்ட் களை முகத்தில்.

நாடக அனுபவங்கள் இதயத்தில், நளினங்கள் என் இயல்பில், விரிசல்கள் என் வாழ்வில்!

ஆரம்பத்தில் தன் நடனக் கச்சேரிகளுக்குக் கறாராக அவள் 'ரேட்' பேசினாள். அப்புறம் சிரித்தாள். அப்புறம் கொஞ்சம் தன் கண்டிஷன்களைத் தளர்த்திக் கொண்டாள். அப்புறம் காப்பி டிபன் தந்தாள் எனக்கு. அப்புறம் நான் சன்மானத் தொகையுடன் சில பரிசுகள் என் செலவில் வாங்கித் தந்தேன். அப்புறம் சன்மானத் தொகையே தராமல் பரிசுகள் மட்டும் தந்து கொண்டிருந்தேன்.

அப்புறம்....

அவள் படுக்கை அறையில் எனக்குப் பரிசுகள் தர ஆரம்பித்தாள்.

தப்பிதமாக நினைக்காதீர்கள். எங்களுக்குத் திருமணமாகி விட்டது.

குமாரி வசுமதி மிஸஸ். வசுமதி ராமச்சந்திரன் ஆனாள்.

அடியேன் பெயர்தான் ராமச்சந்திரன்.

ஆரம்பத்தில் அவள் கச்சேரிகள் களைத்தன. மூன்றும் மணி தருக மூன்றுவது வரிசையில் அமர்ந்து கொண்டு அவள் நடனத்தைக் கண்டு



கவித்த நான், இப்போது உரிமையுடன் முதல் வரிசையில் அமர்ந்து உற்றுப் பார்த்து ரசித்தேன்.

ஆனால் என்னால்தான் அதே மாதிரி அமர்ந்திருக்க முடியவில்லை.

என் பெண்டாட்டியின் உடம்பை அத்தனை பேரும் ரசிக்கிறார்கள் என்கிற நினைப்பு! ''பாலும் கசந்ததடி'' — என்று அவள் பாடினால் யாராவது ஒருவன் முன்பு நான் நினைத்த மாதிரியே நினைப்பானோ என்று குறுகுறுப்பு!

மொத்தத்தில் உறவின் வட்டம் அதிகமாக, நான் சுருங்கிப் போனேன்.

அப்போதுதான் அந்தத் தடை உத்தரவை அவளுக்குப் போட்டேன்.

''இனி நீ மேடையில் நடனமாடக்கூடாது.''

இதைக் கேட்ட அவள் ஆடிப்போனாள். அதிர்ந்து ஒரு வார்த்தை சொல்லவில்லை. ஒரேயடியாக அவள் வாழ்வே ஆட்டம் கண்டது. அவள் ஆடுவதை நிறுத்திவிட்டாள். ஆனால் இப்போது நான் ஆடிக் கொண்டிருக்கிறேன். ஆமாம். திடீரென்று ஒரு அட்டாக்!

திடீரென்று கைகால்கள் மரத்துப் போய் விட்டன என் வகவுக்கு. அன்று படுக்கையில் வீழ்ந்தவள்தான்....

அவள் காலில் அடிபட்டிருந்தால் கூடக் குணமாகி ஆடியிருப்பாள்.

நான் போட்ட தடையுத்தரவு அவள் இதயத்தில் வீழ்ந்த அடி...

வாழ்வில் வீழ்ந்த அடி....!

நானும் இத்தனை பெரிய பின் விளைவுகளை எதிர்பார்க்கவில்லை.

கைகால்களை அசைக்க முடியவில்லை... உடம்பே மரத்துப் போன மாதிரி ஆகி விட்டது! எனக்கு உறுத்தியது.

''என்னால்தான் உனக்கு இந்தக் கதி... உன்னை ராப்பகலாகக் கவனித்துக் குணமடையச் செய்து மறுபடியும் உன்னை மேடையில் நடனமாட வைப்பது என் பொறுப்பு'' என்று அவள் மெலிந்த கரங்களைப் பிடித்துக் கொண்டு சத்தியம் செய்தேன். அவள் விரக்தியாகச் சிரித்தாள்.

மலை ஏறுவதில் அமெரிக்கப் பெண் ஒருத்தி புதிய சாதனை புரிந்திருக்கிறாள். இமயமலையில் 25 ஆயிரத்து 536 அடி உயரம் வரை அந்தப் பெண் ஏறினாள். இதுவரை எந்தப் பெண்ணும் இவ்வளவு உயரம் ஏறியது இல்லை. 'செரி பீச்' என்பது அந்தப் பெண்ணின் பெயர். 32 வயதாகிறது. நர்சாகப் பணிபுரிந்து வருகிறார்.

ஆதாரம்: ''இல்லஸ்டிரேட்

தகவல்: எஸ். சையது



நர்ஸ் போடாமல் நானே அவள் தேவைகளைக் கவனித்தேன். ஆனால்....?

இப்போது கொஞ்ச நாட்களாக எனக்கு எரிச்சல் வர ஆரம்பித்திருக்கிறது.

என் உறுத்தல்கள் மறைந்து இவள் செத்துத் தொலைக்க மாட்டாளா என்கிற ஆத்திரம் வர ஆரம்பித்திருக்கிறது. நான் தாங்கி எத்தனை ஆண்டுகள் ஆகிவிட்டன!

இவள் படுக்கையில் வீழ்ந்ததிலிருந்து நான் எழுந்து உட்கார்ந்து விட்டேன்.

டாக்டர்களாலேயே கண்டுபிடிக்க முடியாத வியாதி.

என் தூக்கத்தையும் பணத்தையும், இளமையையும் பலி கேட்கும் வியாதி!

நான் ஏன் பைத்தியக்காரனைப் போல் ''நர்ஸ் வேண்டாம்... நானே உன்னைக் கவனிக்கிறேன்'' என்று சொன்னேன்?

அதன் விளைவுதான் — காலையில் அவளுக்குப் பல் தேய்த்து விட்டு: மருந்து தந்து, காப்பி தந்து, ரொட்டி வாட்டித் தந்து... உடம்பைத் துடைத்துவிட்டு... டெம்பரேச்சர் பார்த்து 'சார்ட்' எழுதி, வேளைப்படி எல்லாம் செய்து....

எனக்கு அலுத்து விட்டது.

இப்போது அந்த உடம்பில் உயிர் மட்டும் எங்கோ ஒட்டிக் கொண்டிருந்தது. என் உள்ளத்தில் பாசமில்லை.

படுக்கையைச் சுத்தம் செய்து அவளைப் படுக்கையில் கிடத்தினேன். அவள் ஆயாசத்துடன் சாய்ந்தாள்.

''நாளைக்கு என்ன நாள்....? ஞாபகமிருக்கா?'' — அவள் மெல்லக் கேட்டாள்.

''என்ன நாள்? எனக்கு இப்போ ஒரு எழவும் ஞாபகம் வரதில்லை.''

நிஜமாகவே கொஞ்சம் கோபமாகச் சொல்லி விட்டேன் போலிருக்கிறது. அவள் விம்முகிற சப்தம்.

'சட்'டென்று திரும்பிப் பார்த்தேன்.

''நாளைக்கு இழவு நாள்தான்... எனக்கில்லை.... உங்களுக்கு.''

''என்ன பேத்தறே? ஸாரி வசு... ஏதோ கோபத்துலே...'' — நான் குழைந்தேன்.

''உங்க கோபத்துக்கு நியாயம் இருக்கு. நாளைக்கு நம்மளோட வெட்டிங் அன்னிவர்சரி டே. உங்களைப் பொறுத்தவரை என்னைக் கல்யாணம் பண்ணிண்டதுதான் உங்களோட துன்பத்துக்குக் காரணம்.... அது இழவு நாள்தான்....''

நான் அவள் கண்களைத் துடைத்தேன்.

''என்ன வசு இது? நீ கூடிய சீக்கிரம் குணமாகத்தான் போறே... பழையபடி டான்ஸ் ஆடத்தான் போறே.... நான் முதல் வரிசையிலே உட்கார்ந்து ரசிக்கத்தான் போறேன்...''

—என் குரலில் பொய் என்னைக் காட்டிக் கொடுக்குமோ என்ற பயம் எனக்கு. ஆனால் ஒரு நிமிடம் வசு பேசாமல் இருந்தாள். அந்தக் காட்சியைக் கற்பனை செய்து பார்த்துக் கொண்டாளோ என்னவோ?

''இனிமேல் நான் குணமாகணும்கிறது வெறும் கற்பனை. என் சாவுலேதான் இனிமே பரிபூரண குணம்... உங்க கிட்டே ஒரு சின்ன வேண்டுகோள்.... நான் கூடிய சீக்கிரம் உங்களுக்குத் தொல்லை கொடுக்

எழுத்தாளர் ஜோக்ஸ்!



எழுத்தாளர்: இன்றைக்கு என் கதை பிரசுரமாயிடுச்சு!
நண்பர்: ஆச்சரியமாயிருக்கே!
எழுத்தாளர்: இந்தக் கதை பிரசுரமானா இனி மேல் கதையே எழுத மாட்டேன்னு உறுதி மொழி கொடுத்திருந்தேன். ஏ. கணேஷ்

●


எழுத்தாளர் பையன் (மற்றொரு எழுத்தாளரிடம்): மாமா! எங்க அப்பா அவசரமா ஒரு கதைக்கு ஃபனாட் கடனாக வாங்கிவரச் சொன்னார். அடுத்த வாரம் திருப்பித் தந்துடறாராம்.

— லலிதா செல்லப்பா

எழுத்தாளர்: எல்லாக் கதைகளும் திரும்பி வருதே. அதற்கு என்ன செய்யலாம்?
நண்பர்: "திரும்பி வராத கதை"ன்னு ஒரு கதை எழுதி அனுப்புங்க.

●

எழுத்தாளர்: "மனைவியை அடக்குவது எப்படி?" என்கிற புஸ்தகம் எழுதி இருக்கேன். அதற்கு ஒரு புனைபெயர் சொல்லுங்க.
நண்பர்: "மனைவி தாசன்"னு வச்சிடுங்க.



காமப் போயிடுவேன்னு நினைக்கிறேன். அப்புறமா நீங்க சந்தோஷமா இருக்கணும். இன்னொரு கல்யாணம்....''

நான் சட்டென்று அவள் வாயைப் பொத்துகிறேன்.

''சரி, சரி. அதையெல்லாம் பற்றி அப்புறமாப் பேசலாம். நாளைக்கு நம்ம வெட்டிங் அனிவர்சரி.... அதை முதல்லே சந்தோஷமாக் கொண்டாடுவோம்...''

அவளை மெல்ல என் தோள்களில் சாய்த்துக்கொண்டு தட்டித் தூங்கப் பண்ணுகிறேன். குளிருக்கு அடக்க ஒடுக்கமாகப் படுத்துக் கொண்டிருக்கும் பூனைக் குட்டி போல் அவள் என் தோள்களில் கைகளை முடக்கிக் கொண்டு ஒடுங்கிப் படுத்துக் கொண்டாள். ஒரு சோளத்தட்டை மாதிரி எத்தனை இலேசாக இருக்கிறாள் இவள்!

ஆனால்....?

காலையில்...?

அவள் ரொம்பக் கனத்தாள். என் தோளிலிருந்து அவளை விலக்க முடியவில்லை.

என் தோளை அழுத்தியபடி, என் கைகளைக் கட்டியபடி.... என் வசு உறங்கிப் போனாள். ஒரேயடியாக உறங்கிப் போனாள்....!

அவள் சொன்னது நிஜம்தான். மறுநாள் எனக்கு இழவு நாள்! என் வசு செத்துப் போன இழவு நாள்!

ஆனாலும் என் மனத்துள் நிம்மதி....

இனி வசுவின் துன்பம் இல்லை. பிக்கல் இல்லை. பிடுங்கல் இல்லை.... தூக்கம் விழிக்க வேண்டிய அவசியம் இல்லை....

கூடிய சீக்கிரம் திருமணம். ஆமாம்... அதற்குள் பெண் கேட்டு வர ஆரம்பித்து விட்டார்கள். நான்தான் போலி நடிப்புக் காட்டிய வண்ணம் இருக்கிறேன்.

கூடிய சீக்கிரம் வேறு திருமணம் செய்து கொண்டு....

ஆனால்....?

இப்போதெல்லாம் இரவு தூக்கம் வர மாட்டேன் என்கிறது. திடீர் திடீர் என்று ராத்திரி பன்னிரண்டு மணிக்கும் இரண்டு மணிக்கும் நான்கு மணிக்கும் விழித்துக் கொள்கிறேன்.

கண்களை மூடினால்...

''தண்ணி.... ''

''மருந்து தரேளா?''

''தாகமாக இருக்கு...''

வசு எங்கிருந்தோ குரல் கொடுத்துக் கொண்டே இருக்கிறாள். திடீர் திடீரென்று தூக்கி வாரிப் போடுகிறது.

தோள்கள் கனக்கின்றன.... 'சட்'டென்று விழித்துக் கொள்கிறேன்.

என் கைகளை யாரோ பிடிக்கிற மாதிரி...

''வசு! வசு!.... நீ எங்கிருக்கிறாய்?''


நான் புலம்புகிறேன். நான் தூங்கி ரொம்ப நாட்களாகி விட்டன.

என் வசு வெளியில் இல்லை... என் உள்ளத்தில் உறுத்திக் கொண்டே இருக்கிறாள்.

அந்த உறுத்தல் இருக்கும்வரை நான் உறங்க முடியாது!

காலியாகக் கிடக்கும் பக்கத்துக் கட்டிலைத் தடவியபடி 'வசு...வசு!' என்று பிதற்றியபடி, இப்போதுதான் எதையோ புதிதாகப் புரிந்து கொண்டவன்போல், தூக்கமில்லாமல், 'உறுத்தல்' இரவுகளை ஒவ்வொன்றாகக் கழித்துக் கொண்டிருக்கிறேன்.

ஒற்றன் 4X-1   சித்திரக்கதை: புஞ்ஜாய்   7




'அன்னை யாருக்கு' நன்றி

பெற்றோர் ஆசிரியர் சங்கம் பள்ளிகளில் பள்ளிக்கூடக் கட்டிட நிதி திரட்டும் பொருட்டே அமைக்கப்பட்டுச் செயல்படுவதாகப் பொதுவான கருத்து நிலவுகிறது. ஆனால் எங்கள் பள்ளியில் நிலைமை வேறு.

ஒரு நல்ல மனம் படைத்த தாய் குழந்தைகளின் உடல் நலத்தை விருத்தி செய்யும் சத்துணவு கலந்த டானிக் ஒரு மருந்து தயாரிப்பாளரிடம் நன்கொடையாகப் பெற்றுத் தந்துள்ளார். அதனை மாணவர்கட்குத் தினமும் காலை 10 மணி அளவில் ஊட்டுவதில் தாய்மார்கள் பங்கேற்கின்றனர். விழாக் காலங்களில் தாங்களே சிற்றுண்டி தயாரித்துப் பங்கேற்கும் குழந்தைகட்கு அளிப்பது கண்கொள்ளாக்காட்சி. தத்தம் குழந்தைகளின் கல்வி முன்னேற்றம் பற்றி தாய்மார்கள் ஆசிரியர்களுடன் அடிக்கடி தொடர்பு கொள்வதால் ஆசிரியர் பணி எளிதாகிறது. குழந்தையின் கல்வித் தரமும் உயர்கிறது.

—ஜி. கே. பார்வதி



தொடரும்.

கல்யாணம் ஆகாத பெண்களுக்கு மட்டும்

செவ்வாய்க் கிழமை வன்று பூஜை அறையின் மணையில் பச்சரிசி மாவி னால் இதய கமலம் கோலம் போட்டுக் குத்து விளக்கில் ஐந்து முகம் திரிபோட்டு நெய் விட்டுத் தீபம் ஏற்ற வேண்டும்.

1 வெற்றிலை, 1 பாக்கு 1 பழம் (எதுவாக இருப் பினும் சரி) நிவேதனம் செய்ய வேண்டும். பிறகு அந்தக் குத்து விளக்கை 16 சுற்றுச் சுற்றி நமஸ் காரம் செய்து பிரார்த் தனை செய்து கொள்ள வேண்டும். அந்த நிவே தனம் பொருள்களை அரு கில் உள்ள கோவிலில் கொடுத்துவிட வேண்டும். மாரியம்மன் கோவிலாக இருந்தால் நல்லது.

இவ்விதம் 16 செவ் வாய்க் கிழமைகள் செய்ய வேண்டும். அன்று காலை யில் ஒரு டம்ளர் பால் மதியம் உணவு. இரவு பால் பழம் மட்டுமே சாப் பிட வேண்டும். பாயில் படுக்காமல் தனியாகப் படுக்க வேண்டும்.

இப் முறைப்படி விரதம் இருந்தால் சீக்கிரமே திரு மணம் நடக்கும்.

—பிரியா பாலு



காதல் என்பது வேறு

— சுந்தரராஜன்

ஸௌம்யா மெல்லக் கதவைத் தள்ளினாள்.

"யெஸ் ப்ளீஸ்."

அவள் உள்ளே நுழைந்து கதவைத் தன் முதுகுப் பக்கமாகக் கைகளைக் கொண்டு போய்ச் சாத்தினாள். கையில் இருந்த கைக்குட்டையால் நெற்றியை ஒத்தி எடுத்தாள். ஒரு மெல்லிய கோடாகத் தன் இதழ்களில் ஒரு புன்னகையைக் கொண்டு வந்தாள். மேஜையை நோக்கி நடக்க ஆரம்பித்தாள்.

அப்போதுதான் அவளைக் கவனித்தார் பாலாஜி. புருவங்கள் மேலேறின. முகத்தில் உணர்ச்சிகள் மாறின. தம் நாற்காலியைப் பின்னுக்குத் தள்ளிக் கொண்டு எழுந்திருக்க முயன்றார். பின் தம்மைச் சமாளித்துக்கொண்டார்.

"ப்ளீஸ் ஸிட் டவுன்!"

"தேங்க்ஸ்."

ஸௌம்யா உட்கார்ந்து கொண்டாள். பாலாஜி அவளையே ஒரு விநாடி பார்த்தார்.

"என் பெயர் பாலாஜி. மானேஜர்! எனக்கு ஸ்டெனோ தேவையென்பதால்தான் இந்த இண்டர்வ்யூ."

"வணக்கம். என் பெயர் ஸௌம்யா."

அவள் கையைக் கூப்பினாள். பாலாஜி கையைக் கூப்பக் கூட மறந்து போனார். ஸௌம்யாவையே கூர்ந்து பார்த்தார். அவளுக்குக் கொஞ்சம் கூச்சமாக இருந்தது. குனிந்து மேஜையைப் பார்க்க ஆரம்பித்தாள்.

கொஞ்ச நிமிடங்கள் சும்மா ஓடின.

"ஓ.... சாரி!" — பாலாஜி மௌனத்தைக் கலைத்தார். ஸொம்யா நிமிர்ந்தாள்.

"உங்களைப் பற்றி என்ன சொல்லிக் கொள்ள விரும்புகிறீர்கள்?"

ஸௌம்யா யோசித்தாள். என்ன சொல்லிக்கொள்வது? வாழ்க்கையில் ஒரேயடியாக வெறுப்பு வந்து விட்டது என்று சொல்லிக் கொள்ளலாமா? எங்கு திரும்பினாலும் சுயநலமும் பேராசையும்தான் ஆட்சி செய்கின்றன என்று சொல்லலாமா? அன்பு எல்லோருக்கும் கிடைத்து விடுவது கிடையாது; அன்பைப் பெறுவதற்கு ஒரே தகுதி அந்த



அன்பைப் பெற வேண்டிய நிலையில் இல்லாமல் இருப்பதுதான் என்று ஒரு தடவை அழுது தீர்க்கலாமா?

நினைவுகளைக் கலைத்துக் கொண்ட ஸௌம்யா பாலாஜியைப் பார்த்தாள். ஒரு நாற்பது வயதாவது இருக்கும் போலத் தோன்றியது. அந்த முகமா உணர்ச்சிகளைக் கிளற முடியும் எனத் தனக்குள் கேட்டுக் கொண்டாள்.

அவள் தன்னைப் பெண் பார்க்க வந்த அநேகம் பேர்களை நமஸ்கரித்து விட்டு நிமிர்ந்து பார்த்தது உண்டு. அப்போதெல்லாம் எழாத உணர்ச்சிகள் இப்போது எப்படித் திடீரென்று முளைத்துவிட முடியும்? என்று குழம்பிப் போனாள்.

"பேட்டிக்கு ரொம்ப நேரம் எடுத்துக் கொள்கிறோம் என்று எண்ணுகிறேன்."

பாலாஜி மெதுவாகச் சிரித்தார். அது ஸௌம்யாவின் இதழ்களில் கிளை விட்டது.

"ஓ, ஐ ஆம் ஸாரி! நான் ஏற்கனவே சொன்ன மாதிரி என் பெயர் ஸௌம்யா. மிஸ் ஸௌம்யா சத்தியமூர்த்தி. பி. ஏ. பாஸ் செய்திருக்கிறேன். டைப்ரைட்டிங், ஷார்ட் ஹேண்ட் எல்லாம் பொழுது போகாமல் கற்றுக் கொண்டேன். இப்போது எனக்கு அவை யெல்லாம் உதவி செய்யப் போகின்றன."

பாலாஜி கொஞ்ச நேரம் பேப்பர்களைப்படித்துக் கொண்டிருந்தார்.

"ஐ ஆம் சாரி ஃபார் த கொஸ்டின். ஏன் இன்னும் நீங்கள் திருமணம் செய்து கொள்ளவில்லை?" ஒரு சோகம் வந்து படர்ந்தது அவள் முகத்தில். அதையும் மீறிக் கொண்டு ஒரு புன்னகை எழுந்தது.

"ஏன் இன்னும் யாரும் என்னைத்திருமணம் செய்து கொள்ளவில்லை எனக் கேளுங்கள்."

பாலாஜிக்குக் கொஞ்சம் வருத்தம் வந்தது. கேள்விக்காகத் தம்மையே நொந்து கொண்டார்.

இரண்டே நாட்களில் ஸௌம்யா மானேஜர் பாலாஜியின் ஸ்டெனோவாக அமர்ந்தாள்.

"ஸௌம்யா..."

அவள் பதில் பேசாமல் தன் முன்னால் இருந்த மேஜை மேல்வைக்கப்பட்டிருந்த காப்பித் தம்ளரையே பார்த்துக் கொண்டிருந்தாள். மானேஜருடன் கிளம்பிவந்தது எவ்வளவு தூரம் சரி என்று தெரியவில்லை. மாலையில் வந்து பாலாஜி தம்முடன் காப்பி சாப்பிட என்று வரும்படி அழைத்தபோது, மனம் குழம்பினாலும், 'மாட்டேன்' என்று சொல்ல முடியாமல் தவித்துத்தான் போனாள். வேலைக்குச் சேர்ந்த ஒரு மாதத்தில் அவள் மனத்தில் கிளம்பியிருந்த உருவமற்ற எண்ணங்களும் அர்த்தமற்றவை எனத் தோன்றிய கனவுகளும் அவளைப் பாலாஜியுடன் கிளம்ப வைத்தன.

"ஸௌம்யா! என்னைத் தப்பாக நினைக்க வேண்டாம். ஏதோ உன் வாழ்வின் ரகசியங்களை அநாவசியமாகத் தெரிந்து கொள்ள முயல்கிறேன்னு நினைக்காதே..."

அவள் இன்னும் குனிந்து கொண்டுதான் இருந்தாள்.

பாலாஜி மௌனமாக ஸௌம்யாவைப் பார்த்துக் கொண்டிருந்தார். அவள் ஒரு பெருமூச்சுடன் கூறினாள்.

"எனக்கும் ஆசைகள், கனவுகள், தாபங்கள் எல்லாம் இருந்தன, சார்! என்னைப் பெண் பார்க்க வந்தவங்களை யெல்லாம் ஆரம்பத்திலே நானும் நம்பிக்கையோடு தான் பார்த்தேன். ஆனா, அவங்களுக்கு என் மூஞ்சியையும் உடலையும் பார்த்து ஏற்படற சந்தோஷம், காலைப் பார்த்ததும் அப்படியே மூட்டை கட்டிண்டு ஓடிப் போயிடும்."

பாலாஜியைப் பார்த்தாள் ஸௌம்யா. அவர் ஒன்றும் பேசவில்லை.

"திடீர்னு ஒரு நாள் நித்தம் நித்தம் செத்துப் பிழைக்கும் என் நம்பிக்கை வெறும் போலின்னு எனக்குத் தெரிஞ்சுபோச்சு. பிடிப்பா இருந்த கல்யாண நம்பிக்கையையும் உதறி எறிஞ்ச பிறகு, வேலைக்குப் போகலாம்னு தீர்மானிச்சேன்."

ஸௌம்யா கொஞ்ச நேரம் மௌனமானாள்.

"சாரி சார்! நான் வீணா என் கதையைச்சொல்லி உங்க 'மூடை' ஸ்பாயில் பண்ணிட்டேன்."

"நாட் அட் ஆல்!" — பாலாஜி எழுந்து கொண்டார்.



"சௌம்யா, உன் கதையைக் கேட்ட பிறகு, என்னைப் பத்தியும் சொல்லாமல் இருக்கலாமா?" என்று கூறிய பாலாஜி அவளிடம் தம்மைப் பற்றிச் சொன்னார். தமக்குக் கல்யாணம் ஆகிவிட்டதையும் சொன்னார். தம் வயது முப்பத்தாறுதான் என்றும், ஆறு வருஷங்களுக்கு முன்பே தம் மனைவி தம்மை விட்டு இறந்து போய்விட்டாள் என்றும் சொன்னார்.

"சௌம்யா, சொல்லு! எனக்குக் கல்யாணம் ஆகிவிட்டது என அறிந்து என்மேல் கோபம் வருது, இல்லையா?"

"நெவர்...." — அவள் சிரித்தாள். "உங்களுக்கு இத்தனை வயசு வரைக்கும் கல்யாணம் ஆகாமல் இருக்கலாம்னு நான் எதிர்பார்க்க, நீங்கள் என்ன நொண்டியா?"

பாலாஜி இன்னும் கொஞ்சம் நெருக்கமாக வந்தார்.

"சௌம்யா! எனக்கு ஏழெட்டு வயசில் ஒரு பெண் இருக்கா! ஆனாலும் நான் உன்னைக் காதலிக்கிறேன், சௌம்யா! நீ எனக்குத் துணையாக வருவாயா?"

நிர்வாணமாகத் தன் முன் விழுந்த கேள்வியைக் கண்டு திகைத்துப் போனாள் அவள்.

"யூ மீன் இட்? ரியலி...." — வார்த்தைகள் கிடைக்காமல் திண்டாடிப் போனாள்.

"ஆமாம், சௌம்யா. ப்ளீஸ், சரி என்று சொல்லு."

மேஜை மேல் இருந்த தன் கையின்மேல் வைக்கப்பட்ட பாலாஜியின் கைமேல் தன் இன்னொரு கையை வைத்து அவர் கையைச் சிறைப்படுத்தினாள்.

"சௌம்யா! ஐ ஆம் ஃபார்சுனேட்! நாளை என் பெண் வருகிறாள். நீயும் ஸ்டேஷனுக்கு வரயா? அவளும் தன்னோட புது அம்மாவைப் பார்க்கட்டும்."

சௌம்யா நேரத்தைக் கேட்டுக் கொண்டாள்.

எப்படியோ நேரமாகிவிட்டது சௌம்யா ஸ்டேஷனுக்கு வருவதற்குள். வாசலிலேயே காரில் உட்கார்ந்து கொண்டிருந்த பாலாஜி கண்களில் பட்டாள். அவருக்கு அருகிலேயே உட்கார்ந்திருந்தாள் ஒரு சிறுமி. பாலாஜி ஜாடை நிறைய இருந்தது அவள் முகத்தில்.

பாலாஜி உற்சாகத்துடன் காரை நிறுத்தினார். சௌம்யா காரில் பின் சீட்டில் ஏறிக் கொண்டாள். கார் கிளம்பியது.

"ஏங்க, குழந்தை எட்டணாவை விழுங்கிட்டா. டாக்டரைக் கூப்பிடுங்க."

"வேண்டாம். எட்டணாவோடே போகட்டும். டாக்டர் வந்தால் ஐந்து ரூபாயாவது விழுங்கிவோர்!"

— சுந்தரம்



"சௌம்யா, இவள் என் பெண் ரேகா. ரேகா, இதுதான் இனிமே உன் அம்மா! நீ இனிமே தாத்தா ஊரில் படிக்க வேண்டாம். இங்கேயே எங்களோடு இருக்கலாம்."

ரேகா திரும்பி சௌம்யாவைப் பார்த்தாள். அவள் முகத்தில் மகிழ்ச்சி பொங்கியது.

"என் புது அம்மா, ரொம்ப அழகா இருக்காங்க, அப்பா!"

சௌம்யாவுக்கு ரேகாவின் புகழ்மொழி வெட்கத்தை ஊட்டியது. பாலாஜியின் மனத்தில் ஒரு நிம்மதி வந்து உட்கார்ந்துகொண்டது.

"ஏம்மா, ரேகா, தனியாவா வந்தே ஊரில் இருந்து?"

"இல்லையே! என் ஃப்ரெண்டோட அப்பா கூட வந்தேன். தாத்தா, பாட்டி இரண்டு பேருமே வர முடியல்லே!"

சௌம்யாவுக்கு ரேகாவை ரொம்பப் பிடித்துப் போயிற்று. அந்த அழகான கண்களும், கண்களில் தெரிந்த துறுதுறுப்பும் அவளை அப்படியே கவர்ந்து கொண்டன. ரேகாவை எடுத்து மார்போடு அணைத்துக் கொள்ள வேண்டும் என்ற தாய்மை உணர்ச்சி 'குபீர்' என்று அவளுக்குள் பொங்கியது.

அவள் மனத்தில் ஓடிய உணர்ச்சிகளை, கண்ணாடியில் தெரிந்த அவள் முகத்தைப் பார்த்துப் புரிந்து கொள்ள முயன்று கொண்டிருந்தார் பாலாஜி.

கார் பாலாஜியின் வீட்டு வாசலில் போய் நின்றது. வேலைக்காரன் வாசலிலேயே நின்று கொண்டிருந்தான். பாலாஜி முதலில் இறங்கினார். காரைச் சுற்றி வந்து, ரேகாவுக்காகக் கதவைத் திறந்தார். அதற்குள் சௌம்யா கீழே இறங்கினாள்.

ரேகா காரிலிருந்து மெதுவாகக் கீழே இறங்கினாள்.

"நான்தான் வீட்டுக்குள் ஃபஸ்ட் போவேன்!" ரேகா மெதுவாக வீட்டின் உள் நோக்கி நடக்க ஆரம்பித்தாள்.— நொண்டி, நொண்டி! துணையாகத் தொடர்ந்தான் வேலைக்காரன்.

சௌம்யா சட்டென்று பாலாஜியின் பக்கம் திரும்பினாள். அவர் எங்கேயோ பார்க்க முயன்றார். சௌம்யா விருட்டென்று காரின் கதவைத் திறந்து கொண்டு, உள்ளே ஏறிக் கொண்டாள். பாலாஜி திகைத்தார்.

"சௌம்யா!"

"ப்ளீஸ், ஸார்! என்னைக் கொண்டுபோய் விட்டு விடுங்கள்."

"சௌம்யா, என்ன இது? நாம் பேசியது எல்லாம் என்ன ஆச்சு? நம் காதல் என்ன ஆச்சு?"

"நோ!" — கத்த முயன்ற சௌம்யா அடக்கிக் கொண்டாள். "நான்தான் உங்களைக் காதலித்தேன். நீங்கள் என்னைக் காதலிக்கவே இல்லை. உங்கள் பாசத்தைக் காதல்னு புரிஞ்சுகண்டு, தப்புப் பண்ண இருந்தேன். நல்ல வேளை!"

பாலாஜி கொஞ்ச நேரம் ஏதோ யோசித்தார். பின் மீண்டும் காரைச் சுற்றி வந்து காருக்குள் ஏறி அமர்ந்தார்.

கார் கிளம்பியது.

இந்தியாவிலேயே முதல் முறையாக...



கோகுல்

ஸான்டால் மற்றும் ஸாண்டல்வுட் பவுடர்கள் ISI முத்திரை பெறுகின்றன.

வாசனை திரவியத் தொழிலில் மற்றொரு சாதனை!

கோகுல் ஸான்டால் மற்றும் ஸாண்டல்வுட் பவுடர்கள் மைக்ரோஃபைன் செய்யப்பட்ட சந்தனம் மற்றும் மூலிகைப் பொருட்கள் கொண்டு தரமாக தயாரிக்கப் படுகின்றன என்பதற்கு இதோ இன்னும் ஓர் அத்தாட்சி!

மேனியெங்கும் நறுமணம் களி நடனம் ஆட, புத்துணர்வுடன் சருமத்தின் மென்மை காத்திடும் முதல் தரமான கலை மணம் கமழும் கோகுல்!

IS:3959

CM/L. NO.8223

டி.எஸ்.ஆர் & கம்பெனி மதராஸ்.

இளமைப் பொலிவுடன் இனிய மணம் தவழும் இரகசியம்—கோகுல்.

ADWAVE TSR 1224

அஸ்தமனத்தில் ஓர் உதயம்

எம்.ஏ.செல்வராஜ்

கல்லிடைக்குறிச்சி சர்மா என்றால் நெல்லை மாவட்டத்தில் தெரியாதவர்கள் எவருமே இருக்க முடியாது. அவரின் புகழ் பரவக் காரணம் அரசியல் செல்வாக்கோ அல்லது அறிவின் பறைசாற்றலோ கிடையாது.

அறுசுவை உணவை எழுசுவையாக்கிப் படைக்கும் கை தேர்ந்த சமையல்காரர்தான் அவர். திருமண அழைப்பைக் கொடுப்பதோடு சர்மாவின் சமையல் என்பதையும் சொல்லி உறவினருக்கு ஊக்கம் கொடுப்பதும் உண்டு. சர்மாவிடம் தேதி வாங்கிய பின்பே திருமணத் தேதியை நிச்சயிப்பவர்களும் உண்டு.

எரியும் தணலிலும் கொதிக்கும் எண்ணெய் அருகிலும் நின்று பெற்ற பணத்தில் குடும்பச் சக்கரத்தை உருட்டிக் கொண்டிருந்த சர்மாவின் மனைவி ஒரு நாள் காய்ச்சலில் இவ்வுலகை விட்டு மறைந்துவிட்டாள். அவருக்காக அவள் விட்டுச் சென்றது சங்கரும் புவனாவும்.

காலன் கைப்பிடித்த மனைவியைப் பிரித்த போதிலும் கூட மனத்தில் தளர்ச்சியின்றிச் சங்கரைக் கல்லூரிக்கு அனுப்பி அவனுக்கு ஹார்வி மில்லில் ஒரு வேலையும் வாங்கிக் கொடுத்ததோடு, புவனாவுக்கு நல்லதொரு வரனும் பார்த்து முடித்து விட்டார் சர்மா.

அன்றைய ஊக்கமும் முயற்சியும் இன்று அவரிடம் இல்லை.

காரணம்.... முதுமை; காலம் அவர் மேனியில் ஏற்படுத்திய சுருக்கங்கள்.

பெரிய பெரிய வெண்கலப் பானைகளை அலட்சியமாக இறக்கி வைக்கும் அவர் கைகள் இன்று ஒரு கரண்டியைத் தூக்குவதற்குள் தடுமாறுகின்றன.

வயதாகி விட்டால் எல்லாமே போய்விடுகிறதோ?

ஊரார் எப்படியோ ஆனாலும் உறவுக்காரியான சொந்த மருமகள் அவரை உதா



சினப்படுத்தக் காரணம்... அவருக்குப் புரியாமல் இல்லை.

சங்கர் வேலைக்குச் சென்றதும் பக்கத்து வீட்டுப் பெண்களுடன் அடிக்கும் அரட்டைக்கும், அவனுக்குத் தெரியாமல் 'மாடினி ஷோ'வுக்குப் போவதற்கும் மற்றும் பல காரியங்களுக்கும் மாமனூர் முற்றுப்புள்ளி வைத்துவிடப் போகிறார் என்ற எச்சரிக்கையுடன் அவள் செயல்படுவது அவருக்குப் புரியாமல் இல்லை.

எனினும் மகன் வீட்டில் ஈஸிச்சேரில் சாய்ந்து கொண்டு 'ரிடையர்ட்' வாழ்க்கையை அவர் நடத்தி வாழவில்லை.


அனைவர் வீட்டிலும் 'அம்மா.... பால்...' என்று அழைக்கும் பால்காரன் இந்த வீட்டில் மட்டும் 'தாத்தா பால்' என்றே அழைப்பான். அப்படிக் காலையில் பால் வாங்குவதிலிருந்து கடைக்குச் சென்று காய் கறி வாங்குவதுவரை ஏன் பேரன் முரளியைக் குளிப்பாட்டி விடுவது உட்பட எல்லாச் சில்லறை வேலைகளையும் செய்வது 'சர்மா'தானே...

அவ்வாறிருந்தும், மருமகளும், அவளுக்குப் பயந்து மகனும் தன்னை அங்கிருந்து விரட்ட முயற்சி செய்வதற்கான காரணம் வயோதிகம், வருமானம் இல்லா வெறுங்கை என்ற முடிவுக்கு வரச் சர்மாவுக்கு அதிக நேரமாகவில்லை.

விடிந்தது....

அன்று ஞாயிற்றுக் கிழமை. சங்கருக்கு விடுமுறை.

வீட்டில் மயான அமைதி நிலவுகிறது: அப்படி ஒரு சூனியம் வீட்டில் நிலவுகிறது என்றால் இரவு மருமகளுக்கும் மகனுக்கும்



கடும் வாக்குவாதம் நடைபெற்று அவளின் எண்ணத்துக்கு இவன் செவி சாய்த்திருக்க மாட்டான் என்று அர்த்தம்.

எது எவ்வாறுனாலும் ஐந்து மணிக்கே சூடாக ஒரு கப் காப்பியை வயிற்றுக்குள் இறக்கியாக வேண்டும் சர்மாவுக்கு. என்ன செய்வது.... தொட்டில் பழக்கம். மணி எட்டாகியும் மருமகள் காப்பி கொண்டுவந்து கொடுக்காதது சர்மாவுக்குப் பெருத்த அவமானமாக இருந்தது

காலைக் காப்பிக்குக் காலம் தாழ்த்தத் தாழ்த்த, தலைவலியின் உக்ரம் அதிகரிக்கத் தொடங்குகிறது.

கட்டிலில் உட்கார்ந்தவாறு வெறுமனே பார்வையை வீதியில் பதித்துக் கொண்டிருக்கிறார் சர்மா.

அவர் அருகே வந்த ஐந்து வயதுப் பேரன் முரளி, 'தாத்தா... தாத்தா... அம்மா இன்னும் 'ஆர்லிக்ஸ்' தரலே தாத்தா...' என்கிறான்.

ஓகோ... அப்பமன்னு இன்றைக்குச் சமையல் ஸ்டிரைக் போலும்...

தம்முடைய தலைவலியையும் பொருட்படுத்தாது எழுந்தார் சர்மா. குழந்தையின் பட்டினி அவரை வெகுவாக வாட்டியது. —ஏதோ ஒரு வேகத்தில் எழுந்து அறைக்கு வெளியே வந்தார்.

ஈஸி சேரில் சாய்ந்து கொண்டு 'ஹிந்து' பத்திரிகையைப் புரட்டிக் கொண்டிருந்தான் சங்கர்.

ஆனால் மருமகள்.....

விஜயலக்ஷ்மியின் மனத்திண்மை

இருபத்திரண்டு வயது நிரம்பிய விஜயலட்சுமி பி. ஏ. படித்திருக்கிறார். டைப்பிங் ஆங்கிலம் - தமிழ் சுருக்கெழுத்து எல்லாம் பயின்று ஒரு இன்ஸ்டிடியூட்டில் கற்பிப்பவராகப் பணி புரிகிறார். அவரது வலது பக்க கன்னத்தில் மட்டும் ஆண்களுக்கு முடி வளர்வதுபோல் வளர்கிறது. இது பிறவியிலே அமைந்துவிட்ட ஒன்றாக இருக்கிறது. முகம் கழுத்து போன்ற பகுதிகளில் வெண் புள்ளிகள் தோன்றிப் பரவி வருகின்றன. இப்போது அவர் ஹோமியோபதி மருந்து சாப்பிடத் தொடங்கி இருக்கிறார்.

இதனால் மனமுடைந்து மூலையில் முடங்கி விடவில்லை, எல்லோருடனும் சகஜமாகப் பழகுகிறார். தாழ்வு மனப்பான்மை இல்லை, களங்க மற்றுச் சிரிக்கிறார்.

புறநானூற்றில் பெண்களின் வீரம் சிறப்பித்து எழுதப்பட்டிருக்கிறதே! இந் நூற்றாண்டில் விஜய லட்சுமியின் வீரத்தை - மனத்திண்மையை எப்படி சிறப்பிப்பது? — தகவல்: ஸரஸ்வதி



படுக்கையிலிருந்து இன்னும் எழவேயில்லை.

விடுவிடுவென்று சமையலறைக்குச் சென்று சர்மா ஸ்டவ்வை ஏற்றிப் பாலைக் காய்ச்சத் தொடங்கினார்.

சர்க்கரை டின்னை அலமாரியில் தேடிக் கண்டுபிடித்துக் கொண்டிருக்கும்போது...

அவர் காலடியில் நின்று கொண்டிருந்த முரளி ஆர்லிக்ஸ் பாட்டிலைக் கீழே தட்டிவிடப் பாட்டில் இரண்டாகப் பிளந்தது. அந்தப் பயத்தில் பையன் நடுநடுங்கி நிற்க...

பத்ரகாளியாகப் படுக்கையிலிருந்து எழுந்து வந்த மருமகள் முரளியின் வெற்றுடம்பில் தன் கரங்களைப் பதிக்கத் தொடங்கினள்.

வீறிட்டு அழுகிறான் முரளி.

''உபகாரம் இல்லா விட்டாலும் உபத்திரவம் இல்லாமலாவது இருக்கக்கூடாதா..? ஆர்லிக்ஸ் அவ்வளவும் வீணாயிட்டுதே...யார் சம்பாதிச்ச காசு....''

இதுவரை மறைமுகமாகவே தன்னைத் தாக்கிவந்த மருமகள் நேரடிப் போரில் இறங்கி விட்டாள்.

அவளுக்குப்பின்பாட்டுப்பாடி வந்த சங்கர், ''எம்ப்பா... வயசுக் காலத்திலே சும்மா ஒரு இடத்திலே உட்கார்ந்து இருக்கிறதுக்கு என்ன?....'' என்றான்.

''அவராலே எப்படி இருக்க முடியும்...? ஆயிரம் ரூபாய் சம்பாதிச்ச கலெக்டர் இல்லே... காலையிலே பெட் காப்பி கேட்குது. உடம்பு ஒரே வலியா இருக்குதேன்னு கொஞ்ச நேரம் தூங்கிட்டேன். அதற்குள் இவ்வளவு கலாட்டா. நான் ஒருத்தி இல்லாட்டா இந்த வீடு நாறிப் போகும்...''

தன்னைத் தாக்குவதற்கு மருமகளுக்கு 'பாயிண்ட்' கிடைத்து விட்டது.

கற்சிலையாக நின்றார் சர்மா.

அடுப்பில் வைத்த பால் அவர் மனம் போல் பொங்கத் தொடங்கிற்று.

'**வ**யசுக் காலத்திலே ஒரு இடத்திலே சும்மா இருக்கிறதுக்கு என்ன?'...

மகன் கேட்ட கேள்வி செக்கு மாடாகச் சர்மாவின் எண்ணத்தில் சுற்றி வந்துகொண்டிருந்தது.

சற்று நேரம் கழித்து....

''அப்பா....'' — சங்கர் அழைத்தான்.

அவன் குரலில் ஒருவிதக் கடுமை இழையோடிக் கொண்டிருந்தது.

அவன் அழைப்புக்குச் செவி சாய்ப்பது போல் முகத்தை அவனை நோக்கித் திருப்பினார் சர்மா.

''என்னடா....?''

''நான் சொல்றேன்னு தப்பா நினைக்காதீங்க... கொஞ்ச நாட்கள் புவனா வீட்டிலே போய் இருந்து வாருங்களேன். அவளுக்கும் உங்களைப் பார்க்கணும் போல் தோணுதுன்னு போன கடிதத்தில் எழுதியிருந்தாளே....''

அலட்சிய முறுவல் ஒன்று சர்மாவின் உதடுகளில் இழையோடியது.

இங்கே இருக்கிற அம்பாசமுத்திரத்தில் தந்தைக்கு மூன்று வேளை சாப்பாடு போட மனமில்லாத மகன் எங்கோ சிம்லாவில் ஒரு சிப்பாயின் மனைவியாக இருக்கும் மகள் வீட்டுக்குப் போகச் சொல்கிறான்.

ஓர் ஆர்த்தி பாவத்தில் அவனைப் பார்த்த சர்மா.....

''ஏண்டா நிக்கறே... சீக்கிரமா ஏற்பாடு பண்ணேண்டா!'' என்றார்.

சட்டையை மாட்டிக் கொண்டு கிளம்பும் போது, தம் மகனைக் கடைசி முறையாகப் பார்த்துக் கொள்வோம் என்ற எண்ணம் சர்மாவுக்கு ஏனோ ஏற்பட்டது.

மகன் வீட்டுக்குச் சென்று சிம்லாவின் குளிரில் தம் சாம்பல் கரையப் போவதைச் சர்மா விரும்பவில்லை.

சாதாரண சரிகை டவல் ஒன்றை எடுத்துக்கொண்டு ஆற்றை நோக்கி நடக்கத் தொடங்கினார்.

சுழித்துக் கொண்டு ஓடுகிறது தாமிரபரணி ஆறு. மனித குலம் விரும்பினாலும் விரும்பா விட்டாலும் கோடைக் காலத்தில் பெரும் வெள்ளத்துடன் ஓடும் அந்த ஆறு ஆண்டுதோறும் ஒரு நரபலியை ஏற்றுக் கொள்வதை வழக்கமாக்கிக் கொண்டுவிட்டது. நெல்லை மாவட்டத்தில் அனைவரும் அறிந்த செய்தி.

ஆனால் இந்த ஆண்டு...

பெரும் விருப்பத்துடன் தம்மைக் காணிக்கையாக்கத் தாமிரபரணிக்கு அளிக்கத் துணிந்து விட்டார் சர்மா.

அந்த ஆற்றின் கரையில் அமர்ந்திருக்கும் பெரிய கோயிலை அடுத்த மருத மரங்களின் அருகே.....

ஆற்றின் நீர் ஒருமுறை கடல் போல் தேங்கி மீண்டும் ஓடத் தொடங்குவதால் ஏற்பட்டுள்ள மிகப் பெரிய ஆழப் பகுதி.

கண்ணில் வழியும் நீரை அடக்கிக் கொண்டு, வேஷ்டியை இறுகக் கட்டிய வாறே ஆழமான அப்பகுதியில் குதிப்பதற்குச் சர்மா தயாராகி ஆற்று நடைபாதையை விட்டு இறங்கும்போது...

''சார்....!''

அவரின் வாழ்க்கையில் முதன் முதலாகக் கௌரவிக்கும் அழைப்பு ஒலி.

அவர் மேனி புல்லரித்தது. திரும்பினார். நான்கு இளைஞர்கள் அவரை நோக்கிக் கரம் குவித்தனர்.

''என்ன தம்பிகளா.....?'' சர்மா கேட்டார்.

''தப்பா நினைச்சுக்கப்படாது.... உங்களால் ஒரு காரியம் ஆக வேண்டியிருக்கிறது'' என்று இழுத்தனர் அவர்கள்.

இறுதி மூச்சுக்களை எண்ணிக் கொண்டிருக்கும்போது கர்ணனிடம் யாசகம் கேட்ட கண்ணபிரானாக இந்த இளைஞர்கள் தோன்றினர்.

''இந்தக் கிழவனால் உங்களுக்கு என்ன காரியம் ஆக வேண்டியிருக்கிறது....?''

''அப்படிச் சொல்லாதீர்கள் ஐயா.... நாங்க சமூக சேவை செய்யும் இளைஞர்கள். நாளு ஏழைகளின் திருமணத்தைப் பெரிய கோயில்லே நடத்தி வைக்கப் போறோம்.... திருமணம் முடிஞ்ச பிறகு ஆதரவற்ற அந்தத் தம்பதிகளை ஆசீர்வதிக்கிறதுக்கு எங்களுக்கு வயசு போதாது. அதனாலே...



சாதனைகளில் சளைத்தவர்களல்ல!

சாதனைகளில் சளைத்தவர்களல்ல நமது பெண் மணிகள். இதோ ஒரு உதாரணம்:

லண்டன் பல்கலை கழகத்தில், மருந்துகள் கண்டு பிடிப்பில் பட்டம் பெற்ற ஒரே பெண்மணி திருமதி லலிதா காமேஸ்வரன். இவர் இதுவரை சுமார் என்பது ஆராய்ச்சிக் கண்டு பிடிப்புகளை வெளியிட்டவர். 'ஹிஸ்டமின்' என்ற பொருளால் ஏற்படும் அலர்ஜியைப் பற்றிய இவரது கண்டு பிடிப்பு முக்கியமானது. இவருடைய இந்தச் சாதனைகளுக்காக, இந்திய மருத்துவ கௌன்சில் இந்த வருடம் இவருக்கு 'ஹரி ஓம் ஆஸ்ரம் விருதை' வழங்கியுள்ளது. இந்த விருதை இந்திய மருத்துவ கௌன்சில் 'அலம்பிக்' கம்பெனி டிரஸ்ட் மூலம் கொடுக்கிறது. ரூ. 5,000 பணமும், தங்க மெடலும் வழங்குகின்றனர். இந்த விருதைப் பெறும் முதல் தமிழ் பெண் மணி டாக்டர் (திருமதி) லலிதா காமேஸ்வரன் தான் என்பது குறிப்பிடத் தக்கது.

தகவல்: குமாரி சாரதா சுப்ரமணியம்

நீங்க எங்க கூட வந்து.... அவர்களை ஆசீர்வதிச்சா எங்களுடைய முயற்சிக்குச் சிகரம் வைத்ததாக இருக்கும்... ஒரு பெரியவர் நம்மை வாழ்த்தினார் என்ற திருப்தியும் ஏற்படும்....அதுக்காக நீங்க அந்தப் பணியை ஏற்றுக் கொள்ள வேண்டும்.....''

இளைஞர்கள் கெஞ்சாத குறையாகக் கேட்டனர்.

'கிழவன்' என்பதற்குப் 'பெரியவர்' என்ற மரியாதையும் உண்டா?

வயதாகி விட்டால் உலகமே அஸ்தமித்து விடும் 'பெரியவர்கள்' வாழ்வில் இளையவர்களின் வாழ்வின் உதயத்தைத் தொடங்கி வைக்கும் தகுதி இரண்டறக் கலந்திருக்கிறதா?

வயோதிகத்தின் உண்மை உருவத்தினை உயர்ந்த பொருளினை அப்போதுதான் கண்டார் சர்மா.


''அதற்கென்னப்பா, தாராளமா நடத்தி வைத்து விடுகிறேன். கொஞ்சம் பொறுங்கள். பெரிய கோயில்லேதானே திருமணம்! இதோ அரை நிமிடத்திலே குளிச்சிட்டு வந்துடுறேன்.''

''நன்றி ஐயா....''

இளைஞர்கள் விடைபெற்றனர்.


ஆற்றின் ஆழப் பகுதியை விடுத்து அடுத்தாற்போன்று அமைந்த படித்துறையில் அதோ சர்மா சற்று அவசரமாகவே குளித்துக் கொண்டிருக்கிறார்....

கங்கா பிரிட்ஜ், கான்பூர்.



கங்காவின் மேல்
ஒரு பாலம்


ஓவர்சீஸ் கம்யூனிகேஷன் ஸர்வீசஸ் 76.25 மீ



ஒரு மிகப்பெரிய
18 மாடிக் கட்டடம்

டிஸ்கான்

உபயோகித்து இந்த இரண்டும் ஸ்டீலை 50% மிச்சப்படுத்திற்று!



டிஸ்கான் கோல்டு-ட்விஸ்டெட் ரிப்டு ரீயின்ஃபோர்ஸ்டு பார்ஸ், இரட்டிப்பு நன்மை அளிக்கின்றன. சாதாரண மைல்டு ஸ்டீல் பார்ஸை விடச் சிறந்த ரீயின்ஃபோர்ஸ்மென்ட்டையும் ஸ்டீலில் அதிகபட்ச மிச்சத்தையும்தான்.

டாடா ஸ்டீலினுடையும், ஸ்ட்ரக்சரல் எஞ்ஜினியரிங் ரிஸேர்ச் ஸென்டர் (SERC), மதுரையின் ஒத்துழைப்பாலும், உள்நாட்டுப் பொருள்களால் அபிவிருத்தியடைந்த இந்த பார்கள் டாடா ஸ்டீலினுடையும் அவர்களது சப் லைசென்ஸிகளாலும் **டிஸ்கான் 42, டிஸ்கான் 60** என்ற இரண்டு தரங்களில் தயாரிக்கப் படுகின்றன. 6 mm லிருந்து 36 mm வரை டயாமீட்டரில் கிடைக் கின்றன. **டிஸ்கான்** பார்களின் விசேஷ ரிப் அமைப்பும் பெரிய அளவில் தாங்கக் கூடிய மேற் பரப்பு சாதாரண மைல்டு ஸ்டீல் பார்களை விட நூற்றுக்கு நூறு இறுக்கிய சக்தியைத் தருகிறது. டிஸ்கான் பார்ஸ் மிக அதிகமாக இறுக்கப்பட்டு விசேஷ தாங்கும் சக்தியையும் கொண்டது.

இவையனைத்தும் பெரிய பெரிய கட்டடங்கள், பாலங்கள், அணைக்கட்டுகள், ரிசர்வாயர்ஸ், அடித்தளங்கள், நீர்ப்பாசனம் மற்றும் மின் சக்தி அமைப்புகள் போன்ற முரட்டுக்கட்டடங்களுக்குச் சிறந்த சிக்கனமிகுந்த தேர்ந்தெடுப்பாகும்.

மற்ற விவரங்களுக்கு
தயவுசெய்து எழுதுங்கள்:
தி டைரக்டர் ஆஃப் மார்க்கெட்டிங்
தி டாடா அயர்ன் அண்டு ஸ்டீல்
கம்பெனி லிமிடெட்,
43 செளரிங்கீ ரோடு,
கல்கத்தா—700 071

TN 9984-R

டாடா ஸ்டீல்

ராஜாஜி வாழ்க்கை வரலாறு

ராஜ்மோகன் காந்தி

மாகாண சட்டசபைத் தேர்தல்கள் குறித்து ஸி.ஆர். தம் பங்குக்கு நம்பிக்கையுடன் இருந்தார்; யதார்த்த ரீதியிலும் செயல்பட்டார். இருப்பினும் திருச்சியில் ஒரு பிராமண வேட்பாளரை நிறுத்தி வைக்க வேண்டும் என்ற யோசனையை நிராகரித்த அவர் கூறினார்: மத்திய சட்ட மன்றத் தேர்தலில் காங்கிரஸ் பெற்ற வெற்றியானது வகுப்புத் துவேஷத்தைத் தோற்கடித்து விட்டதே தவிர அதைக் கொன்றுவிட வில்லை. எனவே பிராமணரல்லாத ஒருவரையே திருச்சியில் காங்கிரஸ் நிறுத்தி வைக்க வேண்டும்.

ஜஸ்டிஸ் கட்சி அடக்கு முறைக்குப் பயந்து பதுங்குகிறது என்ற விமர்சனத்தால் தூண்டப்பட்டு அக்கட்சியின் அந்நாள் தலைவர்களுள் ஒருவரான தொழிலதிபர் ஏ. ராமசாமி முதலியார் ஸி. ஆருக்கு ஒரு சவால் விட்டார். ஜஸ்டிஸ் கட்சியின் இருபது பிரபல தலைவர்கள் ராஜத் துவேஷமான சொற்பொழிவுகளை நிகழ்த்திச் சிறைக்குப் போவதன் மூலம் அடக்கு முறையைத் தாங்கக் கூடிய திறமை தங்களுக்கு உண்டு என்று நிரூபித்தால், இம்மாகாணத்தில் காங்கிரஸ் கட்சியை ஸி. ஆர். கலைத்து விடுவாரா?

கலைப்பேன் என்ற ஸி. ஆர். தொடர்ந்து கூறினார்: முதலியார் தமது பிரதான தோழர்கள் 20 பேருடன் காங்கிரஸ் கொள்கையைப் பின்பற்றிச் சிறைவாசத்தை ஏற்பாரேயானால் நான் காங்கிரஸ் பணிகளை ஜஸ்டிஸ் கட்சியினரிடமே ஒப்படைத்து விடத் தயாராயிருக்கிறேன்.

ராமசாமி முதலியாரும் அவரது நண்பர்களும் சிறை செல்லவில்லை. உப தேர்தல்களில் மூன்று ஸ்தானங்களும் மொத்தமாக காங்கிரசுக்கே கிடைத்தன. மூன்று ஆண்டுகள்தான் மாகாண சட்டசபைக்கு இயல்பான ஆயுள். ஆனால் கவர்னர் அவ்வப்போது அதன் காலவரம்பை அதிகரித்துக் கொண்டே போனதால் சென்னை சட்டசபையும் அதன் ஜஸ்டிஸ் மந்திரி சபையும் ஆறாவது ஆண்டில் அடியெடுத்து வைத்திருந்தன. மத்திய சட்ட சபைத் தேர்தல் முடிவுகளையும் மாகாண சட்ட சபை உப தேர்தல் முடிவுகளையும் வைத்து ஸி. ஆர். மாகாண சட்ட சபையைக் கலைத்துவிட வேண்டும் என்று கோரினார். ஆனால் கவர்னர் அவர் கூறியதைக் காதில் வாங்கிக் கொள்ளவில்லை.

அரக்கர்களைத் தாக்குவது நிற்கவில்லை. 1935 தொடக்கத்தில் ஸி. ஆர். தீண்டாமை ஒழிப்பு மசோதா ஒன்று தயாரித்தார். சமுதாயச் சம உரிமைகளையும், பள்ளி, குளங்கள், கிணறுகள் முதலியவற்றை அணுகும் உரிமையையும் அம்மசோதா ஹரிஜனங்களுக்கு உறுதி அளித்தது. 1930 தொடக்கத்தில் அவர் சிறைப்பட்டதன் காரணமாக அனைத்திந்திய மதுவிலக்கு சங்கத்தில் ஏற்பட்டிருந்த வெற்றிடம் இங்கு நிரப்பப்படவே யில்லை. இப்போது அவர் சங்கத்தை உயிர்ப்பிக்க முயன்று தோல்வியே கண்டார்.

ஆசிரமத்தின் அருகே குமாரமங்கலம் என்ற கிராமத்தின் சேரியில் வசித்த 55 ஹரிஜன குடும்பங்களுக்கு அவர்கள் கிறிஸ்துவ மதத்தைத் தழுவுவதை எளிதாக்குவதற்காக ஜனவரியில் பணம் கொடுக்கப்பட்டிருந்தது. ஒவ்வொரு குடும்பத்துக்கும் ரூ. 25 தரப்பட்டது. பெரும்பாலான குடும்பங்கள் அதனைக் குடியில் செலவழித்தன.

போதாக் குறைக்கு மதம் மாற்றப்பட்டவர்கள் தங்கள் தெருவில் இருந்த ஹிந்து கோவிலை அதன் கடவுட் சிலை, ஆபரணங்கள் உள்பட ரூ. 450க்கு ஒரு கிறிஸ்தவப் பிரசாரகருக்கு விற்றுவிடுமாறு தூண்டப்பட்டனர். அக்கோயிலை ஒரு மாதா கோயிலாக்கப் பிரசாரகர் எண்ணியிருந்தார்.

ஸி. ஆர். ஆட்சேபித்ததன் பேரில் கோவிலை மாதா கோவிலாக்கும் திட்டம் கைவிடப்பட்டது. ஆனால் இச்சம்பவம் ஒரு துரதிர்ஷ்டவசமான கசப்புணர்வை விட்டுச் சென்றது. பிர்லா சகோதரர்களில் ஒருவர் அந்தச் சேரியில் மதம் மாறாமல் இருந்த ஒரே ஹரிஜனனான பெரியண்ணனுக்கு ரூ. 100 வெகுமதி அளிக்க விரும்பினார். ஸி. ஆர் இந்த யோசனையை நிராகரித்தார். அவர் வாதித்தார்:

''மதப் பிரசாரகர்கள் நம்மை விட அதிகமாகப் பணம் தர முன்வருவார் என்று நான் நம்பவில்லை. ஆயினும் இப்படி வெகுமதிகளைத் தருவது ஹரிஜனங்களை தார்மிகக் கட்டுப்பாட்டை இழக்க வைக்கும். அவர்களை மேலும் பணம் கேட்குமாறு செய்யும். வேறு பலரும் கிறிஸ்துவர்களாகப் போகிறோம் என்று பயமுறுத்துவார்கள்.''

• • •

ஒரு விநோத ஆசை — அவர் நண்பர்களுக்கும் ஏன் அவருக்குமே கூட அது விநோதமாகப் பட்டது. —ஸி. ஆருக்கு எழுந்தது. தமக்கிருந்த சமுதாயப் பொறுப்புக்கள் அனைத்தையும் துறந்துவிட விரும்



பினார். இந்த விருப்பம் எதனால் ஏற்பட்டது எப்படி வளர்ந்தது என்பதற்குப் போதிய அளவு விவரங்கள் கிடைக்கவில்லை. தெரிந்த வரையில் கூறுவதென்றால் இப்படிச் சொல்ல லாம்:

ஆசிரமத்தைக் குறித்தும் அதன் பொரு ளாதார ஆரோக்கியம் பற்றியும் ஒரு கருத்து வேற்றுமை அவருக்கும் காந்தி சேவா சங் கத்தின் தலைவர் கிஷோரிலால் மஷ்ருவாலா வுக்கும் இடையில் ஏற்பட்டது. திருச்செங் கோடு ஆசிரமம் காந்தி சேவா சங்கத்துடன் இணைந்திருந்த ஒன்றுதான். மஷ்ருவாலா, வி.ஆரின் ஆசிரமம் ரூ. 28,000 நஷ்டத்தை எதிர்நோக்கலாம் என்று கணித்திருந்தார். சங்கம் ஆசிரமத்துக்குத் தந்திருந்த கட னுதவி பற்றியும் அவர் கேட்டிருந்தார்.

மஷ்ருவாலாவுக்கு எழுதிய ஒரு கடிதத்தில் வி. ஆர். ''ரூ. 28,000 நஷ்டமாகும் என்ற மதிப்பீடு ஆதாரமற்றது'' என்று கூறி யிருந்தார். அவர் மேலும் தொடர்ந்தார்:

''ஆசிரமத்தைச் சுயேச்சையாக இயங்க விட முடியாதென்றால் கதர்ப் பணிக்காகத் தரப்பட்ட கடனைத் திரும்பப் பெற அவசியம் நேருமென்றால் ஆசிரமத்தை மூடிவிட நான் தயாராக இருக்கிறேன். இதற்கு மாற்று யோசனையாக ஆசிரமத்தை நீங்களே நேரடி யாக மத்திய சேவா சங்கத்தின் பொறுப்பில் நடத்தலாம். அவ்வாறாயின் கடன் கணக் குகள் பற்றிக் கேள்விகள் எழாது. நான் இந்தப் பொறுப்பிலிருந்து விடுவிக்கப்பட வேண்டிய நேரம் வந்து விட்டது.''

காரமான சொற்கள்தாம். ஆனால் வி. ஆர். பொது வாழ்விலிருந்து அடியோடு விலகிக்கொள்ள விரும்புவதை உணர்த்து கிற சொற்கள் அல்ல.

உடல்நலக் காரணமாக வார்தாவில் நடந்த சேவா சங்கத்தின் அறங்காவலர் கூட்டம் ஒன்றுக்கு வி. ஆர். போக முடிய வில்லை. இதையொட்டி அறங்காவலர்களுள் ஒருவரான வி. ஆருக்கு காந்தி எழுதிய கடிதத்தில் கூர்மையான சொற்கள் இடம் பெற்றன. ''ஒன்று நீங்கள் இந்தக் கூட்டங் களுக்கு ஒழுங்காக வரவேண்டும் அல்லது இந்த அமைப்புகளில் அங்கம் வகிக்காமலே

இருக்க வேண்டும். நான் மிகவும் புண் பட்டுப் போயிருக்கிறேன்.''

இந்தக் கடிதம் அணை உடையக் காரண மாகிவிட்டதாகத் தோன்றுகிறது. வி.ஆர். அறங்காவலர் பொறுப்பிலிருந்து ராஜினாமா செய்து கடிதம் அனுப்பினார். அதோடு, அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி, காரிய கமிட்டி அகில இந்திய நாடாளு மன்றக் குழு ஆகியவற் றிலிருந்து விலகவும், தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் பதவி, ஆசிரமத்தின் பொறுப்பு ஆகியவற்றைத் துறந்துவிடவும் மகாத்மாவின் அனுமதியைக் கோரினார். எதையும் பாக்கி வைத்துக் கொள்ளாமல் அனைத்திலிருந்தும் விடுபடத் தயாரானார். தாம் களைப்புற்றிருப்பதாகவும் ஓய்வுக்காக ஏங்குவதாகவும் அவர் விளக்கம் தந்தார்.

49. சுதந்திரப் பறவை

“இவ்வளவு வேகமாகவும் இவ்வளவு கலபமாகவும் எல்லாவற்றையும் துறந்துவிட்டு நீங்கள் போய்விட முடியாது''என்றுமகாத்மா பதில் எழுதினார். அவர் மேலும் தொடர்ந் தார்: ''உங்களுக்கும் எனக்கும் களைப்போ ஓய்வோ இருக்க முடியாது. நமக்கு ஓய்வு ஒருவேளை கிடைக்குமானால் அது மறு ஜன்மத் தில்தான் இருக்கும்''.வி. ஆர். தமது அடக்க முடியாத ஆசையைக் குறிப்பிட்டுத் திரும்ப வும் எழுதினார். காந்தியின் பதில்:

''நீங்கள் பொறுப்புள்ள பதவிகளை விட்டு விடலாம். ஆனால் உங்கள் உடலில் மூச்சு உள்ளவரை பொறுப்புக்களைத் துறக்கத் துணிய மாட்டீர்கள்.''

தாம் ஒப்புக்கொள்வதற்கு முன் வி. ஆரு டன் நேருக்கு நேர் பேச வேண்டும் என்று குறிப்பிட்ட மகாத்மா ஏப்ரல் கடைசி வாரத் தில் ஜபல்பூரில் நடக்கவிருந்த அகில இந் திய காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்தைத் தொடர்ந்து வார்தாவில் இருவரும் சந்தித் துப் பேசலாம் என்று கருத்து வெளியிட்டார். இதற்கிடையில் இந்தியா முழுவதிலும் காங்கிரஸ்காரர்கள் ஆட்சேபணை எழுப்பிக் கொண்டிருந்தனர்.

உத்தரப் பிரதேசத்திலிருந்து கோவிந்த வல்லப பந்த் வி. ஆருக்குத் தந்தி அனுப்பி னார்: ''அதிர்ச்சி அடைந்தேன். உங்கள் ராஜி னாமாவை எண்ணியும் பார்க்க முடியாது. புனராலோசனை செய்யவும்''. மத்திய சட்ட சபையில் காங்கிரஸ் கட்சியின் கொறடா அசப் அலி, ''வி ஆர். முழுக்க முழுக்க அத்தியாவசியமானவர்'' என்றார். பிரசாத் எழுதினார்: ''நீங்கள் பணிகளைத் தொடர வேண்டும் என்று நாங்கள் ஏதோ சம்பிரதாய மாய்க் கோருவதாகக் கருதவேண்டாம்... செய்யாதீர்கள். நீங்கள் இல்லாமல் எங்களுக்கு ஆகாது.''

வல்லபபாய் பட்டேலிடம் ஏற்பட்ட எதிர் விளைவுதான் அனைத்திலும் சக்தி மிக்கதாக இருந்தது. மகாத்மாவிடம் இவர் தாமும் ஓய்வு பெறுவதாகக் கூறினார். ஆனால் காந்தி அவரைச் சாந்தப்படுத்தினார். வி. ஆருக்குப் பட்டேல் எழுதினார்: (தொடரும்)

தமிழாக்கம் : கி. ராஜேந்திரன்

காதலி: ''நீங்க சர்க்கஸ் மரணக் கிணற்றிலே ரொம்பத் திறமையா மோட்டார் சைக்கிள் ஓட்டி னதைப் பார்த்துத்தான் உங்களை நான் காதலிச் சேன். அதுக்காக இப்படி ஒரே பார்க்கையே சுத்தி, சுத்தி வாறியே!'' —சுமதி






In fond and affectionate memory of

Smt. RAJALAKSHMI

Born : **11-5-1925** Died : **24-1-1980**

Beloved wife of K. R. Krishnamurthy, (Retd. Accts. Officer, C.D.A.S.C. Poona) Affectionate mother of Dr. K. Ramadas, K. Sridhar, Indira Thyagarajan, Kanthimathi Ramalingam and sons-in-law Thyagarajan, Ramalingam daughters-in-law Srimathi, Tara and devoted grandchildren.



இருள்அற ஓங்கும் பொதுவிலே நடம்செய்
எங்குரு நாதன்எம் பெருமான்
அருள்எனும் வடிவம் காட்டிஒண் முகத்தே
அழகுஉறும் புன்னகை காட்டித்
தெருள்உற அருமைத் திருக்கையால் தடவி
திருமணி வாய்மலர்ந்து அருகில்
பொருள்உற இருந்துஓர் வாக்களித்து என்னுள்
புகுந்தனன் புதுமைஎது அந்தோ !

— திருஅருட்பா



விளையாட்டு வினையாகிறது

–ரமாமணி சுந்தர்.

புது தில்லியில் ''பாம் பாஷ்'' என்ற படாடோபமான பெயர் கொண்ட நவ நாகரீகக் காலனி அது. தெருவை அடைத்துக் கொண்டு ஒவ்வொரு வீட்டு வாசலிலும் நிற்கும் கார்களும், வீட்டு ஜன்னல்களில் பொருத்தப்பட்டிருக்கும் ஏர்கண்டிஷனர்களும், பொருளாதாரத்தின் மேல் மட்டத்தில் உள்ளோர் குடியிருக்கும் காலனி அது என்பதைப் பறைசாற்றின.

காலை மணி எட்டு. கடும் கோடைக் காலம் அது. எம் பிளாக், எட்டாம் நம்பர் வீட்டில் குடியிருக்கும் கல்லூரி மாணவன் குமார், அப்பொழுதுதான் படுக்கையை விட்டு எழுந்திருந்து, பேப்பரும் கையுமாகச் சோம்பல் முறித்துக் கொண்டு சோபாவில் உட்கார்ந்திருந்தான். அந்தக் கோடையிலும் அவனால் குளிர் சாதனத்தின் உதவி கொண்டு எட்டு மணி வரையில் உறங்க முடிந்தது. அவனுடைய இப்பொழுதைய பிரச்னை

இன்றையப் பொழுதை எப்படிக் கழிப்பது என்பதுதான்.

''ஹாய்! குமார்!'' என்று ஆர்ப்பாட்டமாகக் கூவியவாறு உள்ளே நுழைந்தான், குமாரின் கல்லூரித் தோழன் விநோத்.

இருவரும் சாவகாசமாக உட்கார்ந்து கொண்டு, தங்களுடைய வழக்கமான அரட்டைக் கச்சேரியைத் தொடங்கினார்கள்.

''ஏதாவது 'அட்வென்சர்'ஸாக நாம் இதுவரை செய்யாத காரியம் ஏதாவதுசெய்ய வேண்டும். யோசனை பண்ணுவோம்!'' என்று சொல்லிவிட்டுக் குமார் கையில் வைத்திருந்த செய்தித் தாளை மேலெழுந்தவாரியாக நோட்டம் விட்டான். திடீரென்று துள்ளிக் குதித்தான்.

''ஃபென்டாஸ்டிக் ஐடியா! சொல்றேன் கேள். இப்பொழுது பேப்பரில் அடிக்கடி வரும் செய்தி என்ன? இதோ பார். இன்றைய பேப்பரில் கூட வந்திருக்கே — ஸ்கூட்டரில் வந்து அதிக ஜனநடமாட்டம் இல்லாத தெருக்களில் நடந்து போய்க் கொண்டிருக்கும் பெண்களின் கழுத்துச் சங்கிலியைத் திருடுவது. 'செயின் ஸ்நேட்சர்ஸ்.' நாமும் இந்தத் திருட்டைச் செய்து பார்த்தால் எப்படி இருக்கும்?'' என்று உற்சாகமாகக் கேட்டான் குமார்.

''உனக்கு ஏண்டா இந்தத் திருட்டுப் புத்தி? உங்கப்பா உனக்குக் கொடுக்காத பாக்கெட் மணியா?''

''போடா, மடையா! பணத்துக்காகவா திருடப் போறோம். ஜஸ்ட் ஃபார் த்ரில். ஒரு அட்வென்சர்! அவ்வளவுதான்.''

''வேண்டாம். மாட்டிக் கொண்டால் கம்பி எண்ண வேண்டி வரும். மானம் போய் விடும்!'' என்று பயந்தான் விநோத்.

''சரியான தொடை நடுங்கியாக இருக்கிறாயே! பேசாமல் புடவையை எடுத்துச் சுற்றிக்கொள்'' என்று குமார் ஒரேயடியாகக் கிண்டல் பண்ண ஆரம்பிக்கவே, விநோத் வேறு வழியின்றித் தன்னுடைய சம்மதத்தைத் தெரிவித்தான்.

மறுநாளே தாங்கள் நினைத்த காரியத்தை நிறைவேற்றிவிடலாம் என்று முடிவெடுத்தார்கள். அன்றைய பொழுதை அதற்கான திட்டம் வகுப்பதிலேயே செலவிட்டார்கள். இத்தகைய வேலைக்கு உகந்த நேரம் அதிகாலைதான் என்று தீர்மானம் செய்தார்கள்.

அடுத்த நாள் காலை நான்கு மணிக்கு அலாரம் வைத்துக் கொண்டு எழுந்தார்கள். காலை விமானத்தில் ஊருக்குப் போகும் நண்பன் ஒருவனை வழியனுப்பப் போவதாக வீட்டில் புளுகிவிட்டு ஸ்கூட்டரை எடுத்துக் கொண்டு புறப்பட்டார்கள்.

அந்த அதிகாலை வேளையில் அதிக ஜன நடமாட்டம் இல்லை. இங்கொன்றும் அங்கொன்றுமாகப் பணக் கொழுப்பினால் உடல் பருத்த சிலர் 'வாக்' போய்க் கொண்டிருந்தார்கள். அந்தக் காலனியின் கடைசியில் இருக்கும் ஆர் பிளாக் வழியாக ஸ்கூட்டரை மெல்லச் செலுத்திக் கொண்டு போனார்கள். சாதாரணமாகப் பகல் நேரத்திலேயே அதிக ஜன நடமாட்டம் இல்லாத தெரு. அந்த அதிகாலை வேளையில் ஈ, காக்கைகூட இல்லை.

திடீரென்று நான்காவது வீட்டுப் பின் கதவைத் திறந்து கொண்டு, கையில் பால் தூக்குடன் ஒரு பெண்மணி கேட்டைத் திறந்துகொண்டு தெருவுக்கு வந்தாள். மணி சுமார் ஐந்து இருக்கும். அந்த மங்கலான வெளிச்சத்திலும் அவள் கழுத்தில் மின்னிய தங்கச் சங்கிலியைக் கவனித்து விட்டார்கள் குமாரும் விநோத்தும். மெதுவாக ஸ்கூட்டரை ஓட்டிக் கொண்டு போய் அவள் அருகில் நிறுத்தினான் விநோத்.

பின் சீட்டில் உட்கார்ந்திருந்த குமார் ''எச் பிளாக் எங்கே இருக்கிறது தெரியுமா?'' என்று தந்திரமாகக் கேட்டுக் கொண்டு அவள் அருகில் சென்றான்.

விநோத் ஸ்கூட்டரின் இஞ்சினை அணைக்காமல் காத்திருந்தான். சடாரென்று குமார் மறைத்து வைத்திருந்த கத்தியைக் காண்பித்து, ''கூச்சல் போட்டால் குத்திடுவேன். மரியாதையாகச் சங்கிலியைக் கழற்றிக்



அரை நெல்லிக்காய்களைத் தட்டி, கொட்டையை நீக்கிக்கொள்ளவும். அத்துடன் பச்சை மிளகாய், துருவிய தேங்காய், உப்பு, காயம் வைத்து நைஸாக அரைத்துக் கொள்ளவும். வாணலியில் கடுகு, உ. பருப்பு, க. பருப்பு, மிளகாய் வத்தல், கருவேப்பிலை, வேர்கடலை தாளித்து, அரைத்த விழுதைப்போட்டு ஒரு கொதி கொதி எடுத்து அதில் பொலபொல வென்று வடித்த சாதத்தைப் போட்டுப் பிசையவும். ருசியாக இருக்கும்.

*

1 ஆழாக்கு சர்க்கரையைப் பாத்திரத்தில் போட்டு, பாகு கம்பிப்பதம் வந்ததும் 2 டம்ளர் கெட்டித்தயிரைப் பாகுடன் சேர்த்துக் கெட்டியாகும் வரை கிளறவும். பிறகு சிறிது நெய் சேர்த்துக் கெட்டி ஆனவுடன் தாம் பாளத்தில் கொட்டி வில்லைகள் போடவும். —லலிதாபிரபாகர்



கொடுத்துவிடு'' என்று முரட்டுக் குரலில் மிரட்டினான்.

தாங்கள் நினைத்த வேலை இவ்வளவு எளிதில் முடிந்துவிடும் என்று அவர்கள் எதிர்பார்க்கவில்லை. அப்பெண்மணி உயிருக்குப் பயந்து, மறு பேச்சின்றி நடுங்கும் கரங்களினால் சங்கிலியைக் கழற்றிக் கொடுத்து விட்டாள். கண் மூடிக் கண் திறக்கும் நேரத்தில் ஸ்கூட்டர் சிட்டெனப் பறந்து விட்டது. ஸ்கூட்டரின் பின் விளக்கு எரியாததால் அப்பெண்மணி ஸ்கூட்டரின் எண்ணைப் பார்த்திருக்க வாய்ப்பில்லை.

குமாரும் வினோத்தும் அன்று முழுதும் ஆகாசத்தில்தான் பறந்து கொண்டிருந்தார்கள், தங்கள் வீர தீரச்சாதனையை நினைத்து. அவர்களுடைய ஒரே குறை தாங்கள் செய்த காரியத்தை நாலு பேர்களிடம் சொல்லிப் பெருமை அடித்துக் கொள்ள முடியவில்லையே என்பது தான்.

மறு நாள் செய்தித் தாள்களில் எங்கோ ஒரு மூலையில், ''செயின் ஸ்நேட்சர்ஸ்'' என்ற தலைப்பில், நான்கு வரிகளில், ஒரு மாமூல் செய்தியாக இத்திருட்டைப் பற்றிக் குறிப்பிடப்பட்டிருந்தது. மற்றபடி போலீஸையோ பொதுமக்களையோ இந்நிகழ்ச்சி அதிகம் பாதித்ததாகத் தெரியவில்லை.

இந்நிகழ்ச்சி நடந்து சுமார் ஒரு மாதம் ஆகியிருக்கும். கோடை விடுமுறை முடிந்து கல்லூரிகள் எல்லாம் திறக்கப்பட்டு விட்டன. குமாரும் வினோதும் புது மாணவர்களை ராகிங் செய்வதில் பொழுதை உல்லாசமாகக் கழித்துக் கொண்டிருந்தனர். ராகிங் உற்சாகத்திலும் பரபரப்பிலும் தாங்கள் ஒரு மாதத்துக்கு முன்பு செய்த திருட்டைப் பற்றி மறந்து கூடப் போய் விட்டார்கள் என்று சொல்லலாம்.

அன்று ஞாயிற்றுக் கிழமை காலை நேரம். கல்லூரிக்குப் புறப்பட வேண்டிய அவசரம் இல்லாததால், சோம்பல் முறித்துக்கொண்டு பேப்பரும் கையுமாக உட்கார்ந்திருந்தான் குமார். உள்ளூர் செய்திகள் பிரசுரமாகும் பக்கத்தில் ''வரதட்சணைக் கொடுமையினால் மற்றொரு பெண் தீக்கிரையானாள்'' என்ற தலைப்பில் ஒரு செய்தியும், இறந்துபோன அப்பெண்ணின் படமும் வெளிவந்திருந்தன.

அப்பெண்மணியைத் தான் எங்கேயோ பார்த்திருக்கிறோம் என்று தோன்றியது குமாருக்கு. ஆனால் சட்டென்று நினைவு வரவில்லை. சிறிது நேரம் மூளையைக் குழப்பிக்கொண்ட பிறகு ஞாபகம் வந்து விட்டது. ஒரு மாதத்துக்கு முன்பு அதிகாலை வேளையில் ஒரு பெண்ணை மிரட்டிச் சங்கிலியை அபகரித்தோமே, அவளேதான் இப்பெண்மணி என்று புரிவதற்கு அதிக நேரமாகவில்லை. ஒருவித ஆவலினால் உந்தப்பட்டவனாக குமார் அச்செய்தியைப் படிக்க ஆரம்பித்தான்.


''பாம்பாஸ் காலனியில் ஸர்வெண்ட்ஸ் குவார்ட்டர்ஸ் ஒன்றில் குடியிருக்கும் டிரைவர் சதீஷின் பெண் நிர்மலே, அவள் மாமியாரும், நாத்தனார்களும் சதித் திட்டமிட்டு அவள் சமையல் அறையில் வேலை செய்து கொண்டிருந்தபொழுது அவள் மீது மண்



ருஷ்யாவின் ஆப்கன் படையெடுப்பு - ஆக்கிரமிப்பு காரணமாக ருஷ்ய ஒலிம்பிக்கைப் பகிஷ்கரிக்க வேண்டும் என்ற கருத்து உலகில் பரவலாகப் பலம் பெற்று வருகிறது.

ஒலிம்பிக் சின்னத்தையும் ருஷ்யாவின் ஆப்கன் ஆக்கிரமிப்பையும் இணைத்துச் சாதுர்யமாக வரையப்பட்ட இரு கார்ட்டூன்கள்.

நன்றி: நியூஸ்வீக்; டைம்



ணெண்ணெயைக் கொட்டி, தீக்கு இரையாக்கி விட்டார்கள்.

நிர்மலின் புக்ககத்தார், அவள் ஒவ்வொரு முறை பிறந்த வீட்டுக்குப் போய்விட்டு வரும்பொழுதும், சைக்கிள், தையல் மிஷின், பீரோ என்று சீர் கொண்டு வர வேண்டும் என்று துன்புறுத்துவார்களாம். இம்முறை பிறந்த வீட்டிலிருந்து திரும்பிய நிர்மல், கழுத்தில் அணிந்திருந்த சங்கிலி திருட்டுப் போய்விட்டது என்று சொன்னதை நம்பவில்லையாம் அவர்கள். மேற்கொண்டு சீர் கொண்டு வராமல், இருந்த சங்கிலியையும் பிறந்த வீட்டில் வைத்துவிட்டு வந்துவிட்டாள் என்ற ஆத்திரத்தில் இந்தக் கொடூரமான செயலில் இறங்கி விட்டார்கள்.

அக்கம் பக்கத்தில் உள்ளோரின் உதவியினால் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்ட நிர்மல், இறப்பதற்கு முன்பு கொடுத்த வாக்கு மூலத்தில் இவ்விவரங்களைக் கூறினாள்.''

செய்தியைப் படித்து முடித்த குமாருக்குத் தலை சுற்றியது. த்ரில், அட்வென்சர் என்று நினைத்துத் தான் செய்த காரியம் ஓர் அப்பாவியின் உயிர் இவ்வுலகை விட்டுப் பிரிவதற்குக் காரணமாக இருந்துவிட்டது என்று நினைக்கையில் துக்கம் தாளவில்லை. வாழ்நாள் முழுதும் மனச்சாட்சி உறுத்திக் கொண்டே இருக்குமே, தான் செய்த பாவத்துக்கு மன்னிப்பு ஏது என்று எண்ணி எண்ணி மறுகினான் குமார்.

திக்குத் தெரியாத தீவுக் காட்டில் விழுந்து நொறுங்கிய விமானத்திலிருந்து தப்பிப் பிழைத்த சிலரை வைத்துக் கொண்டு படத்தை இழு இழு என்று இழுத்துவிட்டிருக்கிறார்கள். டார்ஜான் படம் என்று நினைப்பு.

ஏதோ புதையலாம்! அதைக் கண்டுபிடிக்க ஒரு பெரும் கூட்டம் முயல்கிறதாம். (திரைக் கதையைக் கண்டுபிடிக்கப் படம் பார்ப்பவர்கள் அரும்பாடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள்) ஜம்பு சிறு பையனாக இருந்தபோதே அவன் தந்தை அந்தப் புதையலைக் காப்பதில் தம் உயிரையே இழந்துவிட்டாராம்....

இப்படி யெல்லாம் கதையளக்க முயன்றிருக்கிறார்கள்.

ஜெய்சங்கர் டார்ஜான் உடையோடு வருவதோடு சரி. மரத்துக்கு மரம் டார்ஜான் தாவுகிற மாதிரி 'பாவ்லா' பண்ணுகிறார். சண்டைக் காட்சிகளில் ஜமாய்க்கும் ஜெய்சங்கர் தம் 'வெய்ட்டை'க் குறைக்கப் பெரு முயற்சி எடுக்க வேண்டும்.

இந்தப் படத்துக்கு எப்படி 'ஏ' சர்டிபிகேட் கிடைக்கவில்லை? காட்சிகளிலும் சரி, உரையாடல்களிலும் சரி, 'சென்ஸார்' போர்டு கவனிக்க வேண்டியவை இருக்கின்றனவே! உதாரணம்: ஜம்புவின் காதலி ஆண், பெண் சிங்கங்கள் இணைய விழைந்து ஒன்றோடு ஒன்று பிணைந்து கொள்ளும் காட்சியைக் காட்டி அவனையும் தன்னோடு இணையும்படி தூண்டுவது.

தேங்காய் சீனிவாசன், வெண்ணிற ஆடை மூர்த்தி, மனோரமா, சும்மா சொல்லக்கூடாது — நகைச் சுவையைப் புகுத்த அரும் பாடு பட்டிருக்கிறார்கள். படம் பார்க்கிறவர்கள் சிரிக்கா விட்டால் அவர்கள் என்ன செய்வார்கள்!

படம் பார்க்கப் போகிறவர்கள் துளிப் பஞ்சைக் கையோடு எடுத்துப் போவது நல்லது. படம் முழுவதும் கேட்கும் காட்டுக் கத்தல் இல்லை என்றால் தாங்க முடியாது!

சிங்கம், புலி, குரங்குகள், யானைக் கூட்டம், தாவிப் பறக்கும் மான்கள் எல்லாம் வருகின்றன. குளு குளு வண்ணக் காட்சிகள் அருமையாயிருக்கின்றன. ஒளிப் பதிவுக்குக் கலைஞர் எம். கர்ணன் தம் கைவண்ணத்தைத் திறமையாகக் காட்டியிருக்கிறார்.


பரத நாட்டியத்திலிருந்து டப்பாங்குத்து வரையில் எல்லா ஆட்டங்களையும் இவ்வண்ணப் படத்தில் காணலாம்.


தமிழ்த் திரைப் படங்கள் வெகுவாக முன்னேறிச் சிறந்த முறையில் வெளிவந்து கொண்டிருக்கும் சமயத்தில் இப்படியொரு படமா?

- காந்தன்

ஜம்பு


பட விமரிசனம்











சென்னை, இண்டியில் உள்ள செல்லம்மாள் மகளிர் கல்லூரி. க்விஸ் போட்டியில் பங்கேற்க மாணவிகளிடையே ஏகப் போட்டி. கல்லூரி முதல்வர் முன்னிலையில் சீட்டுக் குலுக்கிப் போடப்பட்டு ஆறு மாணவிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். உதவிப் பேராசிரியை திருமதி அனந்தலக்ஷ்மி, 'கல்கி' தயாரித்த கேள்விகளைக் கொண்டு நிகழ்ச்சியைச் சுவைபடத் தொகுத்தளித்தார். திருமதி அனந்தலக்ஷ்மி சுப்பிரமணியம் நடுவராக இருந்து தயாரித்த இந்த நிகழ்ச்சியில் வெற்றி அடைந்து கல்கியின் பரிசாக ரூ. 50 பெற்றது குமாரி அனந்தலக்ஷ்மி என்று அதே பெயர் கொண்ட மாணவியே என்பது ஒரு சுவையான ஒற்றுமை.

போட்டியில் பங்கு பெற்ற மாணவியர்:

(1) குமாரி எஸ். அனந்தலக்ஷ்மி
(2) குமாரி என். லலிதா
(3) குமாரி எஸ். பத்மாவதி
(4) குமாரி வி. ஆர். உஷா
(5) குமாரி வி. கமலா
(6) குமாரி ஏ. பி. சாந்தி

கேள்விகள்

1. 1979ம் ஆண்டு அகில உலகக் குழந்தைகள் ஆண்டாகக் கொண்டாடப்பட்டது. அம்மாதிரி கொண்டாடப்பட அடிப்படைக் காரணம் கூற இயலுமா? (பரிசோதனைக் குழாய் குழந்தையின் தோற்றத்தைக் கொண்டாடும் வகையில் என்று ஒரு மாணவி கூறினார்! சரியான விடையை எவரும் கூறவில்லை.)
2. Cofeposa என்பதன் விரிவு என்ன? (எவரும் விடையைக் கூறவில்லை.)
3. ஜாலியன் வாலாபாக் படுகொலை எந்த ஆண்டு நிகழ்ந்தது? (பலவிதமான பதில்கள் வந்தன. சரியான விடையை எவரும் கூறவில்லை.)
4. டலால்தெருவின் முக்கியத்துவம் என்ன? எங்குள்ளது? (பாதிக் கேள்விக்கு அனந்தலக்ஷ்மி சரியாகப் பதிலளித்தார்.)
5. கந்தர் அநுபூதியை இயற்றியவர் யார்? (குமாரி சாந்தி விடையைச் சரியாகச் சொன்னார்.)
6. 12வது காமன்வெல்த் விளையாட்டுக்கள் எந்த ஆண்டு, எங்கு நடைபெறும்? (பாதிக் கேள்விக்குச் சரியாக விடையளித்தவர் கமலா.)
7. காப்டன், கர்னல், மேஜர், லெப்டினெண்ட் கர்னல் ஆகியவை இந்தியத் தரைப் படையில் உள்ள சில பதவிகள். இவற்றை உயர்பதவியில் ஆரம்பித்து வரிசைப்படுத்தவும். (சரியான விடையைக் கூறி குமாரி உஷா பரிசுபெற்றார்.)

இந்தியப் பெண்கள் சர்வகலாசாலை இயக்கத்தின் ஆதிகர்த்தா யார்?



✕ குமாரி அனந்தலக்ஷ்மி கல்லூரி முதல்வரிடம் பரிசு பெறுகிறார் ✕ பார்வையாளரில் ஒரு பகுதி

8. வார்ட் இல்லானின் யார் என்று கூற இயலுமா?
(சரியான விடையை எவரும் கூறவில்லை)

9. L S Dயைப் பற்றிக் கேள்விப்படாத மாணவ, மாணவியர் இருக்க முடியாது. L S D யின் விரிவு என்னவென்று கூற இயலுமா?
(எவரும் சரியான விடையைக் கூறவில்லை.)

10. பிற்காலத்திய சோழர் காலத்தவரான ராஜாதித்த சோழரின் தந்தையின் பெயரைக் கூற முடியுமா?
(ராஜ ராஜ சோழன், ஆதித்திய சோழன் போன்றெல்லாம் விடைகள் வந்தன. சரியான விடையை எவரும் கூறவில்லை.)

11. 'Mousetrap' என்ற நாடகம் பிரிட்டனின் நாடக வரலாற்றில் மிகவும் நீளமானதாகக் கருதப்படுகிறது. அதனை எழுதியவர் யார் என்று கூற இயலுமா?
(ஷேக்ஸ்பியர், சார்லஸ் டிகன்ஸ் என்று விடைகள் வந்தன. சரியான விடையை ஓர் உதவிப் பேராசிரியை கூறினார்.)

12. அந்தமான் தீவுகளின் தலைநகரம் எது?
(சரியான விடையை அனந்தலக்ஷ்மி கூறினார்.)

13. 'பன்னு' என்ற இடம் எங்குள்ளது? அதன் முக்கியத்துவம் என்ன?
(எவரும் சரியான விடையைக் கூறவில்லை)

14. திரு அகிலன் தனது எந்த நாவலுக்காக ஞானபீடப் பரிசைப் பெற்றார்?
(சரியான விடையைக் குமாரி லலிதா கூறினார்.)

15. 'ஸ்கைலாப்' எந்தத் தேதியில் விழுந்தது என்று கூற இயலுமா?
(எவராலும் கூற இயலவில்லை.)

16. மூடப்பட்ட பொருளாதாரம் (Closed economy) என்று எது அழைக்கப்படுகிறது?

17. இந்தியாவில் பெண்கள் சர்வகலாசாலை இயக்கத்தின் ஆதி கர்த்தா யார்?
(விடையை எவராலும் கூற இயலவில்லை)

18. Claustrophobia என்றால் என்ன?
(ஓர் உதவிப் பேராசிரியை இதற்கான விடையைக் கூறினார்.)

19. புதிய மத்திய அரசாங்கத்தில் திட்டக் கமிஷனின் தலைவர் யார்?
(ஆர். வெங்கட்ராமன் என்று ஒரு மாணவி கூறினார். சரியான விடையைப் பார்வையாளரில் கே. பாரதி என்ற மாணவி கூறினார்.)

20. ஈரானிய மன்னரைப் பற்றி செய்திகள் வந்தவண்ணம் உள்ளன. அவரது முழுப் பெயர் என்ன?
(சரியான விடையை எவரும் கூறவில்லை)

✕ பங்கு பெற்ற மாணவிகளும் கல்லூரி முதல்வரும், குவிஸ் மாஸ்டரும் (நடுவில் உட்கார்ந்திருப்பவர்)



21. மருத்துவத் துறையில் இந்தியாவில் அளிக்கப்படும் உயர்வான கௌரவ விருது எது?
(எவரும் இக் கேள்விக்குச் சரியான விடை அளிக்கவில்லை.)

22. தமிழ் மொழியின் சிறப்பு எழுத்துக்கள் என்று எவற்றை டாக்டர் கால்ட்வெல் குறிப்பிட்டார்?
(இக்கேள்விக்கான விடையையும் எவரும் சரியாகக் கூறவில்லை.)

23. கேரள மாநிலத்தின் தற்போதைய கவர்னர் யார்?
(இக்கேள்விக்கான சரியான பதிலை அனந்தலக்ஷ்மி கூறினார்.)

24. 'Lame Duck Session' என்று எது அழைக்கப்படுகிறது?
(எவரும் விடையளிக்கவில்லை.)

25. தென் பிராந்திய தணிக்கைக் குழுவில் அங்கத்தினராக உள்ள ஒரு தமிழ் எழுத்தாளரின் பெயரைக் கூற இயலுமா?
(நா. பார்த்தசாரதி, சுஜாதா என்று விடைகள் வந்தன. சரியான விடையை எவரும் கூறவில்லை.)

26. அதிகார பூர்வமான டெஸ்ட் மேட்ச்களில் இந்தியாவின் சார்பாக இதுவரை இரட்டைச் சதம் போட்ட பேட்ஸ்மென்கள் யாவர்?
(இக்கேள்விக்கான விடையைக் கமலாவும் அனந்தலக்ஷ்மியும் இணைந்து கூறி மதிப்பெண்ணைப் பகிர்ந்து கொண்டனர்.)

27. தமிழின் இரட்டைக் காப்பியங்கள் என்று எவை அழைக்கப்படுகின்றன?
(ராமாயணம், மகாபாரதம் என ஒரு மாணவி கூற, குமாரி சாந்தி இக்கேள்விக்கான சரியான விடையை அளித்து மதிப்பெண் பெற்றார்.)

28. Freedom at Midnight என்ற புத்தகம் எதனை அடிப்படையாகக் கொண்டு யாரால் எழுதப்பட்டது?
(மகாத்மா காந்தி எழுதியது, ராஜாஜி எழுதியது என்று விடைகள் வந்தன. சரியான விடையை எவரும் கூறவில்லை)

29. தமிழ் நாடகங்களின் தந்தை யார்?
(சரியான விடையை உஷா கூறினார்.)

30. தமிழ் இலக்கியத்தின் தாத்தா என்று யார் அழைக்கப்படுகிறார்?
(அனந்தலக்ஷ்மி சரியான விடையைக் கூறினார்.)

ரயில்வே கார்டின் பெண்ணைக் காதலிக்கும் வாலிபன் நண்பனிடம்: "தன் தந்தை எங்கள் திருமணத்துக்குச் சம்மதித்தால் பச்சை புடவை ஜாக்கெட்டும், சம்மதிக்காவிட்டால் சிவப்பு புடவை ஜாக்கெட்டும், அணிந்து வருவதாகச் சொன்ன என் காதலி ஆரஞ்சு ரவிக்கையும் பச்சைப் புடவையும் அணிந்து வந்தாள்."

அதற்கென்ன அர்த்தம்?

ஆறு மாதம் பொறுத்திருந்து திருமணமாம்.

—சிதா கண்ணன்



விடைகள்:

(1) ஆஸ்திரேலியா, சிட்னியில் வசிக்கும் ஐந்து குழந்தைகளுக்கான ஒரு தாய், 1979ம் ஆண்டை அகில உலக குழந்தைகள் ஆண்டாகக் கொண்டாடலாம் என்று ஐக்கிய நாடுகள் சபைக்கு ஒரு யோசனை கூறவும் அது ஐ.நா. சபையால் ஏற்றுக்கொள்ளப்பட்டு அவ்வாறே கொண்டாடப்பட்டது. (2) Conservation of Foreign exchange and Prevention of Smuggling activities act (3) 1919 (4) பம்பாயின் ஸ்டாக் எக்ஸ்சேஞ்ச் டலால் தெருவில் உள்ளது. (5) ஸ்ரீ அருணகிரிநாதர். (6) 1982ம் ஆண்டு ஆஸ்திரேலியா பிரிஸ்டனில் நடைபெறும். (7) கர்னல், லெப்டினென்ட் கர்னல், மேஜர், காப்டன். (8) அகில உலக ஒலிம்பிக் கமிட்டியின் தற்போதைய தலைவர். (9) Lysergic Acid Diethylamide (10) ஸ்ரீ பராந்தக சோழர். (11) அகாதா கிரிஸ்டி. 12. போர்ட் பிளேர் (13) பன்னா மத்திய பிரதேசத்தில் உள்ளது. இங்கு வைரச் சுரங்கம் இருக்கிறது. (14) சித்திரப் பாவை. (15) 11—7—1979. (16) தேசங்களுக்கிடையே சுதந்திரமான வியாபாரம் நடக்குமானால் அதனை 'ஓப்பன் எகானமி' என்பர். ஏற்றுமதி இறக்குமதிகள் முழுமையாக அரசாங்கத்தாலே நிர்வகிக்கப்படுமானால் அத்தேசத்தில் 'குளோஸ்ட் எகானமி' நிலவுவதாகக் கூறுவர். (17) டி. கே. கார்லே. (18) குறுகலான அல்லது முற்றிலும் மூடப்பட்ட இடங்களில் இருக்கப் பயப்படுகிற அசாதாரண மனோநிலை. (19) திருமதி இந்திரா காந்தி. (20) Mohamed Reza Shah Pahlevi (21) தன்வந்திரி விருது. இந்தியன் மெடிகல் கவுன்சிலால் வழங்கப்படுகிறது. (22) ந. ஙு, மு, எ, ஒ. (23) திருமதி ஜோதி வெங்கடாசலம். (24) புதிய பாராளு மன்றம் கூடுவதற்கு முன்னால் பழைய பாராளு மன்ற உறுப்பினர்களைக் கொண்டு நடத்தப்படும் கடைசி பாராளு மன்றக் கூட்டம். (25) திரு அசோகமித்திரன் (இயற்பெயர் திரு தியாகராஜன்.) (26) வினு மன்காட், திலீப் சர்தேசாய், பாலி உம்ரிகர், நவாப் ஆஃப் படாவ்டி (ஜூனியர்), சுனில் கவாஸ்கர். (27) சிலப்பதிகாரம், மணிமேகலை. (28) இந்தியா சுதந்திரம் பெற்ற வரலாற்றினை அடிப்படையாகக் கொண்டு Larry Collins and Dominique Lapiere. ஆகிய இருவரால் எழுதப்பட்டது. (29) பம்மல் சம்பந்த முதலியார். (30) டாக்டர் உ. வே. சாமிநாதய்யர்.

தொகுப்பு நாயகன்
புகைப்படம்: மன்னை மூர்த்தி

கவிநாயகம்

மீ.ப.சோமு

இனிமையும் எளிமையும் தமிழ்ப் பண்பும் ஒருங்கே திரண்டு உருவாகிய எத்தனையோ பல நல்ல கவிதைகளை இயற்றித் தமிழ் அன்னைக்கு அவற்றை அழகிய அணிகலன்களாக அணிவித்தவர் புத்தேரிக் கவிநாயகமான தேசிகவிநாயகம்! அவரை நான் கடைசி முறையாகச் சந்தித்தது 1952ம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில்.

உடம்பு மிகவும் தொல்லை தந்துகொண்டிருந்த நிலையில் கவிமணி அவர்கள் நோயினால் அவதிப்பட்டுக் கொண்டிருந்த சமயம் அது. ஆனாலும் அவருடைய கவிக் குரல் தமிழ் மக்களுக்கு நிரந்தரமான செல்வமாக நிலைத்து நிற்க வேண்டும் என்று பெரிதும் ஆசைப்பட்டேன். எப்படியாவது புத்தேரிக்குச் சென்று அவரை ஒலிப்பதிவு செய்துவிட வேண்டும் என்று விரும்பினேன். அப்போது நான் திருச்சி அகில இந்திய ரேடியோவில் நிகழ்ச்சி நிர்வாகஸ்தராக இருந்தேன்.

என்னுடைய இந்த விருப்பத்துக்கு மிகவும் ஊக்கத்தோடு ஆதரவு தந்தவர் ஒரு மராத்தியக் கவிஞர். ஆங்கிலத்திலும் மராத்தி மொழியிலும் பல அபூர்வமான கவிதைகளும் வசன நூல்களும் எழுதித் தமக்கென்று ஒரு நிலையான இடத்தைப் பெற்ற சிறந்த எழுத்தாளர் அவர் — பி.எஸ். மர்தேகர்! அவர் அப்போது திருச்சி நிலையத்தின் தலைவராக இருந்தார். ''என்ன செலவானாலும், எவ்வளவு சிரமம் ஏற்பட்டாலும் இந்த முயற்சியை நிறைவேற்றிவிடுங்கள்!'' என்று உற்சாகமாகச் சொன்னார் கவிஞர் மர்தேகர்.

நானும் நன்கு தேர்ச்சி பெற்ற சில பொறியியல் வல்லுநர்களும் இந்த அரிய ஒலிப்பதிவுக்கு என்றே சில உயர்ந்த ஒலிக் கருவிகளை எடுத்துக் கொண்டு ஒரு பெரிய 'வானில்' புத்தேரிக்குப் பயணம் ஆனோம்.

கவிமணி அவர்களுடைய வீடு இருக்கும் குறுகலான தெருவுக்குள்ளே எங்கள் வண்டி நுழைய முடியவில்லை. சாலையிலேயே அதை நிறுத்தி வைத்துவிட்டு நானும் ஒலிப் பொறியியல் அதிகாரிகளும் அந்த முடுக்கு வழியாக நடந்து சென்று கவிமணியின் வீட்டினுள் நுழைந்தோம். அப்படியே திடுக்கிட்டுப் போனேன்!

கவிமணி அவர்கள் கட்டிலோடு ஒட்டிப் போய்ச் சுருண்டு படுத்திருந்தார். தொண்டைப் புகைச்சலும் கடுமையான ஆஸ்துமா நோயின் 'மூசுமூசு' என்ற இழுப்பும் ஓசையோடு கேட்டன. நான் அறையினுள் சென்றேன். காலடி ஓசை கேட்டு மெதுவாகத் திரும்பிப் பார்த்தார் கவிமணி.

''ஓ! நீங்களா? ஒலிப் பதிவுக்காக வந்திருக்கிறீர்களா?''

அடுத்த விநாடி அப்படியே ஒரு குழந்தையைப் போலச் 'சரேல்' என்று எழுந்து உட்கார்ந்துவிட்டார்.



அந்த அன்பையும் அந்தப் பண்பாட்டையும் எப்படிச் சொல்வேன்!

மருமகன் திரு குமாரசுவாமியைக் கூப்பிட்டார். நாற்காலிகள் வந்தன. காப்பி வந்தது. பழங்களும் பணியாரங்களும் தட்டுத் தட்டாக வந்தன! அந்த உபசரிப்பில் திக்குமுக்காடினோம்!

என்றாலும் எனக்கும் என்ஜினீயர் நண்பர்களுக்கும் கவலை விட்டபாடாக இல்லை! கவிமணியின் உடல்நிலையைப் பற்றிய அடிப்படையான கவலை. அதோடு இத்தனை மைல்கள் கடந்து வந்தும், இத்தனை பெரிய பெரிய இயந்திரங்கள் வந்தும் ஒலிப்பதிவு நடவாது போய்விடுமோ என்ற ஏக்கம் ஒரு பக்கம்!

பொறியாள நண்பர்களில் தலைமை என்ஜினீயர் வங்காள நாட்டைச் சேர்ந்தவர். அவர் காலைக் காலைத் தேய்த்தார். தயங்கினார். தயங்கிக் கொண்டே, ''எங்கள் இயந்திர வண்டி சாலையில் நிற்கிறது!'' என்றார்.

எங்கள் தயக்கத்தை ஒரு நொடியில் புரிந்து கொண்டுவிட்டார் கவிமணி. மருமகனை அழைத்து எங்கள் இயந்திரங்களை எல்லாம் உடனே வீட்டுக்குள் எடுத்து வர ஏற்பாடு செய்யும்படி கூறினார். சாய்வு நாற்காலியில் வந்து உட்கார்ந்து கொண்டார்.

வங்காள நண்பருக்குக் கவிமணியைப் பற்றி ஏற்கனவே நான் சொல்லியிருந்தேன், 'இவர் எங்கள் தாகூர்' என்று! அதிலிருந்து அவருக்கும் கவிமணியிடம் அளவு கடந்த மரியாதையும் ஒலிப் பதிவை எப்படியாவது முடித்துவிட வேண்டும் என்ற ஆர்வமும் அலை வீசிக் கொண்டிருந்தன!

இந்த நிலையில் கவிமணி அவர்கள் எல்லோருடைய மனநிலையையும் புரிந்து கொண்டவராய் ஒலிப்பதிவுக்கு எவ்விதமான பழுதும் வரக்கூடாது என்ற எண்ணத்தில் ''மைக்''குக்கு முன்னால் ஆயத்தமாகிக் குரலை இருமிச் சரிப்படுத்திக் கொள்ள முனைந்தார்.

நிகழ்ச்சி சரிவர நடைபெற வேண்டுமே என்ற கவலை அந்தே நிமிஷத்தில் பறந்தோடிவிட்டது!

அமெரிக்காவில், டென்வர் (Denver) எனும் ஊரில் உள்ள நெடுஞ்சாலையில் இப்படி ஒரு அறிவிப்புப் பலகை எழுதி வைத்திருக்கிறார்கள்:

1. 40 மைல் வேகத்திற்கு மேல் காரில் இச்சாலையில் பயணம் செய்தால், தாங்கள் இவ்வூர் சிறைச் சாலையை விஜயம் செய்ய நேரிடலாம்.

2. 60 மைல் வேகத்திற்குமேல் சென்றால் தாங்கள் இவ்வூர் மருத்துவ மனையை விஜயம் செய்ய நேரிடலாம்.

3. 80 மைல் வேகத்திற்கு மேல் சென்றால், தாங்கள் இவ்வூர் இடு காட்டை விஜயம் செய்ய நேரிடலாம்.

தகவல்: ஏ. என். ராஜன்

''உங்களைப் பார்த்ததும் என் உடம்பின் க்ஷீணம் எல்லாம் பறந்தோடிவிட்டது!'' என்ற அன்பு ததும்பும் வாக்கியத்துடன் உரையாடலைத் தொடங்கினார் ஒலிப் பதிவுக் கருவிக்கு முன்னால் இருந்து கொண்டு! கவிமணியின் உள்ளப் பாங்கிற்கும் அவருடைய உயர்ந்த பண்பாட்டுக்கும் ஒரு நிலையான சான்றாக இன்றும் அந்த வாக்கியம் ஒலிப் பதிவிலே நிற்கிறது.

''க்ஷீணம் பறந்தோடிவிட்டது!'' என்று நாஞ்சில் தமிழில் சொன்னதோடு மட்டுமில்லை தம்முடைய இலக்கியங்கள், தமது கவிதையின் தோற்றம், தம்முடைய தமிழ்ப் பயிற்சி முதலிய பலவற்றையும் குறித்து உற்சாகத்தோடு பதில் சொல்லி வந்தார் ஒலிப் பதிவிலே! இடையில் இருமலும் இழுப்பும் வரும்போது திடமான சித்தத்தோடு அடக்க முயல்வார். அதையும் மீறி எழுந்தால் சற்றுத் தாமதம் கொடுத்துச் சமாளித்துக்கொண்டு ஒலிப் பதிவைத் தொடருவார்!

மறக்க முடியாத ஓர் அனுபவம் அது! அங்கங்கே நாங்கள் ஓய்வு எடுத்துக்கொள்ளும்படி கவிமணியை வேண்டிக்கொண்டோம். அப்படி வேண்டியிராவிட்டால் ஒரே மூச்சில் அத்தனை பேச்சையும் பேசி முடிப்பதற்கு ஆயத்தமாக இருந்தது கவிமணியின் குழந்தை உள்ளம்!

எங்களைப் போலவே எங்கள் ஒலிக் கருவிகளும் நிலைமையைப் புரிந்து கொண்டு எங்களோடு ஒத்துழைத்தன என்றுதான் சொல்ல வேண்டும். ஏனென்றால் அந்தக் காலத்தில் இப்போதைய முன்னேற்றங்கள் இல்லாத கருவிகள்! ''ப்ரெஸ்டோ'' என்று அழைக்கப்படும் பெரிய பெரிய தோசைக் கற்களிலேதான் ஒலிப் பதிவு செய்ய வேண்டும்! இன்று போல் ஒலி நாடாக்கள் இல்லாத காலம். இயந்திரங்களும் பூதாகாரமானவை! ஒரு சிறு கோளாறு ஏற்பட்டாலும் கஷ்டம் தான்.! இத்தனை இடர்ப்பாடுகளையும் சரிக்கட்டியது, கவிமணியின் ஆர்வமும் தமிழ் மக்களை நோக்கி மனம் திறந்து பேசவேண்டும் என்ற அவருடைய கவி உள்ளமுமே!

இயந்திரங்கள் செய்த பதிவிலே கவிமணியின் பேச்சு பதிவாகிவிட்டது! எங்களுடைய உள்ளத்திலோ என்றால், கவிமணியின் அன்பும், அந்த அழகிய குரலும், அவருடைய கவிப் பண்பில் தோய்ந்த உள்ளப் பாங்கும் நன்கு பதிவாகிவிட்டன!

வயல்களும், ஏரி குளங்களும் தாமரை மலர்களுமாகக் காட்சி தருகிற புத்தேரி; அந்தத் தாமரை மலர்களோடு மலர்களாக ''மலரும் மாலை''யுமாக மலர்ந்த கவிமணியின் கவிமலர்கள் — எல்லாம் மனத்தில் நன்கு ஒலிப்பதிவு ஆகிவிட்டன!

உள்ளத்தில் ஒலிப்பதிவாகி நினைவுச் செவியிலே நீங்காது ஒலித்துக் கொண்டிருக்கும் சில ஒலி அலைகளைக் கல்கி நேயர்களோடு பகிர்ந்துகொள்ளும் வாய்ப்புக் கிடைத்தமைக்கு மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். நன்றி. வணக்கம்.

A BRIDGE TOO FAR

பிரமிக்கவைக்கும் போர்முனைப் படம்!



இரண்டாம் உலகப் போரைப் பின்னணியில் எடுக்கப்படும் அமெரிக்கப் படங்கள் பெரும்பாலும் நேச நாடுகளின் வெற்றிகளையே காட்டும். விதிவிலக்காக இந்தப் படத்தில் உலகப் போரின் இறுதி கட்டத்தில் ஓர் அரங்கில் ஜெர்மானியரின் சாகசமும் நேச நாடுகளின் ஒரு திட்டம் பிசுபிசுத்துப் போவதும் காண்பிக்கப்படுகிறது. போரினால் ஏற்படும் துன்பங்களும் கொடூரங்களும் நன்கு சித்திரிக்கப் படுகின்றன. ஜெர்மனியின் ஆக்கிரமிப்பில் உள்ள ஐரோப்பிய நாட்டில், அவர்கள் பின் வாங்கும்போது பாலங்களை அழித்து விடலாம் என்பதால் அதைத் தவிர்க்க, பாராசூட் துருப்புகளை இறக்கிப் பாலங்களை முற்றுகையிடுவதே நேச நாடுகளின் நோக்கம். துணிச்சலாகப் புறப்படுகின்றனர். தந்திரக்காரர்களான ஜெர்மானியர்கள் பதுங்கியிருந்து பாலங்களையும், வீடுகளையும், வீரர்களையும் பாட்டன் டாங்கிகள் [illegible] கட்டுத் தள்ளுகின்றனர். ஏராளமான பேரின் மரணத்துக்கும் பிறகு நேசப்படைகள் திட்டத்தில் தோல்வி கண்டு வாபஸாகின்றனர்.

சோல்ஜர்கள் மழையில் சொட்டச் சொட்ட நனைந்து நகர்வது, விமான நிலையத்திலிருந்து விமானங்கள் கிளைடர் விமானங்களை இழுத்துக்கொண்டு கிளம்புவது, விமானத்திலிருந்து வீரர்கள் பாரசூட்டில் இறங்குவது, கொடிய யுத்தத்தின் இடையிலும் மனிதாபிமானச் செயல்கள், பயங்கரமான போர் காட்சிகள் எல்லாமே அற்புதமாகப் படமாக்கப் பட்டுள்ளன,

—டி. எம். ஆர்.



இளமையில் கல்

அருள்வாக்கு

ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராசாரிய சுவாமிகள்

கவிகளில் சிறந்தவர் காளிதாசர். சிறு பிராயத்தில் கல்வியைக் கருத்தோடு பெற வேண்டும் என்று கூறுகிறார். கல்விக்கு இரண்டு அங்கங்கள் உண்டு. ஒன்று குருபக்தி. மற்றொன்று விநயம்.

மருந்து சாப்பிடும்போது பத்தியமாக இருக்க வேண்டியிருக்கிறது. படிப்பும் ஒரு மருந்து. பத்தியத்தினாலேயே நோய் குணமாகி விடுவதுண்டு. மருந்துகூட இரண்டாம் பட்சமானதுதான். பத்தியமே முக்கியம். படிப்புக்குப் பத்தியமாகிய குரு பக்தியும் விநயம் என்னும் அடக்கமும் அத்தியாவசியமானவை.

தாய், தந்தை, குரு இம்மூவரிடமும் அசையா பக்தி கொண்டிருந்தால் மேன்மை தானாகவே வந்து அடையும். வேதம் அடிக்கடி மாத்ரு பக்தி, பித்ரு பக்தியை வற்புறுத்தியிருக்கிறது. வெவ்வேறு சாகைகள், வெவ்வேறு உபநிஷத்துக்கள் எல்லாம் இதைச் சொல்லியிருக்கின்றன. ஔவையார் ''அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்' என்று சொல்லியிருக்கிறார். வேதமும் ஔவையாரும் அன்னையையும் பிதாவையும் தெய்வமாக பாவிக்க வேண்டும் என்று சொல்லியிருப்பதால், தெய்வம் ஒன்று இருக்கிறது என்பது நிச்சயம்.

மாணவர்களுக்குக் கற்பிக்கும்போதுதான், உபாத்தியாயர்களுக்குத் தாங்கள் ஏற்கெனவே படித்ததை மனனம் செய்ய வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. அப்போது அவர்கள் மறுபடி கற்போர் ஆகிவிடுகிறார்கள். பலவிதமான ஜீவனம் செய்ய வேண்டியிருப்பதில், ஆசிரியர்கள் தான் தாங்கள் கற்ற வித்தையையே ஜீவனத்துக்கு வழியாக உபயோகிக்கிறார்கள். மற்றவர்கள் படிப்பு முடிந்தால் வேறு வேஷம் போட்டுக் கொண்டு போய்விடுகிறார்கள்.


தாங்கள் கற்பிக்கப் போகிற விஷயத்தை முன்னாடியே உபாத்தியாயர்கள் ஆராய்ந்து கொண்டுவிட்டால், பிள்ளைகள் மனத்தில் பதியும்படி போதிக்கக் கூடிய சக்தி உண்டாகிவிடும்.

உங்களுக்கு இந்தக் கதை தெரிந்திருக்கும். ஒரு வித்வான் ஓர் அரசரிடம் சென்று, அவருக்குத் தாம் பாகவதம் சொல்வதாகச் சொன்னாராம். 'எனக்கு இப்பொழுது கேட்க அவகாசம் இல்லை. மறுபடியும் அவகாசம் கிடைக்கும்போது அவசியம் கேட்கிறேன். அதற்குள் பாகவதத்தைப் படித்துக் கொண்டு வாருங்கள்!'' என்று பணிவாகச் சொல்லி அனுப்பினாராம் அரசர்.

இப்படியே இருபத்தொரு முறை அரசர் அவரைத் திருப்பி யடித்திருக்கிறார். இருபத்திரண்டாம் முறை அவர் வரவில்லை. காரணம், பாகவதத்தின் அந்தரங்கத்தை அறிந்து கொண்டு ஆத்ம லாபத்தைத் தேடி வித்வான் வனத்துக்குப் போய்விட்டார். அப்படி அவர் போய்விட்டதை அறிந்த அரசர் பிறருக்கு உபதேசம் செய்யும் பக்குவம் அவருக்கு அப்பொழுது வந்து விட்டது என்பதை உணர்ந்து, தாமே நேராகச் சென்று அவரை வணங்கித் தமக்கு உபதேசம் செய்ய வேண்டும் என்று பிரார்த்தித்து அழைத்து வந்தாராம். இதிலிருந்து 'படிக்கப் படிக்க உட்கருத்து வெளிப்படும் அப்பொழுது கற்பிப்பதற்கு யோக்கியதை பெறும்' என்று விளங்கவில்லையா?

[நன்றி அமரபாரதி மாத இதழ். காஞ்சி முனிவர் சூட்டிய பெயரோடும் அனுக்கிரகத்தோடும் தோன்றியுள்ள இப்பத்திரிகையின் ஆசிரியர் ரா. வீழிநாதன். தனிப்பிரதி விலை ரூ. 1-50. ஆண்டுச் சந்தா ரூ. 17-00. விலாசம்: 12, கிழக்குத் தெரு, மேற்கு சி.ஐ.டி நகர், சென்னை-600035.

உலகிலேயே மிக அதிகமான பெண் எழுத்தாளர்கள் உள்ள நாடு ரஷ்யா. —கே. அகிலா





✖ வி. தேவராஜ, தேவராயபுரம்

கே: இளம் எழுத்தாளர்களுக்குத் தாங்கள் கூறும் அறிவுரை என்ன?

ப: மற்றவர்கள் எழுதியதை நிறையப் படியுங்கள். எப்படி எழுதியிருக்கிறார்கள் என்பதைக் கூர்ந்து கவனித்துப் படியுங்கள். நீங்கள் எழுதிய கதை, கட்டுரைகளையே திரும்பத் திரும்பப் படித்துக்கொண்டிருக்காதீர்கள். உங்கள் நண்பர்களிடம் கொடுத்துப் படிக்கச் சொல்லி அபிப்பிராயம் கேட்காதீர்கள். நட்பிற்காகப் பாராட்டிச் சொல்லுவார்கள். உங்களுக்குத் திருப்தி ஏற்படும் கதையைப் பத்திரிகைகளுக்கு அனுப்புங்கள். கதையுடன் உங்கள் இலக்கிய ஆர்வம், எழுதத் துடிக்கும் வேகம் முதலிய சுயசரிதப் பிரதாபங்களை எழுதிய கடிதத்தை வைக்காதீர்கள். கதை திரும்பி வந்தால் கவலைப் படாதீர்கள். வேறு எழுதி அனுப்புங்கள்.

✖ எஸ். ஏ. தாஸ், சென்னை-4

கே: எத்தனையோ கேள்விகேட்டும் பிரசுரமாகவில்லை. இது உமக்கே சரியாகப் படுகிறதா? விளக்க என் கோபத்திற்கு ஆளாகாதீர்.

ப: பிரசுரித்து விட்டேன். கோபம் தீர்ந்ததா?

✖ ஜி. சுப்ரமணியன், கரூர்

கே: எதிர்க்கட்சிகள் இப்போதாவது 'ஒன்று பட்டால் உண்டு வாழ்வு. இன்றேல் அனைவர்க்கும் தாழ்வு' என்று புரிந்து கொண்டிருக்குமா?

ப: அவர்களுக்குத் தெரிந்த விஷயம்தான். ஒன்றுபடும்போது கிடைக்கும் 'வாழ்வை' பங்கு போட்டுக் கொள்வதில் தானே ஸ்வாமி, கசமுச ஆரம்பிக்கிறது!

✖ ஆர். முரளிகுமார், சென்னை-33

கே: ஒரு தபால் கார்டில் கடிதம், துணுக்குக் கேள்விகள் எழுதியவரைக் கிண்டல் செய்கிறீர்களே தபால் ஆபீஸில் கார்டு தவிர வேறொன்றும் கிடைப்பதில்லை என்பது தெரியுமா?

ப: தெரியும். ஆனால் ஒருத்தருக்கு ஒரு கார்டுதான் என்று தருகிறார்களா?

✖ ஆர். ஜானகிராமன், திருவாரூர்

கே: லட்ச ரூபாய் பரிசு லாட்டரியில் பரிசு வந்தால் என்ன செய்வீர்கள்?

ப: யாருக்கும் சொல்லாமல், பரிசை வாங்கிக் கொள்வேன்.

✖ கதா மணிமேகலை, வேலூர்

கே: இப்போது, திறமையை விட அதிர்ஷ்டத்திற்கு அதிக வாய்ப்பு என்று தோன்றுகிறது.

ப: நான் கேள்வி — பதில் பகுதி எழுதுவதை வைத்துக்கொண்டு இப்படிப் பட்ட முடிவுக்கு வந்து விட்டீர்களா?

✖ எஸ். சுவர்ணலதா, சென்னை-10

கே: மருத்துவக்கல்லூரி மாணவியான எனக்கும் புத்தக உதவி தேவைப் படுகிறது. யாரை அணுகினால் உதவி கிடைக்கும்?

ப: தெரியவில்லையே, 'சகோதரி! உன் நிலைமையைப் பார்த்து யாராவது உதவி செய்யட்டும் என்றே இக் கேள்வியை இங்கு தருகிறேன். இந்த நாட்டில் ஈரமுள்ள நெஞ்சங்களும் வள்ளல் தன்மையும் இல்லாது போகவில்லை.

✖ என். மதுரம், ஜீயபுரம்

கே: சினிமா துறையில் சேர்ந்து விடுங்களேன். எழுத்துத் துறை பிழைத்துப்போகட்டும்.

ப: இதே மாதிரி அவர்கள் சொல்லவேதான் இங்கு வந்துவிட்டேன்.

✖ ஜி. ஜெயராமன், கூத்தனூர்


கே: ராமாயணத்தில் உள்ள மொத்த கதா பாத்திரங்கள் எத்தனை?

ப: வானர சைனியத்தைச் சேர்த்தா சேர்க்காமலா?

ரூ. 5 பரிசு பெறுபவர்:

**ஜி. சுப்பிரமணியன்,
12-ஏ, இரண்டாவது
கிராஸ் தெரு,
காந்தி நகர், கரூர்.**

Printed by V. Murali and published by V. Vaidyanathan on behalf of Messrs Bharathan Publications Private Ltd., at the Bharathan Press, Guindy, Madras-600 032. Editor: K. Rajendran


பொறியைத் தட்டியதுமே...
திவ்யமான
ஒளி பரவுகிறது
அழகு
ஒளிர்ந்து சிரிக்கின்றது
உங்கள் பூஜை அறைக்கு,
உன்னதமானதொரு விளக்கு!
வீட்டினுள்ளே காம்ப்டாலக்ஸ்
ஒளிரட்டும்...ஓ...அழகைத்
தனித்தொளிரச் செய்யும்
அதன் பாங்கே சிறப்புத் தான்!
காம்ப்டாலக்ஸ், எடுத்துப்பொருத்திடக் கூடிய, எத்தேவைக்கும் ஏற்ற ஸ்பாட்லைட். ஷேடுகளோ, விசேஷ இணைப்புகளோ தேவையில்லை. பொறியைத் தட்டுங்கள். வேண்டிய வெளிச்சம் உடனே பரவட்டும்.
PE-L-4087
PHILIPS
காம்ப்டாலக்ஸ்
எடுத்துப் பொருத்திடலாம், எத்தேவைக்கும் ஏற்ற ஸ்பாட்லைட்
பிலிப்ஸ்

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Sri Lanka

இலங்கையில் விலை 90 சதம் (தபால் செலவு தனி)
மலேசியாவில் விலை (விமானப்பதிப்பு) 75 மலேயக் காசு